இது
# நம்தேசம்

பார்வை 01 | வியூகம் 18 | ஆடி - 2014 | பக்கங்கள் : 24 | விலை ரூபா : 30.00

# மலையகத் தொழிலாளர் திருவிழா



## கறுப்பு யூலை



உள்ளே

பேரினவாதத்தின் வாய்க்குள் அகப்பட்டுள்ள முஸ்லிம்கள் 05

மறக்கமுடியாத கறுப்பு யூலை 14

திருமலை நகர சிங்கள குடியேற்றங்கள் 17

யாழ் நூலகத்திற்கு தீ மூட்டியது யார் 18

தேசத்தின் உண்மைக் குரல்

# மீண்டும் அரசியல் தீர்வுப்பொதி ஆக்கமுயற்சிகள்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுப் பொதி ஒன்றினை உருவாக்கும் முயற்சிகளுக்காக பொது மக்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் அழைப்பு விடுத்திருக்கின்றார். இது அவரது தனிப்பட்ட அழைப்பா? அல்லது கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அழைப்பா? அல்லது இந்தியாவின் தூண்டுதலா? என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை.

அரசியல் தீர்வுப்பொதி உருவாக்கம் தொடர்பாக பொதுமக்களிடம் அபிப்பிராயம் கேட்கும் மரபு தமிழ் அரசியலில் இருந்ததில்லை. தாம் ஒன்றினை தயாரித்துவிட்டு அதனை மக்களிடம் திணிக்கும் மரபே இருந்திருக்கின்றது. வெளிப்படையாக ஒரு அரசியல் தீர்வை முன்வைத்துவிட்டு நடைமுறையில் அதற்கு மாறாக செயற்படும் நிலையும் இருந்திருக்கின்றது. 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழீழத் தீர்மானத்தை எடுத்துவிட்டு 1981ல் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு இறங்கிவந்தனர். 2009ல் சமஷ்டித்தீர்வு ஒன்றினை அரசு அரசாங்கத்திடமும் இந்தியாவிடமும் கையளித்துவிட்டு பின்னர் 13வது திருத்தத்திற்கு கீழிறங்கினர்.

சுரேஸ் பிறேமச்சந்திரன் மக்கள் பங்கேற்புடன் ஒரு தீர்வுப்பொதியினை ஆக்க முயற்சிப்பது வரவேற்கக்கூடியதே. ஆனால் மக்களிடம் அதனை விட்டுவிடுவது சரியான அணுகுமுறையாகத் தெரியவில்லை. இது கீழிருந்து மேல் செல்லுதல் என்ற அணுகுமுறையினை விட மேலிருந்து கீழ்ச் செல்லுதல் அதிகம் பொருத்தமுடையதாக இருக்கும் என்ற கருத்து பலரால் வலியுறுத்தப்படுகின்றது.

அரசியல் தீர்வுப்பொதி உருவாக்கம் என்பது நிபுணத்துவத்துடன் கூடிய ஒரு பணி. சாதாரண மக்களிடம் அதற்கான நிபுணத்துவத்தை எதிர்பார்ப்பது சரியானதல்ல. ஒரு சரியான நிபுணத்துவ குழுவினை உருவாக்கி அதன் மூலம் அரசியல் தீர்வுப்பொதியினை தயாரித்து பின்னர் மக்களின் அபிப்பிராயத்திற்கு விடுவதே அதிக பொருத்தமுடையதாக இருக்கும். மக்களின் அபிப்பிராயங்களுக்கேற்ப பின்னர் பொதியில் திருத்தங்களை மேற்கொள்ளலாம். பொதுவாக சர்வதேச ரீதியாக புதியதேசங்கள் பின்பற்றும் நடைமுறை இதுதான்.

அரசியல் தீர்வுப் பொதி உருவாக்கத்திற்கு முன்னர் என்ன கொள்கையின் அடிப்படையில் உருவாக்குவது என்பது பற்றியும் தீர்மானிக்கவேண்டும். திம்புக் கோட்பாடு இதற்கான வலுவான அடிப்படையை வழங்கியிருக்கின்றது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், வட - கிழக்கு தமிழ் மக்களுடைய பாரம்பரிய பிரதேசங்கள், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்பதே அந்த அடிப்படைக் கோட்பாடுகள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வுப்பொதிக்கான கோட்பாடு சிங்கள தேசத்திற்கும் தமிழ்த் தேசத்திற்கும் இடையிலான ஒரு சமூக ஒப்பந்தமாக இருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றது. நடைமுறை வடிவில் இரு தேசங்கள் ஒரு நாடு என்பதாக இருக்கவேண்டும் என்றும் கூறுகின்றது.

தேசங்களின் இறைமை என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுப்பொதியினை உருவாக்கும் போது அதிகாரஅலகு, சுயநிர்ணயமுடைய அதிகாரங்கள், கூட்டு அதிகாரத்தில் சமத்துவம், அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பன மிகவும் முக்கியம்.

அரசியல் தீர்வுப் பொதியாக்கல் செயற்பாடு என்பது ஒரு நீண்டகாலப் பணி. சுரேஸ் பிறேமச்சந்திரன் விடுக்கும் ஒரு மாதகால அவகாசம் என்பது இதற்கு போதுமானதல்ல. நீண்ட ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் இதற்குத் தேவை.

தமிழ்த்தேசிய சக்திகள் இதற்கான விவாதக்களங்களை உடனடியாக ஆரம்பிப்பது நல்லது.

# முஸ்லிம்களுக்கு பாடம் கற்பிக்க தயார்

முஸ்லிம்களுக்கு பாடம் கற்பிப்பதற்கு சிங்கள மக்கள் தயாராக உள்ளனர் என்று ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் சிங்களவர்களுக்கு எதிரான மிகப்பெரிய கிளர்ச்சி மிக விரைவில் உருவாக்கப்பட உள்ளது. ஜிஹாத் தீவிரவாதத்திற்கு எதிராக போராட சிங்களவர்கள் தயாராக உள்ளனர். நாட்டில் தமிழ் தீவிரவாதிகள் நல்லதொரு பாடத்தினை கற்றுக் கொண்டுள்ளனர். முஸ்லிம்களும் எம்முடன் பாடம் கற்றுக்கொள்ள தயாராகின்றனர். அவர்களுக்கும் பாடம் கற்பித்துக் கொடுக்க சிங்களவர்கள் தயாராக வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



# தொல்லியல் இடங்கள் அறிவிப்பு இன்னோர் ஆக்கிரமிப்பின் ஆரம்பமா?



வட மாகாணத்தின் நான்கு மாவட்டங்களில் உள்ள 21 புராதன தொல்லியல் இடங்கள் தேசிய மரபுரிமைகளாக தேசிய மரபுரிமை அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய யாழ் மாவட்டத்தில் 5 இடங்களும் வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் 2 இடங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 இடங்களும் மன்னார் மாவட்டத்தில் 7 இடங்களும் மொத்தமாக 21 இடங்கள் வர்த்தமானி அறிவித்தலின் படி தேசிய மரபுரிமை சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொல்லியல் இடங்கள் அறிவிப்பு சிங்களக் குடியேற்றங்களுக்கான ஆரம்பமா? என்ற சந்தேகங்களை தமிழ் மக்கள் மத்தியில் கிளப்பியிருக்கின்றது. முன்னரும் இவ்வாறு பல பிரதேசங்கள் தொல்லியல் இடங்கள் எனக்கூறி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாகவே தொல்லியல் இடங்கள் என்பதையும் பேரினவாதிகள் ஆக்கிரமிப்புக்கருவியாக பயன்படுத்தி வருகின்றனர்.

# தமிழரும் முஸ்லிம்களும் இணைந்த அரசியல் சாத்தியமானதா?

சிங்கள தேசத்துடனான முஸ்லிம்களின் இணக்க அரசியல் முடிவிற்கு வந்துவிட்டது. அளுத்கம வன்முறைகள் அதனைத்தான் தெளிவாகக் காட்டுகின்றன. உண்மையில் முள்ளிவாய்க்காலில் தமிழ் இனஅழிப்பு ஏற்பட்டதுடன் முஸ்லிம்களின் இணக்க அரசியலும் முடிவிற்கு வந்துவிட்டது.

தற்போது தமிழர்கள் தோற்கடிப்பு செய்யப்பட்டு இன அழிப்பு செய்யப்பட்ட நிலையில் அதன் அடுத்த கட்டமாக முஸ்லிம் இன அழிப்பினை நோக்கி பேரினவாதம் நகர்கின்றது. இங்கு இன அழிப்பு என்பது வெறுமனவே உயிர்களைக் கொல்வதல்ல. மாறாக ஒரு இனத்திற்கு ஆதாரமாக அதன் தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றை அழிப்பதே.

முஸ்லிம்களை பொறுத்தவரை பேரினவாதத்தின் கண்ணுக்குள் குத்திக் கொண்டிருப்பது அதன் பொருளாதாரமும் அதன் அடையாளத்தை வெளிப்படுத்தும் மதமுமே. இந்த இரண்டு அழிப்பினையும் பேரினவாதம் தற்போது முடுக்கிவிட்டுள்ளது.

போர்க்காலம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு செழிப்புக்காலம். அரசாங்கத்திற்கு முஸ்லிம்களை அரவணைத்துச் செல்லவேண்டிய நிலை இருந்ததினாலும், போட்டி பெரியளவிற்கு இல்லாததினாலும் வர்த்தகம், கல்வி, தொழில் வாய்ப்பு என்பவற்றில் அவர்கள் செழித்தோங்கினர். அதுவும் குறிப்பாக வர்த்தகத்தில் அவர்களது செழிப்பு நிலை அபாரமானது. ஏற்கனவே ஒரு வர்த்தக சமூகமாக அது இருந்ததினால் அந்தத் துறையில் நிபுணத்துவ ஆற்றலும் அதற்கிருந்தது. இந்தச் செழிப்பு நிலைதான் பேரினவாதிகளுக்கு அச்சமூட்டியது. அநாகரிக தர்மபாலா காலத்திலும் இந்த அச்சம் இருந்தது. அது தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. இவ் அச்சம் காரணமாகத்தான் பிரதானமாக பொருளாதார அழிப்பில் பேரினவாதம் அதிக கவனம் செலுத்தி செயற்படுகின்றது.

ஆனால் முஸ்லிம்களை பொறுத்தவரை தற்போதைய செழிப்பு நிலையினை தக்கவைக்க வேண்டுமானால் சிங்கள சமூகத்தின் ஆதரவுதேவை. எனவே பேரினவாதத்தின் காலை கட்டிப்பிடித்தாவது செழிப்பு நிலையினை தக்க வைக்கவே முயற்சிப்பர். இதனால் தமிழர்களுடன் ஒரு இணக்க அரசியலுக்கு வருவது அவர்களுக்கு கடினமாகவே இருக்கும். அதுவும் தென்இலங்கை முஸ்லிம்கள் தமிழர்களுடன் ஒரு இணக்கப்பாட்டு அரசியலுக்கு வருவார்கள் என்பதை நினைத்தே பார்க்கமுடியாது.

கிழக்கு முஸ்லிம்கள் சற்றுச் செறிவான நிலப்பரப்பிற்குள் வாழ்வதனாலும், வர்த்தகத்திற்கு அப்பால் விவசாயமும் கடற்தொழிலும் கூட அவர்களின் பொருளாதார ஆதாரமாக இருப்பதனாலும் அதனைப் பாதுகாப்பதற்காக எதிர்காலத்தில் ஒரு இணக்க அரசியலுக்கு வரக்கூடும். ஆனால் இங்கும் கூட கடந்தகால பகைமைகளைக் கடந்து தமிழ் மக்களுடன் நல்லுறவினைப் பேண இவர்களுக்கு சற்றுக்காலம் எடுக்கும்.

கடந்தகால அரசியலை உடனடியாக முறித்துக்கொண்டு வெளிவருவது ஒரு சமூகத்திற்கு இலகுவாக இருக்காது. முதலில் தமிழ்த் தேசிய வாதத்திற்கு எதிராக கட்டியெழுப்பப்பட்டுள்ள முஸ்லிம் தேசியவாதத்தை பேரினவாதத்திற்கு எதிராக மாற்றவேண்டும். பேரினவாத ஒடுக்குமுறை தொடர்ந்தால் இந்தத் தெரிவைத் தவிர வேறுதெரிவு முஸ்லிம்களுக்கு இருக்காது.

# வியர்வையில் விளைந்த தொழிலாளர் திருவிழா

மலையக மக்களின் கலை, கலாசாரம், காணி, வீட்டுரிமை, மலையகத்தேசியம், தொழிலாளர் உரிமைகள் என்பவற்றை முன்னிறுத்தி மலையக சமூக ஆய்வு மையம், டெல்மார் இந்து மாமன்றம், டெல்மார் அறநெறிப்பாடசாலை என்பவற்றுடன் இணைந்து "வியர்வையில் விளைந்த தொழிலாளர் திருவிழா" நிகழ்வினை ராகலை,டெல்மார் தோட்ட மேற்பிரிவு கோவில் வளாகத்தில் நடாத்தியது.

யூன் மாதம் 12ம் திகதி இடம்பெற்ற இத்திருவிழாவிற்கு அருட்தந்தை மா.சக்திவேல் தலைமை தாங்கினார். தொழிலாளர்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விழாவின் ஆரம்பத்தில் மலையகத் தேசியம், தொழிலாளர் உரிமைகள் என்பவற்றை வலியுறுத்தியும் காவடி, கோலாட்டம், கும்மி போன்ற கலை, கலாச்சார நிகழ்வுகளுடனும் தப்பு வாத்திய இசையுடனும் டெல்மார் தோட்டத்தைச் சுற்றி ஊர்வலம் இடம்பெற்றது. ஊர்வலத்தில் மலையகத் தேசியம், தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மலையகம் ஒளி பெறவேண்டும் என்ற நோக்கில் மலையக முன்னோர்கள் ஏற்கனவே தீப்சுடரினை ஏற்றிவிட்டார்கள். இதனைக் குறிப்பதற்காக தேயிலைச் செடியினால் அலங்கரிக்கப்பட்ட பெரிய தீப்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. அதனை அணையாது பாதுகாப்பது அனைவரினதும் கடமை என்ற வகையில் விழாவில் கலந்து கொண்டவர்கள் அதற்கு எண்ணெய் ஊற்றினர்.



மலையகத்தினை வளப்படுத்துவதற்காக முன்னோர்கள் பலர் உயிர் நீத்தனர். அவர்களை நினைவுபடுத்தும் வகையில் நடுகல் ஒன்றும் நாட்டப்பட்டது. விழாவில் கலந்து கொண்டவர்கள் அந் நினைவுக் கல்லுக்கு தேயிலைக் கொழுந்துகளைத் தூவி அர்ச்சனை செய்தனர்.

தொடர்ந்து மலையகப் பெண்கள் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வது, மதுப் பழக்கம், கட்டாய கருத்தடை என்பவற்றை மையப்படுத்தி வீதி நாடகங்களும் கோலாட்டம், கும்மி, காவடி ஆட்டம், தப்பு இசைத்தல், மலையக நாட்டார் பாடல் பாடுதல், காமன் கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இவ் விழாவில் அருட்தந்தை சக்திவேல், சிவம், பிரபாகரன், பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரியை ரஜினியும் நன்றியுரையை ஆசிரியை தனேஸ்வரியும் வழங்கினர். நிகழ்வு ஏற்பாடுகளை ஆசிரியர் இந்திரச் செல்வன், தபால் ஊழியர் பத்மஸ்ரீ என்போர் மேற்கொண்டனர்.

## நியதிச்சட்ட அங்கீகாரத்திற்கு கால அவகாசம் கேட்கின்றார் ஆளுநர்



வடமாகாண சபை நிதி நியதிச்சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச்சட்டம் என்பவற்றை மாகாணசபையில் நிறைவேற்றுவதற்கு ஆளுநரின் அங்கீகாரத்தை கோரியது. மே மாத இறுதியில் ஆளுநருக்கு அவ் நியதிச்சட்ட மசோதாக்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

யூன் 11ம் திகதி குறிப்பிட்ட சட்டமூலங்கள் இரண்டாம் வாசிப்பிற்கு எடுக்கப்பட இருந்தது. ஆனால் ஆளுநரின் சம்மதம் கிடைக்கவில்லை. தொடர்ந்து ஆளுநருக்கு மேலும் 2 வார கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அந்த அவகாசம் முடிவடைந்த நிலையில் ஆளுநர் மேலும் அவகாசத்தினைக் கேட்டிருக்கின்றார்.

சட்டமாக்கலில் மாகாணசபைகளுக்கு சுயாதீனமான அதிகாரம் கிடையாது. சட்டமா அதிபரின் அனுமதியை ஆளுநர் பெற்றுக் கொடுத்ததன் பின்னரே சட்ட மூலத்தை மாகாணசபையில் நிறைவேற்றலாம் அதன் பின்னரும் கூட ஆளுநர் கையொப்பமிட்டால் தான் நியதிச்சட்டம் அமுலுக்கு வரும்.

நியதிச் சட்ட உருவாக்கத்தில் கூட அதிகாரம் இல்லாத ஒரு மாகாணசபை முறையைத் தான் தமிழ் மக்கள் மீது அரசியற்தீர்வாக சர்வதேச சக்திகளும், இந்தியாவும் திணிக்கப்பார்க்கின்றது.

முத்திரை வரிகைமாற்றல் நியதிச் சட்டம் ஏற்கனவே ஏனைய மாகாண சபைகளில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் காணி கைமாற்றலுக்கான வரிப்பணம் மாகாண சபைக்கு கிடைக்கின்றது. வடமாகாண சபை மக்கள் தற்போதும் மத்திய அரசாங்கத்திற்கே முத்திரை வரியினை கட்டி வருகின்றனர்.

நியதிச் சட்டங்களுக்கு ஆளுநர் சம்மதமளிக்காவிட்டால் மாகாண சபை என்ன செய்யப்போகின்றது? மாகாணசபை உறுப்பினர்கள் பதவி விலகுவார்களா?

## பொதுபல சேனாவை தடை செய்ய முடியாது ஜனாதிபதி தெரிவிப்பு

களுத்துறை மாவட்டம், அளுத்கம வன் முறைகளுக்குக் காரணமான பொதுபலசேனாவை தடைசெய்யவேண்டும் என்றுமுஸ்லிம்அமைச்சர்கள்கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கு ஜனாதிபதி பொதுபல சேனாவை தடைசெய்யமுடியாது என்று கூறியுள்ளார். அவ்வாறு செய்தால் அவர்கள் கதாநாயகர்களாகி விடுவார்கள் என்றும் அடிப்படைவாத அமைப்புக்களை தடைசெய்வதில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் அதன் மூலம் மதங்களுக்கிடையிலான பிரச்சனை முடிந்துவிடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றியம் சிதறுமா?



மே மாத இறுதியில் இடம்பெற்ற ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சிகளும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிரான உணர்வுகளைக் கொண்ட கட்சிகளும் கணிசமாக வெற்றிகளைப் பெற்றுள்ளன. ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகளில் ஆளும் பிரதான கட்சிகளை தீவிர வலதுசாரிக்கட்சிகள் பின்னுக்கு தள்ளியுள்ளன.

தீவிரவலதுசாரி அரசியல்வாதிகளில் குடியேற்றவாசிகளுக்கு எதிரானவர்கள் வெளிநாட்டவர்களில் வெறுப்புக் கொண்டவர்கள், நிற வெறியர்கள், நவநாஜிகள் அதிகமாக உள்ளனர். இவர்கள் ஐரோப்பாவில் நிறவெறியினைத் தூண்டக்கூடும்.

ஐரோப்பிய அரசாங்கங்களின் அரசாங்க செலவினத்தைக் குறைப்பது அரசாங்க ஊழியர்களை பதவி நீக்கம் செய்வது, வேதனத்தில் குறைப்புச் செய்வது போன்ற சிக்கன நடவடிக்கைகளினால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்த அதிருப்திகள் அவர்களை தீவிர வலதுசாரிகள் பக்கம் திருப்பிவிட்டுள்ளது.

தற்போதைய ஐரோப்பிய பாராளுமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவான மத்திய வலது மற்றும் மத்திய இடது கட்சிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. அரைவாசிக்கும் அதிகமான ஆசனங்கள் இக் கட்சிகளிடமே இருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிரான கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டால் செல்வாக்கு செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். இவ் எதிர்ப்புக் கட்சிகளிடையே வேறுபாடுகள் அதிகமாக இருப்பதால் ஒன்றிணைவதற்கான சாத்தியங்கள் குறைவு. எதிர் காலத்தில் நிலைமைகள் மாறலாம்.

இச் சக்திகள் மேல்நிலைக்கு வருமாக இருந்தால் ஐரோப்பிய ஒன்றியம் சிதைவுக்குள்ளானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## வெளியாட்களால் பாதிக்கப்படும் முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள்

முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெறும் வெளியாட்களின் சட்டவிரோத கடலட்டை பிடித்தல் மற்றும் மீன்பிடி காரணமாக உள்ளூர் கடற் தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நல்லதண்ணீர் தொடுவாய் தொடக்கம் கொக்கிளாய் வரையான 84 கிலோமீற்றர் நீளமான கடற்பரப்பில் வெளியாட்கள் சட்டவிரோதமான வகையில் மீன் பிடியில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக மீள்குடியமர்ந்து மீன் பிடியில் ஈடுபடும் உள்ளூர் கடற்தொழிலாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி 18பேர் வைத்தியசாலையில்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுண்ஸ்வீக் தோட்டத்தில் குளவிகொட்டுக்கு இலக்காகிய 18 பேர் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்டத்தில் கொழுந்துபறித்துக் கொண்டிருக்கும் போது தேயிலைச் செடியின் அடிப்பகுதியில் இருந்து கலைந்து வந்த குளவிகளே இவ்வாறு தாக்கியுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 13பேர் வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியதோடு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டங்களில் போதிய பராமரிப்பின்மையே குளவிகள் கூடு கட்டி இருப்பதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

# ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ...



- முத்தர் அம்மான்

சுரேஸ் பிறேமச்சந்திரன் தமிழ்த் தேசியகூட்டமைப்பு சார்பில கேட்ட அரசியல் தீர்வு ஆலாசனைக்கு கிடைச்ச ஆலோசனைகளில கணிசமானவை சுதந்திர தமிழீழம் என்று தான் வந்திருக்காம். கூடப்பேர் எதனைப்பற்றி சொல்லு கினமோ அதை தான் கூட்டமைப்பும் தன்ர ஆலோசனையாக முன்வைக்கிறதுதான் ஜனநாயகம். ஆனால் அவை அப்பிடி செய்யமாட்டினமெண்டு தெரியும். ஏற்கனவே மூவர் அணி மாகாணசபையை பலப்படுத்த கோரி போற வாறவையிட்ட எல்லாம் கெஞ்சிக்கொண்டிருக்கினம். அதை தாண்டி சுரேஸர் தன்னிட்ட வாற தமிழீழ கோரிக்கையினை முன்வைப்பரோ என் பது வரலாற்று பெறுமதி வாய்ந்த கேள்வி பாருங்கோ.

கிளிநொச்சியில அண்மையில தமிழரசு கட்சி நிர்வாகத்தெரிவு நடந்ததாம். பொதுவுக்கு வந்திட்டால் அது தனிநலன் அரசியலாகலாமோவெண்டு கேள்வி பிறக்குது. அவன் காந்தமானவன் நாக்கை புடுங்குற மாதிரி நாலு கேள்வி கேட்டான் பாருங்கோ. அவருக்காக பத்து மாதம் சித்திர வதையோட சிறைவாசம். குடும்பத்திலயொண்டு தியாகிப் போட்டுது. முள்ளிவாய்க்கால் வரை நீண்ட பொடியன். அவனை கூட தெரிவில காய்வெட்டப் பார்த்திருக்கினம். ஏற்கனவே வேழம் மாதிரி நின்ற பொடியன் உங்கடை சங்காத்தமே வேண்டாமெண்டு வீட்டை போட்டான். நின்று பிடிக்கிறவனையும் குப்பை தொட்டியில வீசிறதெண்டால் தியாகங்களிற்கு மதிப்பென்ன.

தென்னிலங்கை முஸ்லிம்கள் மீதான தாக்குதலை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்த நடவடிக்கைகள் நம்பிக்கை தருகுது பாருங்கோ. அதில அவங்கள் ஒற்றுமையாக நடத்தின போராட்டம், அடுத்த நாள் வழிபாட்டு இடம் மீதான கழிவு ஒயில் தாக்குதலை அடுத்து திரண்டு ஆதரவு தெரிவிச்சதெண்டு உறுதி வலுப்பட்டிருக்கிற மாதிரி தெரியுது. நம்பிக்கை தானே வாழ்க்கை. அதில ஆசிரியர் சங்கம் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் சங்கமெண்டு எல்லாத்தரப்பும் இணைச்சு செயற்படத்தொடங்கியிருக்குறது இன்னொரு மைல் கல் பாருங்கோ.

போற போக்கைப்பார்த்தால் வடமாகாணசபையின்ர சாதனையெண்டால் எல்லா உறுப்பினர்களும் ஆளாளுக்கு ஒரு டிஜிற்றல் கமரா வாங்கினதும் புகைப்படகாரர் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கினதும் தான். புல்லுப்புடுங்கப் போனாலும் ஒரு போட்டோ. சனம் பைப்பில தண்ணீர் பிடிக்கேக்கை ஒரு போட்டோ. அதில பைப்பை தூக்கி பிடிச்சுக்கொண்டு ஒரு போஸ். ஏற்கனவே மத்திய தமிழ் அமைச்சருக்கும் இருந்த அதே வியாதிதான். ஆனால் அவற்றை படத்தை பார்க்க ஆள் இல்லாத நிலையினில் அவையளே பேப்பர் தொடங்க வேண்டியிருந்தது. இப்ப இஞ்சால வருத்தம் தொடங்கியிட்டுது. சனம் தான் பாவம். சனத்தை தேர்தலுக்கு பிறகு எட்டிப்பார்க்காததால இப்பிடி படம் வழியே எண்டாலும் பார்க்கட்டும்.

# அமுத வாக்கு



நீதி அமைச்சராக இருந்து கொண்டு ஹக்கீம் நீதியை நிலைநாட்டாது இருப்பது வெட்கக்கேடான விடயம். ஜனாதிப திக்கு காக்கா பிடிப்பவராக மட்டும் அவருள்ளார்.

**அசாத்சாலி**
**மத்திய மாகாணசபை உறுப்பினர்**




அரசியல் ரீதியாக தீர்வு காண்பதற்கு பதிலாக இன அழிப்பின் மூலம் அனைத்தையும் முடிவிற்கு கொண்டுவர இலங்கை அரசு முயற்சிக்கின்றது.

**தா.பாண்டியன**
**மாநில செயலாளர்.**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**



அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கின்றேன் என்பதற்காக அனைத்திற்கும் தலையாட்டிப் பொம்மையாக நான் இருக்கவில்லை. இரண்டு தடவைகள் அமைச்சுப் பதவியை உதறித் தள்ளிய வரலாறு எனக்குள்ளது. அமைச்சரவையில் யாரும் அவ்வாறு செய்வதில்லை.

**ரவூப் ஹக்கீம்**



நாங்கள் முரண்பாடுகளுடனான வெளிநாட்டுக் கொள்கையை எந்த ஒரு நாட்டுடனும் கொண்டிருக்க தேவையில்லை. குறிப்பாக அயல்நாடுகளுடன் பரஸ்பர ஒத்துழைப்பினை பேணுவதாகவும் அர்த்தமுள்ள நம்பிக்கையை கொண்டதாகவும் அது இருக்க வேண்டும்.

**நரேந்திர மோடி**



இனத்துவ அடையாள அரசியல் பரிணாமத்தை முற்றுமுழுதாக அலட்சியம் செய்து அந்தப் பிரச்சனைகளைக் கவனிப்பதே கடந்த ஐந்து வருடங்களிலும் இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையாக இருந்து வந்திருக்கின்றது.

**பேராசிரியர் சுமணஸ்ரீலியனகே**




விளாடிமிர் புட்டின் என்ற பலம் மிக்க சர்வாதிகாரி ரஷ்யாவின் தலைவராக இருக்கின்றார். ஐரோப்பாவின் வலுச் சமநிலையை அவர் புதுப்பித்திருக்கிறார்.

**குமார் டேவிட்**



எழுதுபவர்களில் அநேகர் எப்பொழுதுமே எல்லாவற்றையும் உற்றுப்பார்த்த படியும், கேள்விகள் எழுப்பிய படியும் இருக்கின்றார்கள். எல்லோராலும் வாழ்வை அனுபவிக்க முடியும். ஆனால் கலைகளினூடு தாம் உணர்பவற்றை முன்வைக்கச் சிலராலேயே முடியும். அதிலும் சிலரால் தான் இன்னும் நுட்பமாகவும் ஆழமாகவும் முன்வைக்க முடியும்.

**டிசே தமிழன்.**



இலங்கையிலிருந்து வந்திருக்கின்றோம் என்றவுடன் எங்களை தமிழ் நாட்டில் கேட்கிற முதல் கேள்வி "எப்பிடி அங்க பிரச்சனையெல்லாம்" என்பதாகத் தான் இருக்கிறது. அது இனப்பிரச்சனையை மையப்படுத்தித்தான் கேட்கப்படுகின்றது. அப்படிக் கேட்கப்படும் போது அதில் தங்களது தொப்புள் கொடி உறவாக இருக்கக்கூடிய மலையக மக்கள் பற்றிய கேள்வி அறவே இல்லாமல் இருக்கிறது..

**தெளிவத்தை ஜோசேப்**

# பேரினவாதத்தின் வாய்க்குள் அகப்பட்டுள்ள முஸ்லிம்கள்

பூரணன்

களுத்துறை மாவட்டத்திலுள்ள அளுத்கம, தர்காநகர், பேருவளைப் பகுதிகளில் இரு நாட்களாக முஸ்லீம்கள் பேரினவாதிகளினால் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளனர். ஒருபெண், ஒரு மூன்றுமாதக் குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்டார்கள் என்றே கூறப்படுகின்றது. 100பேர் வரை காயமடைந்துள்ளனர். பல முஸ்லிம் இளைஞர்களை காணவில்லை என்றும் கூறப்படுகின்றது. படையினர் முன்னாலேயே காடையர்கள் முஸ்லிம்களின் கடைகளையும் வீடுகளையும் எரித்திருக்கின்றனர்.

இவ்வளவும் ஊரடங்குச் சட்டம் உள்ளபோதே இடம்பெற்றுள்ளது. உண்மையில் ஊரடங்குச்சட்டம் அமுலில் இல்லாவிட்டால் காடையர்களை தம்மால் சமாளித்திருக்கமுடியும் என முஸ்லீம்கள் பலர் கூறியுள்ளனர். படையினர் முஸ்லீம்களை பாதுகாப்பவர்களாக இருந்திருந்தால் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு தாக்கவந்த காடையர்கள் இறந்திருக்கவேண்டும். மாறாக தற்காப்புநிலை எடுத்த முஸ்லீம்கள் இறந்திருக்கின்றனர்.

இத்தனைக்கும் முஸ்லீம் கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்துடனேயே இருக்கின்றன. பலர் அமைச்சர்களாகவும் உள்ளனர். அதுவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் நீதியமைச்சராக இருந்தும் முஸ்லீம்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

பொதுபலசேனா என்ற இனவாத அமைப்பே இத் தாக்குதலுக்கு பின்னணியில் நின்று செயற்பட்டிருக்கின்றது. இவ் அமைப்பினை அரசாங்கமே வழி நடத்துகின்றது என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சிகளும் அவ்வாறு கூறியிருக்கின்றன.


இவ்வளவு அவலங்கள் இடம்பெற்றும் முஸ்லீம் கட்சிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியவில்லை. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் நீதிஅமைச்சராக தான் இருப்பதற்கு வெட்கப்படுகின்றேன். விரைவில் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுப்போம் எனக்கூறியிருக்கின்றார். ஏனைய கட்சித்தலைவர்களிடமிருந்து வலிமையான கருத்துக்கள் எதுவும் வரவில்லை. அரசாங்கத்தை கண்டிப்பதால் தமது சுகபோகங்கள் இழக்கப்பட்டுவிடும் என அவர்கள் அஞ்சுவது போலத் தெரிகின்றது. காடையர்களின் மூர்க்கமான தாக்குதல்களுக்கு முஸ்லிம் தலைவர்கள் எதுவும் செய்யப்போவதில்லை என்பதும் தூண்டுதல்களை வழங்கியிருக்கலாம்.



இங்கு எழும்கேள்வி முஸ்லிம் சமூகம் அரசாங்கத்துடன் நிற்கின்றபோதும், போரில் தமிழர்களை எதிர்த்து அரசாங்கத்திற்கு சார்பாக நின்றபோதும் ஏன் அவர்கள் தாக்கப்படுகின்றனர்.

இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

அதில் முதலாவதும் பிரதானதுமான காரணம் சிங்களபௌத்த மேலாதிக்கமே. இதனை தொடர்ந்தும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு ஏனைய இனங்களுக்கு எதிராக தொடர்ந்து எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். அரசாங்கம் தற்போது சிங்கள பௌத்த வாக்குவங்கி மட்டும் தனக்கு போதும்எனக்கருதுகின்றது. இதனால் ஏனைய இனங்களின் வாக்குவங்கி பற்றி பெரிதாக அக்கறைப்படுவதில்லை. சிங்கள, பௌத்த கருத்துநிலையின் படி இலங்கைத்தீவு பௌத்தசிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமானது. ஏனையவர்களுக்கு இடமில்லை என்பதே!



இரண்டாவது புலிகளின் தோல்வியாகும். புலிகள் வலிமையாக இருந்தபோது முஸ்லிம்கள் அரசாங்கத்திற்கு தேவைப்பட்டனர். தமிழ் மக்களின் போராட்டத்தை பலவீனப்படுத்தியதில் முஸ்லீம்களுக்கு அதிக பங்கு இருந்தது. குறிப்பாக உளவுப்பணிகளில் படையினருக்கு அவர்கள் உதவியிருந்தனர். இதற்கு பிரதியுபகாரமாக பல சலுகைகளையும் பெற்றனர். இந்த சலுகைகளை நிரந்தரமானது எனவும் நம்பியிருந்தனர்.

> முதலாவதும் பிரதானதுமான காரணம் சிங்களபௌத்த மேலாதிக்கமே. இதனை தொடர்ந்தும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கு ஏனைய இனங்களுக்கு எதிராக தொடர்ந்து எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். அரசாங்கம் தற்போது சிங்கள பௌத்த வாக்குவங்கி மட்டும் தனக்கு போதும்எனக் கருதுகின்றது. இதனால் ஏனைய இனங்களின் வாக்குவங்கி பற்றி பெரிதாக அக்கறைப்படுவதில்லை

முஸ்லிம் ஆய்வாளர் ஒருவர் "சிங்களவரும் தமிழரும் மோதினால் நாங்கள் நீந்துவோம். அவர்கள் ஐக்கியப்பட்டால் நாங்கள் மூழ்குவோம்" என இந்த நிலைப்பாட்டிற்கு விளக்கமளித்தார்.

இன்று தமிழர்களும் சிங்களவர்களும் ஐக்கியப்படவில்லை. மாறாக தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். இத் தோற்கடிப்போடு முஸ்லீம்களும் மூழ்கத் தொடங்கியுள்ளனர். வரலாற்று ரீதியாக பேரினவாத நகர்வுகளை அவதானித்து வருபவர்களுக்கு இது ஒன்றும் அதிசயமல்ல. பேரினவாதம் இப்படித்தான் செயற்படும் என்பது அவர்கள் முன்கூட்டி அறிந்தவையே.

தமிழ் மக்களின் போராட்டம் இலங்கையில் அடக்கப்படும் இனங்களின் ஒரு குறியீட்டு வடிவப்போராட்டம். இதனை முஸ்லீம்கள் அடையாளம் காணத்தவறியமையினால் முஸ்லிம்கள் இன்று துவண்டுபோய் நிற்கின்றனர். அளுத்கமவில் வசிக்கும் முஸ்லிம் நண்பன் பிரபாகரன் தோல்வியடையாமல் இருந்திருந்தால் இந்த அவலங்கள் நடந்திருக்குமா? என நேரடியாகவே கேள்வி எழுப்பினார்.

மூன்றாவது முஸ்லிம் தலைமைகளின் இயலாமையாகும். இந்த இயலாமையை மகிந்தர் அரசாங்கம் நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றது. எதிர்ப்பு அரசியலை முஸ்லிம் கட்சிகளினால் ஒரு போதும் நடாத்தமுடியாது. அவ்வாறு நடாத்த வெளிக்கிட்டால் கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள் வெளியேறி அரசாங்கத்துடன் சேர்ந்துவிடுவர். கட்சி பிளவுபட்டுவிடும் ரவூப்ஹக்கீம் இதனை பலதடவை நேரடியாகவே குறிப்பிட்டிருந்தார். நான் அரசாங்கத்திலிருந்து வெளியேறலாம் ஆனால் நான் மட்டும்தான் கட்சியில் மிஞ்சுவேன் ஏனையோர் அரசாங்கத்துடன் இணைந்துவிடுவர் எனக்குறிப்பிட்டார்.

இன்று முஸ்லிம் அரசியற் கட்சிகளில் எதிர்ப்பு அரசியலைச் செய்யக் கூடிய ஒரேயொரு ஆற்றலுள்ள கட்சி சிறீலங்கா முஸ்லீம்காங்கிரஸ் தான். ஆனால் அதுவும் இயலா நிலையிலேயே உள்ளது. தமிழர் அரசியலில் தமிழ்த்தேசியக் கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்தில் சேர்பவர்கள் சோபிப்பதில்லை அவர்களுடைய அரசியல் வாழ்வே அஸ்தமித்துவிடும். ஆனால் முஸ்லிம் அரசியலில் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகிய அரசாங்கத்தில் சேர்ந்தவர்கள் மீண்டும் சோபிக்கின்றனர். தேர்தலில் வெற்றியடைகின்றனர். அதாவுல்லா, றிசாத் பதியுதீன், அமீர்அலி போன்றவர்கள் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகியபோதும் சோபிப்பினை பெரியளவு இழக்கவில்லை. சலுகை அரசியலை தமது அரசியலாக முஸ்லிம்கள் வரித்துக் கொண்டமைதான் இதற்கு காரணம். முஸ்லிம் அரசியல்வாதிகள் இதனை ஒரு போக்காக வளர்த்து விட்டனர். இன்று அவர்கள் விரும்பினாலும் அதிலிருந்து மீளமுடியா நிலையே உள்ளது.

நான்காவது முஸ்லிம் தேசியவாதம் தமிழ்த்தேசியவாதத்திற்கு எதிராக கட்டியெழுப்பப்பட்டதே தவிர பேரினவாதத்திற்கு எதிராக கட்டியெழுப்பப்படவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை இயக்கங்கள் வளர்ச்சியடைந்து உச்சநிலைக்கு வந்தபோது. முஸ்லிம் தேசியவாதத்தின் பிறப்பாக முஸ்லிம்காங்கிரஸ் தோற்றம் பெற்றது. அக்கட்சி பேரினவாதத்திற்கு எதிராக இதுவரை சுட்டுவிரலைக் கூட அசைக்கவில்லை.தற்போது பேரினவாதம் முஸ்லிம்களுக்கு எதிராக வீறுகொண்டு எழுகின்றபோது எதுவும் செய்யமுடியாமல் திணறுகின்றது.



ஐந்தாவது வட - கிழக்கு முஸ்லிம்கள், தென்னிலங்கை முஸ்லிம்கள் என இரு தரப்பையும் ஒரே அடையாள அரசியலுக்குள் கொண்டுவர முயன்றமையாகும். உண்மையில் மதரீதியாக அவர்கள் ஒரே அடையாளத்திற்குள் உள்ளபோதும் அரசியல் அடையாளத்தைப் பொறுத்தவரை வேறுபட்டவர்கள். வட - கிழக்கு முஸ்லிம்கள் தமிழ் மக்களுடன் இணைந்துவாழ வேண்டியவர்கள். தென் இலங்கை முஸ்லிம்கள் சிங்களமக்களுடன் இணைந்து வாழவேண்டியவர்கள் இந்த அரசியல் அடையாளங்களிற்கேற்ப இரண்டு தலைமைகளை கட்டியெழுப்பி ஒன்றிற்கொன்று உதவியாக இருந்திருக்கலாம். இன்று தமிழர்களுடனும் சிங்களவர்களுடனும் நல்லுறவில்லாத அவலநிலை தோன்றியுள்ளது.

ஈழத்தழிழர்களும், மலையகமக்களும் ஒரே இனமாக உள்ளபோதும் வெவ்வேறுஅரசியல் அடையாளங்களும் வெவ்வேறு தலைமைகளுமேயுள்ளன. இதனால் இரண்டு அரசியல் அடையாளங்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் அரசியலை நகர்த்த முயல்கின்றனர். நெருக்கடியான நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவும் பண்புகளும் உள்ளன. இதில் போதாமை உள்ளது என்பது வேறுகதை.

வடகிழக்கு முஸ்லிம்கள் தமிழ் அரசியலுடன் ஒரு இணக்கப்பாட்டுநிலைக்கு வந்துபோராட்டத்தில் பங்குபற்றியிருந்தால் சுயமான அதிகாரப்பகிர்வு அதற்கும் கிடைத்திருக்கும். இந்த அதிகாரநிலை தென்இலங்கை முஸ்லிம்களை பாதுகாக்கவும் உதவியிருக்கும். இந்த தூரநோக்கு அரசியல் முஸ்லிம் தலைமைகளிடம் இல்லாததினால் எல்லாவற்றையுமே போட்டுடைத்துள்ளனர். தமிழ்த்தேசிய அரசியலை பலவீனப்படுத்தியதோடு தங்கள் அரசியலையும் மிகவும் பலவீனமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

முஸ்லிம் அரசியல் சக்திகள் உடனடியாக தமதுஅரசியலை மீள்வாசிப்பு செய்வது அவசியம். இல்லையேல்பேரினவாதத்தின் வாய்க்குள் அனைத்து ஒடுக்கப்பட்ட இனங்களும் திணிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாக இருக்கும்.

ஊர்சுற்றி

# புற்றுநோய் உடல் முழுக்கப் பரவத்தொடங்கிவிட்டதா?

வடமாகாணசபை செயற்படத்தொடங்கி 7 மாதங்களாகின்றன. முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இப்போதுதான் முதன்முதலாக நெருக்கடிகள் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்றிருக்கின்றார். வடமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களான ரவிகரனும், ஜெகநாதனும் அழைத்ததன் பேரிலேயே அங்கு சென்றதாகக் கூறியிருக்கின்றார். அவர்கள் அழைத்திருக்காவிட்டால் இந்தப்பயணமும் இடம் பெற்றிருக்காது.

கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்றவர்களோ அல்லது அதில் இணைந்துள்ள கட்சிகளின் தலைவர்களான சுரேஷ்பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோரோ செல்லவில்லை. அவர்களுக்கு அழைப்பும் விடுக்கப்படவில்லை.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன், கல்வியமைச்சர் குருகுலராஜா, சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சரின் அதிகாரிகள் என்போர் மட்டுமே சென்றுள்ளனர்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மாவட்டம் முழுவதற்கும் செல்லவில்லை. ஒட்டிசுட்டான், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் பகுதிகளுக்கு மட்டும் சென்றிருக்கிறார். இப்பிரதேசங்கள் முக்கியமானவை என்பது உண்மைதான். எனினும் பேரினவாத ஆக்கிரமிப்புள்ள ஏனைய பகுதிகளுக்கும் சென்றிருக்கவேண்டும். குறிப்பாக நெடுங்கேணி, ஒதியமலை, கென்ற்பாம், டொலர்பாம், சிலோன்தியேட்டர்பாம் போன்ற பகுதிகளுக்கும் சென்றிருக்க வேண்டும். இவை முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட எல்லைப்பகுதிகளில் இருப்பவை. இப்பிரதேசங்களை மையமாக வைத்துத்தான் வெலிஓயா சிங்களப் பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு, பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பிரச்சனைகள் முழுமையாக உள்வாங்கப்படவேண்டும். இது நடைபெறாதது துரதிஷ்டவசமானது.

முதலமைச்சர் குழுவினர் முதலில் ஒட்டிசுட்டான் வாவெட்டிமலைக்குச் சென்றனர். அங்கு பெரும்பான்மை இனத்தவர் இராணுவத்தின் உதவியுடன் கருங்கல் அகழ்வினை பாரிய இயந்திரங்களைக் கொண்டு மேற்கொள்கின்றனர். இதனால் எதிர்காலத் தலைமுறைக்கும் அவசியமான மூலவளங்கள் அள்ளிச்செல்வது மட்டுமல்ல, சூழலியற் பாதிப்பினையும் இக்கருங்கல் அகழ்வு உருவாக்குகின்றது. ஒட்டிசுட்டான் மக்கள் இதன் சூழல் பாதிப்புப்பற்றி விரிவாகக் கூறினர். பாரிய வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுவதால் அயற்கிராம வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுவதாகவும் முறையிட்டனர்.


கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பிரதேசங்களுக்குச் சென்றபோது தமிழ் மக்களின் நிலங்கள் பச்சையாக அபகரிக்கப்படுவது பற்றியும் கடற்பிரதேங்கள் சிங்கள மீனவர்களால் ஆக்கிரமிக்கப்படுவது பற்றியும் மக்கள் எடுத்துக்கூறினர். ஏறத்தாழ 500 சிங்கள மீனவர்கள் கொக்கிளாய்க் கடற்பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளனர். மக்கள் உறுதிகள் வைத்திருக்கின்ற காணிகள் அவை இரத்துச் செய்யப்பட்டு வெளிமாவட்டச் சிங்களவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

கூட்டமைப்பு இதுவரை இந்த விவகாரங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான எவற்றையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டையும் மக்கள் முன்வைத்தனர். இளைஞர்கள் சிலர் முதலமைச்சரிடம் உங்களுக்கு எங்களைப் பார்க்க வருவதற்கே 7 மாதங்கள் தேவையாக இருந்ததா? என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டினர்.

கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த அருட்தந்தை ஜோர்ஜ் பெனான்டோ நாளாந்தம் ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்துள்ளன. நாம் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை இழந்துள்ளோம் எனக்கூறினார். அதிகாரமில்லையெனக் கூறாமல் சிறிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்காவாவது முயற்சியுங்கள் எனக்குறிப்பிட்டார்.

விக்கினேஸ்வரன் சமாளிப்புப் பதில்களைக் குறிப்பிட்டாரே தவிர மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய எவற்றையும் கூறவில்லை.

வடபகுதியில் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் மிகவும் தெளிவானது. தமிழ்த்தேசிய இருப்பிற்கான அடித்தளங்களை கொஞ்சம், கொஞ்சமாக அழித்தொழிப்பதே அவ் வேலைத்திட்டமாகும். தமிழ்த்தேசியத்தின் இருப்பு, நிலம், பொருளாதாரம், மொழி, கலாசாரம் என்ற தூண்களில் தான் தங்கியிருக்கின்றது. அத்தூண்களை ஒவ்வொன்றாக அழிக்கும் முயற்சியே தற்போது நடைபெறுகின்றது. இதற்காக திட்டமிட்ட வேலைத்திட்டங்கள், நீண்டகால நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



எந்தவித கேள்வியும் இல்லாமல் எமது நிலம் ஆக்கிரமிக்கப்படுகிறது. இதற்கு பொதுநிலங்கள் மட்டுமல்ல தனிப்பட்ட உறுதிகள் வைத்திருக்கின்ற நிலங்கள்கூட உள்ளாக்கப்படுகிறது. இன்னும் சிறிது காலம் சென்றால் கிழக்கு மட்டுமல்ல மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களையும் தமிழ்மக்கள் இழந்தவர்களாகிவிடுவர்.

எமது மூலவளங்கள் தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்களவர்களினால் பச்சையாக அபகரிக்கப்படுகிறது. எமது கடல்வளம், எமது கனியவளம், எமது நிலவளம் எதுவுமே இதற்கு விதிவிலக்காக இல்லை. தென்னிலங்கை வர்த்தகர்களின் படையெடுப்பினால் எமது வர்த்தகர்கள் திவாலாகிப் போயுள்ளனர். போர் முடிந்தவுடனேயே போர்க்காலத்தில் பொருளாதார ரீதியாக தமிழ்மக்கள் எப்படித் தாக்குப்பிடித்தார்கள் என்பதைக் கண்டறிந்து அதனை அடியோடு அழிப்பதற்கு ஒரு நிபுணர்குழு வடக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்தக்குழு நிலமும், கடலும், வெளிநாட்டுப்பணமும் தான் தாங்கிப்பிடித்தது என்பதைக் கண்டறிந்தது. இம் மூன்றையும் அழிக்கும் முயற்சியே தற்போது இடம்பெறுகின்றது.

கடலும் நிலமும் நேரடியாக ஆக்கிரமிக்கப்படுகிறது. வெளிநாட்டுப்பணம் வெறும் நுகர்வுக்கலாச்சாரத்திற்காக வீணடிக்கப்படுகிறது. எமது வர்த்தகர்களின் மீள் முதலீட்டிற்கு உதவாமல், தென்னிலங்கை வர்த்தகர்களினாலும், தென்னிலங்கை நிதிநிறுவனங்களினாலும் கொள்ளை அடிக்கப்படுகின்றது.

எமது கலாச்சாரத்தை அழிப்பதற்காக சிங்கள-பௌத்த கலாச்சாரம் திட்டமிட்டு திணிக்கப்படுகிறது. பௌத்தவிகாரைகள், திடீர்திடீரென பல இடங்களிலும் முளைக்கின்றன. இராணுவ நினைவுத் தூபிகள் கண்டகண்ட இடங்களிலெல்லாம் கட்டப்படுகிறது. இவை மிகப்பெரிய சுற்றுலாத் தலங்கள் போல காட்சிப்படுத்தப்படுகிறது. தென்னிலங்கையிலிருந்து நாள்தோறும் இவற்றைத் தரிசிப்பதற்காக சிங்கள மக்கள் படையெடுத்துவருகின்றனர்.

தென்னிலங்கை சுற்றுலா முகவர்களினால் வெளியிடப்பட்ட வடபகுதி சுற்றுலா வரைபடத்தின் 26 மையங்களில் 16 மையங்கள் விகாரைகளாகவும், இராணுவ நினைவுத்தூபிகளாகவும் இருந்தன.

வெசாக் தினத்தில் வடபகுதி எங்கும் வெசாக் கூடுகள் நிரம்பிவழிகின்றன. நாற்றமடிக்கும் புல்லுக்குளங்களும் ஒளியூட்டப்பட்ட வெசாக்கூடுகளினால் நிரம்பி வழிந்தன. யாழ்பல்கலைக்கழகத்தில் குறிப்பாக மருத்துவபீடத்தில் சிறிய இடைவெளிகள்கூட இல்லாது பல்கலைக் கழகம் மூடப்பட்ட நிலையிலும் வெசாக் கூடுகள் தொங்கிவழிந்தன.

எமது மொழியின் நிலைபற்றி சொல்லவே தேவையில்லை. தமிழர்களே அதனை வெறுக்கும் நிலைக்கு காலம் கொண்டு செல்கின்றது. மொத்தத்தில் புற்றுநோய் உடல்முழுக்கப் பரவத்தொடங்கிவிட்டது.

> கூட்டமைப்பு இதுவரை இந்த விவகாரங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான எவற்றையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டையும் மக்கள் முன்வைத்தனர். இளைஞர்கள் சிலர் முதலமைச்சரிடம் உங்களுக்கு எங்களைப் பார்க்க வருவதற்கே 7 மாதங்கள் தேவையாக இருந்ததா? என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டினர்.

இங்கு எழும் கேள்வி தமிழ்த்தரப்பு இதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பதே. தமிழ்த்தரப்பிடம் தற்போது ஆயுதபலம் இல்லை. மக்கள் பலமும், சர்வதேச அபிப்பிராய பலமுமே உள்ளது. அதனை முழுமையாகப் பயன்படுத்த முயலவேண்டும். கூட்டமைப்பு இதுபற்றி ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் மக்களுக்குள்ள கவலை.

இது விடயத்தில் மூன்று வேலைத்திட்டங்களை உடனடியாக நகர்த்தவேண்டும். பச்சை ஆக்கிரமிப்புகளை விஞ்ஞான பூர்வமாக ஆவணப்படுத்துதல், சர்வதேச மட்டத்தில் இதனை பேசுபொருளாக்கல், நிலம்,புலம்,தமிழகம் தழுவிய வகையில் மக்களை இணைத்துப் போராட்டங்களை நடாத்துதல் என்பனவே அம்மூன்றுமாகும். இதற்கு நிலம், புலம், தமிழகம் இணைந்த ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் அவசியமானது.

இப்பணி சற்றுக்கடினமானது என்பது உண்மைதான். அதற்காக இதனைச் செய்யாமல் இருக்கமுடியாது. செய்யாமல் விட்டால் எல்லோரும் சேர்ந்து அழிய வேண்டியதுதான்.

ஆவணப்படுத்தல் வேலைகளுக்கு அரச அலுவலகங்களில் தங்கியிருத்தல் வேண்டும். தமிழ் அரச அலுவலர்கள் தகவல்களைத் தருவதற்கு அச்சப்படலாம். எனினும் பிரதேசசபைகள், கிராமிய அமைப்புக்கள் மூலம் தேவையான தகவல்களைச் சேகரிக்கலாம். நிபுணத்துவ உதவிகளுக்கு யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரின் உதவிகளையும் நாடலாம். ஏற்கனவே சில தனிநபர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் சேகரித்த தகவல்கள் ஆங்காங்கே உள்ளன. பத்திரிகைச் செய்திகளும் உள்ளன. அவற்றை முதலில் சேகரித்து ஒழுங்குபடுத்தினாலே அரைவாசிப் பணி முடிந்துவிடும். மீதியை மேற்கூறிய அரச அலுவலர்கள், பிரதேசசபைகள், கிராமிய அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

(23ஆம் பக்கம் பார்க்க)

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com
www.ithunamthesam.com

## இனநல்லிணக்கமும் இலங்கையும்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பேருவளை அளுத்கம பகுதிகளில் முஸ்லிம் மக்களிற்கு எதிராக பாரியவன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தன. இதில் சிலர் கொல்லப்பட்டதுடன் பெருமளவிலான முஸ்லிம்மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் இருந்த முஸ்லிம்வர்த்தகரிற்கு சொந்தமான "நோலிமிற்" புடவை விற்பனைநிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. முஸ்லிம் பள்ளிவாசல்கள் பலஇடங்தளில் தாக்கப்பட்டன. இதற்குப் பின்புலத்தில் பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபலசேனா இருப்பதாக சொல்லப்படுகின்றது.

எனினும் பொதுபலசேனா அமைப்பின் மீது இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுபலசேனாவினை பின்னணியில் இருந்து இயக்குவது அரசுதான் என்ற குற்றச்சாட்டுக்கள் பலமாக முன்வைக்கப்படுகின்றன.

ஏன் இவ்வாறு முஸ்லிம் மக்கள்தாக்கப்படுகின்றார்கள் என்பதனை நாம் யதார்த்தபூர்வமாகசிந்திக்கவேண்டும். ஐம்பதுகளில் இருந்து எழுபது வரை இலங்கையின் பொருளாதாரம் கல்வி என முக்கியமானஅனைத்துத் துறைகளிலும் தமிழ்மக்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. அதனை எப்படியாவது அழித்தொழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்படன. குறிப்பாக தமிழர்தாயகத்தினை சிங்களமயமாக்கல், தனிச்சிங்களச்சட்டம், தரப்படுத்தல், அவ்வப்போது தமிழ்மக்கள் மீது ஏவிவிடப்பட்ட வன்முறைகள் என்பவற்றினை குறிப்பிடலாம்.

முள்ளிவாய்க்காலுடன் தமிழரின் முதுகெலும்பை முறித்துவிட்டதாகவே பேரினவாத அரசு கருதுகின்றது. தற்போது பௌத்தசிங்கள பேரினவாதத்திற்கு ஆத்திரத்தினை ஊட்டுவதாக அமைந்திருப்பது இலங்கைப் பொருளாதாரத்தில் முஸ்லிம் மக்கள் ஆதிக்கம் செலுத்துவதும் முஸ்லிம் மக்கள் எண்ணிக்கையில் பல்கிப்பெருகிவருவதும்தான். இதனால் தற்போது முஸ்லிம்மக்களின் முதுகெலும்பை முறிப்பதற்கான இரகசியத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ் முஸ்லிம் மக்களினை அழித்தொழிக்கவேண்டும் என்று அரசானது கங்கணம் கட்டிநிற்பதன் நோக்கம் இலங்கைத்தீவை முழுமையாக பௌத்தசிங்கள மயப்படுத்துவதே. பௌத்தசிங்கள பேரினவாதம் அதன் மகாவம்ச கற்பனை உலகில் இருந்து இன்னமும் விடுபடவில்லை.

இந்நிலையில் இனநல்லிணக்கம்பற்றி சர்வதேச சமூகமானது கூறிக் கொண்டிருக்கின்றது. சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் எவையும் இலங்கை அரசை இம்மியளவும் பாதிக்கவில்லை. இலங்கைஅரசானது சர்வதேச சமூகத்தினையும் அதன் நிகழ்ச்சி நிரலையும் நன்றாக புரிந்துவைத்திருக்கின்றது. சர்வதேசசமூகம் இனநல்லிணக்கம், மதசகிப்புத்தன்மை, மனிதஉரிமை என கதைக்கின்றபோதும் அதன் பொருளாதார நன்மைகளுக்கு பாதகமான எந்தநடவடிக்கைகளையும் முடிவுகளையும் எடுப்பது கிடையாது.

எமக்கென்றொரு நிகழ்ச்சிநிரலை முன்னிலைப்படுத்தி நம் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் இந்தியா காப்பாற்றும், அமெரிக்கா காப்பாற்றும், ஐ.நா காப்பாற்றும் எனபிறரை மட்டும் நம்பியிருந்து எந்தவித நன்மையும் எமக்கு ஏற்படப்போவ தில்லை.

இப்போது நாம் கொன்றொழிக்கப்படுகின்றோம் என்ற ஒற்றைக்காரணத்திற்காக உலகின் எந்தசக்தியும் வரப்போவதில்லை. எனவே எமது பாதுகாப்பை நாமே தான் தேடிக்கொள்ளவேண்டும். இதற்கு முதலில் இத்தீவில் எண்ணிக்கையில் குறைவாக வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றுபடவேண்டும். எமதுமக்களின் நலன்சார்ந்து இயங்கக்கூடிய ஒருதலைமை இங்கு உருவாக்கப்படவேண்டும். அதேவேளை வெளித்தலையீடு இன்றி எமக்கு எந்தவொரு தீர்வும் சாத்தியமாகப் போவதுமில்லை என்பதும் யதார்த்தம். எனவே எம்முன் இருக்கக்கூடிய வேலைத்திட்டம் என்பது சுயநலம் மிக்க சர்வதேச சமூகத்தினை எமது நலன்களை பேணக்கூடியவாறு மாற்றிவிடுவதேயாகும்.

அத்தகைய புறச்சூழல் மாற்றத்தினூடாக எமது பாதுகாப்பினை முற்றுமுழுதாக உறுதிப்படுத்தக்கூடிய, எமது உரிமைகளை நாம்பூரணமாக அனுபவிக்கக்கூடிய புதியதொரு அரசியல் அமைப்புப் பொறிமுறை, புதியதொரு சமூக ஒப்பந்தக்கோட்பாடு இங்கு உருவாக்கப்படவேண்டும்.

# தமிழ் அரசியலில் ஒரு திருப்புமுனை

கடந்த கால முஸ்லிம்களின் அரசியற் செயற்பாடு காரணமாக தமிழ் வெகுஜன உளவியல் முஸ்லிம்களுக்கு சார்பானதாக இருக்கவில்லை. தமிழ் அரசியல் சக்திகள் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையினை எதிர்த்து போராட்டங்கள் நடத்திய போது சாதாரண தமிழ் மக்கள் பலரிடமிருந்து "இவர்களுக்கு தேவையில்லாத வேலை" என்ற கருத்தே வெளி



வந்தது. குறிப்பாக முஸ்லிம்களினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட கிழக்கு தமிழ் மக்களிடமிருந்து இக் கருத்து பரவலாக வெளிவந்தது.

கிழக்கில் முஸ்லிம்கள் கடையடைப்பு செய்து ஹர்த்தால் அனுஷ்டித்த போது தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர்களின் கடைகள் திறந்திருந்தன. வாழைச்சேனையில் இவ்வாறு திறந்திருந்த தமிழர் கடையொன்று முஸ்லிம்களினால் தாக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் அரசியற்சக்திகளும், தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் பலவும் சக தேசிய இனத்திற்குரிய பொறுப்புணர்வுடன் இது விடயத்தில் நடந்துகொண்டன. யாழ்ப்பாணத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளன. முஸ்



லிம்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆர்ப்பாட்டத்திற்கு முன்னரே ஊடகவியலாளர் மாநாட்டினை யாழ்ப்பாணத்தில் கூட்டி கட்சியின் வன்மையான கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையினைக் கண்டித்து மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது. பெருந்திரளாக மாணவர்களும் விரிவுரையாளர்களும் அதில் கலந்து கொண்டனர். தமிழ் சிவில் சமூகத்தின் சார்பில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப் கண்டன அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் பலரும் கண்டன அறிக்கைகள் வெளியிட்டிருந்தனர். இதை விட கிழக்கு மாகாணசபையில் முஸ்லிம் காங்கிரஸ் கண்டனத் தீர்மானத்தை கொண்டுவர முனைந்த போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதற்கு ஆதரவினைத் தெரிவித்திருந்தது.

புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். கனடா ரொறன்டோவில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் இடம் பெற்றிருக்கின்றது. லண்டனிலும் இடம்பெற்றதாக செய்திகள் வருகின்றது.

தமிழ் ஊடகங்கள் முழு ஒத்துழைப்பினை வழங்கியுள்ளன. அண்மைய சில நாட்களாக தமிழ் ஊடகங்களில் முழுமையான இடத்தை முஸ்லிம் விவகாரம் பிடித்துள்ளது. வாராந்த பத்திரிகைகளில் இவ் வன்முறைகள் தொடர்பான பல செய்திக்கட்டுரைகளும் ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. மொத்தத்தில் தமிழ் அரசியலில் இதனை ஒரு திருப்புமுனை எனலாம்.

# ஐ.நா விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்குமா?

முத்துக்குமார்



ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விசாரணைக்கென 12 பேர் கொண்ட குழுவை நியமித்திருக்கின்றார். இக் குழுவில் விசாரணையாளர்கள், தடவியல் நிபுணர்கள், பாலினத்துவ நிபுணர்கள், சட்ட ஆலோசகர்கள் என்போர் அங்கம் வகிக்கின்றனர். விசாரணைக்குழுவின் ஆரம்பச் செயற்பாடுகள் இவ் வருடம் யூலை மாதத்தில் ஆரம்பமாகும் என்றும், 2015 மார்ச் மாதமளவில் விசாரணைச் செயற்பாடுகள் முடிவடையும் என்றும் கூறப்படுகின்றது. விசாரணைச் செலவுகளுக்கென 1,192,000 அமெரிக்க டொலர் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை விசாரணைக்குழு என்று சொல்வதிலும் பார்க்க ஆய்வுக்குழு எனக் கூறலாம். முன்னைய ஐ.நா செயலாளர் நாயகம் பான்கிமூனின் நிபுணர்குழு போல இதுவும் ஒரு ஆய்வுக்குழுவாக இருக்கும். ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் சம்பந்தமான விடயங்கள் ஐ.நாவிடம் அறிக்கை வடிவில் இருக்கின்றன. இந்த விசாரணைக்குழுவின் அறிக்கை இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக அமையும்.

இலங்கையில் அரசாங்கம் ஐ.நா விசாரணைக்குழுவினை அனுமதிக்கப்போவதில்லை. இதனால் நேரடிச் சாட்சியங்கள் விசாரணைக்குழுவிற்கு குறைவாகவே இருக்கும். எனினும் மறைமுகமாக கூடியளவு சாட்சியங்களை பெற்று விசாரணைகளை நடாத்தவே அது முயற்சி செய்யும். சர்வதேச மன்னிப்புச்சபை, அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் காப்பகம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் சாட்சியமளிக்க முற்படலாம். போரின் பின்னர் இடம் பெயர்ந்து புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களும் சாட்சியமளிக்க முற்படலாம்.

நிலத்திலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முயற்சி செய்தால் சில சாட்சிய நெறிப்படுத்தல்களைச் செய்யலாம். ஆனால் அதற்கான விருப்பங்களோ செயற்திட்டங்களோ அதனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மாவை தாம் சாட்சியங்களை பெற்று கையளிக்கப் போவதாக கூறியிருந்தாலும் நடைமுறையில் அதற்கான முயற்சிகள் இடம் பெறுவதாகத் தெரியவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் இதற்கான முயற்சிகளைச் செய்யலாம். உண்மையில் இந்தப் பணி நீண்டகாலத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

விசாரணைக்குழு தொடர்பாக அரசாங்கம் தனது பிரதிபலிப்பை தெளிவாகவே வெளிக்காட்டியுள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலேயே இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க இலங்கையில் விசாரணைக்குழுவை அனுமதிக்கப்போவதில்லை என தெளிவாகக் கூறியிருக்கின்றார்.



இதனை விசாரணைக்குழு என்று சொல்வதிலும் பார்க்க ஆய்வுக்குழு எனக்கூறலாம். முன்னைய ஐ.நா செயலாளர் நாயகம் பான்கிமூனின் நிபுணர்குழு போல இதுவும் ஒரு ஆய்வுக்குழுவாக இருக்கும்.

அரசாங்கம் தன்னுடைய தீர்மானத்திற்கு மக்கள் அந்தஸ்தினைக் கொடுத்து தப்பிவிட முயற்சிக்கின்றது. இதற்காகத் தான் ஐ.நா. விசாரணைக்குழுவை அனுமதிப்பதா? இல்லையா? எனத் தீர்மானம் எடுக்கும் பொறுப்பினை பாராளுமன்றத்திடம் விட்டிருந்தது.

போர் தொடர்பான மனித உரிமை மீறல்கள் தற்போதைய அரசாங்கம் தொடர்பான குற்றச்சாட்டாக இல்லாமல் அரசு தொடர்பான குற்றச்சாட்டாகவே மகிந்தர் அரசாங்கம் மாற்ற விரும்புகின்றது. போர் அரசினை பாதுகாப்பதற்காக நடாத்தப்பட்டதனால் போர் தொடர்பான குற்றச்சாட்டுகளையும் அரசிற்கு எதிரான குற்றச்சாட்டுகளாகவே பார்க்கவேண்டும் என அரசாங்கம் வாதிடுகின்றது.

ஜே.வி.பி ஆதரவு வழங்குவதற்கு சில நிபந்தனைகளை விதித்தது. சுயாதீனமான உள்ளக விசாரணையை உடனடியாக நடாத்த முன்வரவேண்டும். விசாரணைக்குழு உடனடியாக உருவாக்கப்பட்டு அறிக்கை 6 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படுதல் வேண்டும். யுத்த குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படல் வேண்டும். ஜனநாயக முறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை ஆயுதங்கள் மூலம் ஒடுக்கியமை தொடர்பாக விசாரிக்கப்பட்டு அறிக்கை மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தொடர்பாகவும் இவ்விசாரணை நடாத்தப்படல் வேண்டும். கைதிகளின் மீதான தாக்குதல் தொடர்பாகவும் விசாரணை நடாத்தப்படல் வேண்டும் என்பனவே அவ் நிபந்தனைகளாகும்.

அரசாங்கம் எதிர்க்கட்சிகளை விலக முடியா பொறிக்குள் மாட்ட முயற்சிக்க, ஜே.வி.பி அரசாங்கத்தை பொறிக்குள் மாட்ட முயற்சித்தது. அரசாங்கம் ஜே.வி.பி.யின் நிபந்தனைகள் எவற்றையும் நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஜே.வி.பி தமது நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைச் சாட்டாக வைத்து வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தாலும் வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது. தேர்தல்கள் வர இருப்பதால் சிங்கள வெகுஜன உளவியலுக்கு மாறாக நடந்து கொள்ள அவை தயாராகவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டுமே எதிராக வாக்களித்தது. முஸ்லிம் காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. மலையக கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

இங்கு எழும் கேள்வி இந்தியா இந்த விசாரணையை எப்படிப் பார்க்கும்? ஒத்துழைக்குமா? இந்திய கொள்கை வகுப்பாளர்களை பொறுத்தவரை இந்த விசாரணையை அவர்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதில் முதலாவது போரில் இந்தியாவிற்கும் பங்கு இருக்கின்றது. சிவசங்கர்மேனன், நாராயணன் போன்றோர் நேரடி ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர். விசாரணை இடம்பெற்றால் இந்தியாவின் பங்களிப்பு ஆவண ரீதியாக வெளியில் வரும். இது இந்திய அரசாங்கத்திற்கு தமிழ் நாட்டு மட்டத்திலிருந்தும் ஏனைய மட்டங்களிலிருந்தும் பலத்த நெருக்கடிகளை உருவாக்கும்.

இரண்டாவது இந்தியா உள்நாட்டு தேசிய இன விவகாரங்களில் இலங்கையை விட மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தது. தற்போதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அசாம், மணிப்பூர், நாகலாந்து, காஷ்மீர், பஞ்சாப் ஆகிய இடங்களில் இது அதிகளவில் இடம்பெற்றுள்ளது. மாவோஜிஸ்டுகள் செல்வாக்குள்ள பிரதேசங்களில் பழங்குடிகள் மத்தியிலும் இடம்பெற்றுள்ளது. இதனை ஆதரித்தால் நாளை இந்தியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் விசாரணை செய்யும்படி கோரிக்கைகள் வரும். அதனை இந்தியா விரும்பவில்லை.

மூன்றாவது இலங்கையைப் பாதுகாப்பதாகும். தனது செல்வாக்கு மண்டலத்திற்குள் இலங்கை இருக்கவேண்டும் என்பதற்காக இது விடயத்தில் இலங்கைக்கு சார்பாகவே நிற்க முயற்சிக்கும். இதன் அடிப்படையில் தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ஜெனிவாவில் நடுநிலை வகித்தது. இதை விட விசாரணை என்பதற்கூடாக மேற்கின் அதிகரித்த தலையீடு வருவதையும் இந்தியா விரும்பவில்லை. இலங்கைத் தீவு தனது தலையீட்டிற்கு மட்டும் உரியது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

மேற்கூறிய நிலைப்பாடுகள் எல்லாம் காங்கிரஸ் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் என்பதும் உண்மைதான். மோடி அரசாங்கம் என்ன நிலைப்பாடு எடுக்கும் என்பது இங்கு எழும் இன்னோர் கேள்வி. பெரிய நாடுகளைப் பொறுத்தவரை வெளிவிவகாரக் கொள்கைகளில் புதிய அரசாங்கம் அதிக மாற்றங்களைச் செய்வதில்லை. வெளிவிவகார உறவுகளை சடுதியாக மாற்றுவது நாட்டிற்கு தீங்கினை கொண்டுவரும் என்பதே இதற்கு பின்னாலுள்ள காரணம். இதைவிட வெளி உறவுக்கொள்கை தீர்மானத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் அரசியல் தலைவர்களைவிட அதிகாரிகள் அதிக பங்கெடுப்பதும் இம்மாற்றமின்மைக்கு ஒரு காரணம். எனவே உடனடியாக பண்பு ரீதியான மாற்றத்தை எதிர்பார்ப்பது கடினம். ஆனால் தலைமையின் இயல்புக் கேற்ப அளவு ரீதியான மாற்றங்கள் இடம் பெறலாம்.

மோடியை பொறுத்தவரை காங்கிரஸ் அரசாங்கம் போல சென்னையை முழுமையாக புறக்கணிக்கத் தயாராக இல்லை. தமிழ் நாட்டில் வளர்ந்துவரும் தமது அரசியற்தளம் பலவீனப்பட்டுப் போகும் என்பதற்கு அப்பால் புவிசார் அரசியல் முக்கியத்துவம் தமிழ் நாட்டிற்கும் இருப்பதால் அதனைத் தனிமைப்படுத்தவும் விரும்பவில்லை.

மோடி அரசாங்கத்தினால் இலங்கையையும் எதிராளியாக்க முடியாது. தமிழ் நாட்டையும் எதிராளியாக்க முடியாது. எனவே கொழும்புக்கும் சென்னைக்குமிடையே ஒரு சமநிலைப்படுத்தலைக் கொண்டுவரவே அது முயற்சிக்கும். அந்த சமநிலைப்படுத்தலுக்காக 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி அது வற்புறுத்தும். அதே வேளை சீனாவிலிருந்து அதிகம் விலகும் படியும் வற்புறுத்தும். இந்த வற்புறுத்தலுக்கு இலங்கையின் பிரதிபலிப்புக் கேற்பவே இந்தியாவின் அணுகுமுறையும் இருக்கும், தற்போதைக்கு நடுநிலை வகிப்பதற்கான வாய்ப்பே அதிகம் உண்டு.

வணக்கம் வணக்கம் வணக்கம் வணக்கம் நான் கல்வயல் கனகசிங்கம். எப்பிடி உங்கடபாடு ஏதோ இங்கால பக்கம் இழுத்துக்கொண்டுபோகுது.

அடுத்துவருது ஜனாதிபதி தேர்தலோ, நாடாளுமன்ற தேர்தலோவெண்டு ஆளாளுக்கு இப்ப ஆராய்ந்து கொண்டிருக்கினம். அதிலயும் மீண்டும் எப்படியேனும் தேர்தலில வென்று மக்களுக்கு தொடர்ந்தும் சேவையாற்ற வேணு மெண்டு கூட்டமைப்பு எம்பிமார் ஆளாய் ப்பறக்கினம். எப்படி வெட்டி ஆடினால் வெற்றி நிச்சயமெண்டு அவையள் ஆளாளுக்கு கூட்டுச்சேர்ந்து கணக்குப்பார்த்து கொண்டி ருக்கினம்.

இந்த பந்தியை எழுதிக்கொண்டிருக்கேக்க மனசு கனத்துப் போறமாதிரி தகவல் ஒன்று வந்திருக்குது. ஒரு 16 வயதேயான பாடசாலை மாணவன் வறுமை காரணமாக தூக்குப் போட்டு தற்கொலை செய்திருக் கிறானாம். அப்பா இராணு வத்தின்ர புனர்வாழ்வு



நையாண்டி கல்வயல் கனகசிங்கம்

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

முகாமில கைதி வாழ்க்கை.

முன்னாள் போராளியான அம்மாவோட, அந்த ஓலைக் கொட்டகைக்குள்ள அகதிவாழ் க்கை. கூடவே தம்பி, தங்கை, சாப்பிடாத நாட்களை கணக்கெடுத்ததை விட சாப்பிட்ட நாட்களை கணக்கெடுக்கிறது ரொம்பவே இலகுவானது. வறுமை, அநாதரவு நிலை கடைசியில தற்கொலையில முடிஞ்சிருக்கு.

உங்கடை குடும்பங்கள் வெளிநாட்டில கிழமைக்கு ஒரு நாட்டுக்கு இன்பசுற்றுலா, பொல்லுப்பிடிக்கிற நேரத்தில, கதிரை பிடிக்க ஒரு கும்பல் கணக்குப்பார்க்குது. அவரை வெட்டு இவரை கூட்டுச்சேர் எண்டு கணக்குவழக்கு இரவுபகலாக நடக்கிறது. இஞ்சால 16 வயது மொட்டுக்கள் பூக்காமலே சருகாகி விழுந்துவிடுகிறது பார்த்துக்கொண்டு பேசாமலிருக்க முடியவில்லை. இதுக்கால இந்தளவு தியாகங்கள் வாற ஆத்திரத்திற்கு துலைக்கவேணும்போல இருக்குது பாருங்கோ.

கூட்டமைப்பு தேசியப்பட்டியல்காரர் இந்தமுறை வடமராட்சியில களம் இறங்கப் போறதாக அறிவிச்சிருக்கிறார். அதுவும் சிங்கக்கொடி காத்தவீரன் இந்தமுறை தேர்தலில நிண்டால் சனத்தின்ர கல்லடியைதான் வாங்கவேண்டியிருக்குமெண்டு சொல்லிக் கொண்டுதிரியிறார். அதனால நான் தேசியப் பட்டியலில போகப்போறனெண்டு சொல்லிப் போட்டாராம். அதனால்தான் இப்போதைய தேசியப்பட்டியல்காரன் களமிறங்க தயாரா கியிட்டாராம்.

ஆனால் அவரோட கூடத் திரிஞ்சால் தங்க ளையும் சனம் நிராகரிச்சுப் போடுமெண்டு ஒருத்தரும் கிட்டக்கூட போகமாட்டமெண்டு நிக்கிறாங்களாம். கூடித்திரிஞ்ச பொடியளும் துண்டைக்காணோமெண்டு தப்பிச்சு ஓடுறாங் காளண்டு கேள்வி.

சேனாதிபதி யாரோ வாக்காளர்களைப் பதியுங்கோவெண்டு நாக்குத்தள்ள கத்திக் கொண்டு திரியிறார். காணாமல் போனவை, கொல்லப்பட்டவை, அங்கவீனமுற்றவை தொடர்பான விபரங்களை திரட்டுங்கோ. அதுகளுக்கு வாழ்வாதார உதவிகள் எதனையும் செய்யுங்கோவெண்டால் மூச்சுப்பேச்சில்லை. பழையபடி கதிரை சுகம்தான் தேடுகினம் பாருங்கோ அதிலயும் அனந்தியை களமிறக் கினால் விருப்புவாக்கில அவள் பிள்ளை முன்னுக்கு வந்திடுவாள் எண்ட பயமும் ஒரு பக்கம் எலலோருக்கும் கிடக்குதாம்.

ஒருபக்கம் கூட்டமைப்பின்ர வசமிருக்கின்ற உள்ளூராட்சி சபைகள் படுகிறபாட்டைப் பார்த்து, புள்ளடிபோட்ட சனமே தலையில அடிச்சுக்கொள்ளுது. ஆளாளை பற்றி அள்ளி சேறுபூசுகிறதும், கவிழ்த்து விழுத்துறதும் தான் அவையளுக்கு முழு நேரத்தொழிலாக இருக்கிறது. அதுக்குள்ளையும் அவற்றைஅணி, இவற்றைஅணியெண்டு கோஷ்டிகள் வேற இருக்குதாம் கதிரைகளால தள்ளி விழ்த் தப்பட்ட பலதலைவர்கள் தமிழரசுக் கட்சியை சேராதவையெண்டு அவையளின்ர உள்வீட்டு தகவல்கள் அடிபடுகுதுகள்.

ஒருபக்கம் வடமராட்சி கிழக்கில தொட ருகின்ற மணல் அகழ்வால, கடல் நீர் உள்ளுக்குள்ள வரப்போகுதெண்டு எல்லோரும் கத்துகினம். மாகாணசபையில தீர்மானமும் கொண்டுவருகினம். இன்னொருபக்கம் கூட்டமைப்பு வசமிருக்கின்ற பருத் தித்துறை பிரதேசசபை மண் அள்ள பச்சைக்கொடி காட்டுகின்றது. அவன் தகப்பன் சொல்லை தட்டாமல் நடக்கிற நல்ல பொடியனாம். இடையில மேசைக்கு கீழால டீலிங்குகள் நடக்கிற தாக அவையளின்ர கட்சிகாரரே போட்டுக் கொடுக்கினம். சனத்திற்கோ தலைவிறைச்சுப் போய்க்கிடக்குது.

இஞ்சால ஆகோ,ஒகோ எண்டு அள்ளிப் போட்டுத் தெரிவுசெஞ்ச மாகாணசபை சீவன் போறது மாதிரி மூச்சிருக்குது. பெஞ்சன் காலத்தில கதிரையில ஓய்வெடுக் கலாமெண்டால் விடுகிறாங்களே அதிலயும் சனத்துக்கு இவை சேவை செய்து கிழிக்க குளி ரூட்டப்பட்ட வாகனங்கள் தேவையெண்டு அவசரமாகக் கொள்வனவு செய்யினம். அதுவும் சனத்திற்கு உதவிசெய்ய ஒதுக்கின நிதியாம் இன்னொரு கோஷ்டியோ இந்திய தூதுவராலய வாசலில கார் வருகுதெண்டு காத்துக்கொண்டிருக்குதாம்.

வடமாகாணசபையில அமைச்சர்மாரும், உறுப்பினர்களும் செய்த பெரியசாதனை ஆளா ளுக்கொரு கமரா வாங்கினதும் அதில படமெடுக்க அரச சம்பளத்தில ஒரு ஆள நியமிச்சது மட்டும் தான் புல்லுப்புடுங்கேக் குலையும் ஒருபடம், வவுசரில கொடுக்கிற தண்ணீர் பப்பை பிடிச்சக் கொண்டு ஒருபடம், அட ஒரு கிலோகரட் சந்யையில பத்து. ரூபாவிற்கு விற்க ஏலாமல் விவசாயிகள் கழுத்தில கயிறு போடுகிற நிலை.

தங்கட அமைச்சுக்களில ஒன்றும் இல்லை என்று அவங்களுக்குத் தெரியும். ஆனால் ஏதோ இருக்கிற மாதிரி பெரிய சீன் காட்டி அடுத்த பெரிய கதிரைக்கு இப்பவே பதிவு செய்யினம் இவ்வளவு தான் நடக்குது அதற்கு காட்டிற பிலிம் தான் பாருங்கோ அவயளின்ர பயணங்கள்.

மாகாணசபை பொறுப்பேற்று ஆறு மாதங் கள் ஆயிற்று இவை செய்து கிழிச்ச சாதனை என்ன என்று ஒன்றைச் சொல்லட்டும் பார்ப்பம் அதற்கு பிறகு இவையள் போஸ் குடுக்கட்டும். கேட்கிறவன் கேணையனெண்டால் எருமை மாடு ஏரோப்பிளேன் ஓடும் என்று சொல் லுவாங்கள் பாருங்கோ

நன்றி

# நையாண்டியார் பதில்கள்

சதுஸ்யந்தினி,
உடுவில், மானிப்பாய்

**கேள்வி :-** தெற்கினில் முஸ்லீம்கள் மீது கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள வன்முறை பற்றி?

**பதில் :-** 65 வருடகால தமிழின அழிப்பின் அடுத்த கட்டம். இலங்கை தனி சிங்களவர்கள் வாழும், பௌத்தநாடு எனும் அடையாளத்தை தோற் றுவிக்க அரங்கேற்றப்படும் திட்டம் அதிலும் இனவாதத்தை தூண்டி மீண்டும் அரியாசனை ஏறும் அரசர்களது கனவுகளும் உண்டு.

க.பிரதீபன்
பத்தமேனி, அச்சுவேலி

**கேள்வி :-** வடமாகாண சபையின் அமைச்சரவை என்ன செய்கின்றது?

**பதில் :-** எதையும் செய்யவில்லையென்பது பகிரங் கமாகவே தெரிகின்றது. ஒரிருவருக்கு அடுத்த பாராளுமன்ற தேர்தல் கனவு இருக்கிறது. அதனால் நாள்தோறும் தங்கள் புகைப்படங் களை ஊடகங்களினில் வரக்கூடியதாக பார்த் துக்கொள்கின்றார்கள். நான் அறிந்த வரையில் உணர்வுள்ள ஒரு அமைச்சர் சலித்துபோய் வீட்டிற்குப் போவது பற்றி பேசிகொண்டிருப்ப தாகவும் கேள்வி.

க.தேவராசன்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி

**கேள்வி :-** உண்மையில் இரணைமடு குள குடிநீர் விநியோகத்திட்டம் எந் நிலையில் இருக்கின்றது?

**பதில் :-** தற்போது ஆளாளுக்கு சுயநல அரசியல் வியாபாரம் பார்க்கத்தொடங்கி நட்டாற்றினில் நிற்கின்றது. மூன்றாவது தடவையாக இரணை மடு குள புனரமைப்புக்கென வந்த நிதி திரும் புவதாக கேள்வி அதிலும் பிரேரணையினை நிறைவேற்றாமலேயே வடமாகாண சபையில் ஒருசிலர் ஆடிய நாடகம் அதைவிட மிக மோச மான முன்னுதாரணம்.

க.மார்க் அந்தனி, மடு, மன்னார்

**கேள்வி –** போப் ஆண்டவரின் இலங்கைவிஜயம் பற்றி?

**பதில் :-** இலங்கை வாழ் கத்தோலிக்கர்கள் அனைவரிற்கும் இனம் கடந்த மகிழ்ச்சியான தருணம் ஆனால் அதற்குள்ளும் இனவாதத்தை புகுத்த தெற்கு முயல்கின்றது. வடக்கிற்கு வருகை தாராது தடுத்துவிட முயற்சிகள் தொடர்வதாக கேள்வி

த.வினோதன்,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்

**கேள்வி :-** மாதகல் கடற்பரப்பினூடாக கடத்தப்பட்ட பெருமளவு கஞ்சா அகப்பட்டுள்ளதே?


**பதில் :-** இலங்கைக்கான போதைப்பொருள் கடத்தல், மன்னார் வழியினூடாகவே நடை பெற்றுவந்திருந்தது. எனினும் இங்கு ஏற்பட் டுள்ள நெருக்கடி நிலையினையடுத்து யாழ்ப் பாணத்திற்கு விநியோகபாதை மாறியுள்ளது. இதன் பின்னணியிலுள்ள பெரியதலைகள் பற்றி எவரும் மூச்சுவிடுவதேயில்லை.

ந.சுப்பிரமணியம், பூந்தோட்டம், வவுனியா

**கேள்வி:–** இலங்கை ஜனாதிபதிக்கு சமாதான விருது வழங்கி கௌரவித்திருக்கின்றதே பொலிவியா?

**பதில்:–** பல நகைச்சுவை சம்பவங்கள் சத்தமின்றி நடந்துவிடுகின்றன. இவ்வாண்டின் சிறந்த நகைச்சுவைகளுள் இதுவும் ஒன்றாகும். பொலி வியாவில் அவர் விருது வாங்கிக்கொண்டிருந்த அதேவேளை தென்னிலங்கையினில் சிறு பான்மை முஸ்லீம்கள் மீது இனவன்முறை, அரச ஆசீர்வாதத்துடன் அரங்கேற்றப்பட்டுக் கொண்டி ருந்தது.

# இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து முழுமையாக விடுபடாத வளலாய்



■ மு.கஜன்

ஈழத்தின் தலையாய் விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் கிழக்குப் பகுதியில் தொல்காப்பியம் கூறும் நால்வகை நிலங்களில் வயலும் வயல்சார்ந்த மருதநிலப் பண்புகளை மையமாகக்கொண்டதே வளலாய் கிராமம். ஆரம்பகாலத்தில் நீர்ப்பாசனம், கோவில்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் என சிறந்த வகையில் நிர்வகித்த வரலாற்றுப் பெருமை இக்கிராமத்திற்கு உண்டு. சோழர்களின் ஆட்சி நிர்வாகம் இங்கு நடைபெற்றமைக்கான சான்றுகள் உண்டு. அதாவது சோழரை வளவர் என்று அழைப்பதாலேயே அவர்களின் குடியிருப்பு வளலாய் எனப் பெயர் பெற்றது என்ற வரலாற்று பெருமையை சேர்க்கிறது. ஆனால் இன்று இக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் பல துன்பதுயரங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுடைய நிலங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. அங்குள்ள பல மக்களுடன் கலந்துரையாடிய போது தமது துன்பதுயரங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்தில் வலிகிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தை மையமாக கொண்டு J/284 கிராம சேவையாளர் பிரிவை உடையது வளலாய். வடக்கே கடலும் கடல் சார்ந்த இடமாகப் பாக்கு நீரிணையையும் கிழக்கே இடைக்காட்டு கிராமத்தையும்தெற்கேபத்தமேனியையும் மேற்கே பலாலியையும் எல்லையாக கொண்டுள்ளது. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவையுடைய 600 குடும்பங்களை உள்ளடக்கிய நெய்தல் காற்றுடன் மருத நில மண்வாசனையுடன் அழகுற்ற கிராமம் வளலாய்.

> **குருகுலராஜா இரண்டாம் தவணையில் இப் பாடசாலை திறக்கப்படும் என உத்தரவாதம் அளித்திருந்தார். ஆனால் இன்னமும் அது இடம்பெறவில்லை.**

யுத்த காலத்திற்கு முன் கடல்வளமும் மண்வளமும் நிறைந்து சீரும் சிறப்புடனும் திகழ்ந்தது. ஆனால் இன்று இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாக விடுவிக்கப்படாமல் அம்மக்களின் நிலங்கள் உள்ளன. வளலாய் மேற்கின் ஒரு பகுதி 2011ம் ஆண்டு விடுவிக்கப்பட்டது. வளலாய் மேற்கின் மற்றைய பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

இங்கு 100 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த பாடசாலையாக அமெரிக்கன் மிசன் பாடசாலை விளங்குகின்றது. இப் பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரம் வரை கல்விச் செயற்பாடுகள் இடம் பெற்றன. ஆனால் 1996ம் ஆண்டுக்கு பிறகு இடம்பெயர்வு காரணமாக இயங்கவே இல்லை. இங்குள்ள மாணவர்கள் பாடசாலை இல்லாமையால் அயல் கிராமங்களிலேயே கல்விசார் செயற்பாடுகளை தொடருகின்றனர்.

வளலாய் மக்கள் பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பாக கோட்டக்கல்வி பணிப்பாளர், மாகாணக்கல்வி பணிப்பாளர், அமைச்சர் போன்றவர்களுக்கு கடிதங்களும் அனுப்பியுள்ளனர். இம் மக்கள் இவ்வருடம் 1ம் தவணை காலப்பகுதியில் வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜாவினை அங்குள்ள பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடத்தில் ஏற்பாடு செய்த கூட்டத்தில் சந்தித்து கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வேண்டிக் கொண்டனர். அவ் வேளையில் குருகுலராஜா இரண்டாம் தவணையில் இப் பாடசாலை திறக்கப்படும் என உத்தரவாதம் அளித்திருந்தார். ஆனால் இன்னமும் அது இடம்பெறவில்லை.

பாடசாலை மீள்திறப்பு தொடர்பான தகவலை திரட்டுமாறு மாகாணக்கல்வி பணிப்பாளரினால் கோட்டக்கல்வி பணிப்பாளருக்கு கோரப்பட்டதை அடுத்து தகவலும் அனுப்பப்பட்டது. அந்த தகவலில் 91மாணவர்கள் தற்சமயம் உள்ளதாகவும் தரம்01 - 05 வரையிலும் 57 மாணவர்கள் சேரவாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர் வடமாகாண கல்வி அமைச்சரிடம் தமது பாடசாலையினை தரம் 1 - 5 வரையாவது திறந்து தருமாறு வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆனால் இன்னும் நிறைவேறவில்லை. இங்குள்ள மாணவர்கள் 2கி.மீ, 3கி.மீ தாண்டியே ஆரம்ப பாடசாலைக்கு செல்லவேண்டிய நிலையில் உள்ளனர்.

இவர்களுடைய கிராமம் கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலமும், வயலும் வயல்சார்ந்த மருத நிலமுமாக காணப்படுவதால் அவ் நிலம் சார்ந்த தொழில்களாக கடற்தொழிலையும் விவசாயத்தையும் சீவனோபாயமாக கொண்டுள்ளனர். இங்கு வாழ்ந்த விவசாயிகள் பிரதான வாழ்வாதாரம் வெங்காயம் மிளகாய் போன்ற பணப்பயிர்களையும், பயறு, உழுந்து, எள் போன்ற சிறு உணவுப்பயிர்களையும் உற்பத்தி செய்கின்றனர். இராணுவம் இவர்களுடைய நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருப்பதனால் இவர்களின் கடற்தொழில் முழுமையாக பாதிப்படைந்துள்ளது. விடுவிக்கப்பட்ட மக்கள் விவசாயத்தை மட்டும் செய்து வருகின்றனர். எனினும் நீர்ப்பாசனம் சீர் இன்மையால் இவர்களினால் சிறப்பாக மேற்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது.



வலிகிழக்கு பிரதேசசபை (கோப்பாய்) எல்லைக்குள் ஐந்து ஏக்கர் பரப்பளவில் காணப்படும் நீண்டு வளைந்த குளம் வளலாய்பெரியகுளம்ஆகும். இதற்கானநீர் வருகின்ற வாய்க்கால்கள் சீர் செய்யப்படாத நிலையில் காணப்படுவதனால் நீர் தேக்கம் குறைந்துள்ளது. இவர்கள் யுத்தத்துக்கு முன்னைய காலப்பகுதியில் தினமும் மீன், விவசாய பொருள்களை 05 லொறிக்கு மேல் ஏற்றுமதி செய்ததாகவும் தாம் உறவினர் வீடுகளுக்கு செல்லும் போதெல்லாம் அவர்களுக்கு இவ் உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கிவந்தனர் என்றும் கூறுகின்றனர். இப்போது உரிமையோடு உண்பதற்கு உணவின்றியே உறவினர்கள் வீடுகளிலேயே தங்கி வாழ்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இங்கு போக்குவரத்து வசதி மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பாடசாலைசேவை ஒன்றும் மிகுதி நேரத்தில் மேலதிக பேருந்து வசதிகள் குறைவாகவே காணப்படுகிறது. இங்குள்ள சிறிய வீதிகள் திருத்தப்படாமல் காணப்படுவதால் விவசாய பொருள்களை கொண்டு செல்லக்கூடிய வகையில் சிறு வீதிகள் இல்லை.

வளலாய் மேற்குக்கு மின்சாரமே இல்லை என சுட்டிக்காட்டினர். மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் எல்லைக்கிராமமான பலாலி பற்றைக் காடுகளுடன் காணப்படுவதால் விசஊர்வனவின் நடமாட்டம் மிக அதிகமாகவே இருக்கின்றது எனவும் இதனால் மிகவும் அச்சத்துடன் வாழ்வதாகவும் தெரிவித்தனர். மேலும் தேர்தல் காலங்களில் மின்சாரம் தருவதாக கூறி முன்னேற்பாடுகள் எடுத்தவர்கள் இதுவரை வந்து எட்டிப்பார்க்கவே இல்லை எனவும் தெரிவித்தனர்.

> **சோழர்களின் ஆட்சி நிர்வாகம் இங்கு நடைபெற்றமைக்கான சான்றுகள் உண்டு. அதாவது சோழரை வளவர் என்று அழைப்பதாலேயே அவர்களின் குடியிருப்பு வளலாய் எனப் பெயர் பெற்றது என்ற வரலாற்று பெருமையை சேர்க்கிறது.**

வளலாய் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள பரந்த வயல்வெளியில் மேட்டு நிலமாய் உள்ள சிறு நிலப்பரப்பில் கோயில் கொண்டு அருள்பாலித்து வந்த பெரியநாயகி சமேத பெரிய நாகதம்பிரான் மிகவும் பழமை வாய்ந்தது. குமைச்சன் என்ற சோழ சிற்றரசால் அமைக்கப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்துக்குப் பின்னர் 1985ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் கிராமவாழ் மக்களின் பாவனைக்கு வயல்வெளி மட்டும் விடப்பட்டிருப்பதால் பல லட்சம் ரூபாசெலவில் வயல்வெளி மத்தியில் புதிய கோயிலாக வடிவமைக்கப்பட்டது. இக் கிராமத்தில் ஓர் இந்து மயானமும் உள்ளது.

யுத்த காலப்பகுதியில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இக்கிராமத்தின் வீடுகள் பல தரைமட்டமாக்கப்பட்டு இராணுவ தடுப்பரண்கள் ஏற்படுத்தப்பட்டன. நடைபெற்று முடிந்த உள்நாட்டு போரில் குண்டு வீச்சினால் மிகுதி வீடுகள் பாதிக்கப்பட்டு வாழும் தரமின்றி காணப்பட்டன. இங்கு பகுதியளவில் விடுவிக்கப்பட்ட இடத்திற்கு 110 வீடுகள் புதிதாக அமைக்கப்பட்டன. வளலாய் கிழக்கில் 80 வீடுகளும் மேற்கு பகுதிகளில் 30 வீடுகளும் அமைக்கப்பட்டன. இங்குள்ள மேற்கு பகுதியில் 20 வீடுகள் வழங்கப்பட்டவர்கள் அடிப்படை வசதிகள் சீர் இன்மையால் வேறு இடங்களிலேயே குடியமர்ந்துள்ளனர். இவர்கள் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

வளலாய் மேற்கு மக்கள் தமது நிலங்கள் விடுவிக்கவேண்டும் எனக்கோரி பல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமசந்திரன், அரச அதிபர் பிரதேச செயலாளர் என பலரிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். கடந்த 16.06.14 அன்று கோப்பாய் பிரதேச செயலகம் முன்பும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர்.

**இவர்களுடைய கோரிக்கைகள் எப்போது நிறைவேறும் அரசியல்வாதிகள் பதில் சொல்வார்களா?**

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கண்டன அறிக்கை

## முஸ்லிம் சகோதரர்கள் மீதான தாக்குதலுக்கு த.தே.ம.மு. கண்டனம்




முஸ்லிம் மக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாக கண்டித்துள்ளது. முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றினை கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து நடாத்தியுள்ளனர்.

யாழ் ஊடக மையத்தில் 18-06-2014 அன்று காலை 11.00 மணியளவில் இடம்பெற்ற மேற்படி மாநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ள கஜேந்திரகுமார் அளுத்கம பகுதியில் நடைபெற்றிருக்கும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை தமது கட்சி மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் அளுத்கமவில் முஸ்லிம் சகோதரர்கள் மீது இடம்பெற்ற வன்முறைகள் வெறுமனே இனவாத அமைப்புக்களால் நடத்தப்பட்ட ஒரு வன்முறைச் சம்பவமாக மட்டும் பார்க்க முடியாது. இது தமிழ் தேசத்திற்கு எதிராக கடந்த 65 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அநீதிகளின் ஒரு கட்டமாகவே நாங்கள் பார்க்க வேண்டியிருக்கின்றது.

2010ம் ஆண்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உருவாக்கப்பட்டு நாம் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டிருந்தபோது நாங்கள் ஒரு விடயத்தை எதிர்வு கூறியிருந்தோம். அதாவது தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் தீர்வைக் காண முன்வரவேண்டும். அல்லாது போனால் தமிழ் - முஸ்லிம் இனங்களை பிளவுபடுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படும்.

மேலும் முள்ளிவாய்க்காலில் தமிழ்த் தேசத்தின் முதுகெலும்பு உடைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்தப் பெருமிதத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் சிங்கள தேசம் திரும்பும். நன்கு திட்டமிட்டவகையில் அழிப்பினை நடத்தும் என கூறியிருந்தோம். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் நிலையில் அந்த மக்களை குறிவைத்து அரசினாலும், அதன் ஒட்டுக் குழுக்களினாலும், அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள விரிசல் நிலையினை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மறுபக்கம் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடமாகாணத்தில் முஸ்லிம் மக்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களை பல வீனப்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இதேபோன்று தென்னிலங்கையில் பொருளாதார ரீதியாக முஸ்லிம் மக்கள் ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில் 83ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்மக்களின்பொருளாதாரபலத்தை அழித்ததைப் போன்றே இன்றைக்கு முஸ்லிம் மக்களுடைய பொருளாதார பலத்தை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே இவ்வாறான இனவாத நடவடிக்கைகளை நாம் கண்டுகொள்ளாமல் விடுவோமேயானால்,


கடந்த 65வருடகாலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் இருந்து எந்தவொரு பாடத்தினையும் நாங்கள் பெற்றிருக்கவில்லை என்பதே அதன் அர்த்தமாக இருக்க முடியும். எனவே தமிழ் முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து தமிழ்பேசும் ஒரு சக்தியினை உருவாக்கவேண்டிய காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். என்றே நாங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலமாக மாத்திரமே இலங்கைத் தீவை தனியே சிங்கள பௌத்ததேசமாக மாற்ற நினைக்கும் அரசாங்கங்களின் திட்டங்களை நாங்கள் முறியடிக்க முடியும். மேலும் நாங்கள் பாதிக்கப்படும் போது அல்லது நாங்கள் நொந்துகொண்டிருக்கும் போது எமக்கு ஒத்துழைப்பாக எவரும் செயற்பட்டிராத நிலை எமக்கு குற்றமாக தெரிந்திருந்தது.

இந்நிலையில் எம்மைப்போன்றே மற்றொரு தரப்பு பாதிக்கப்படுகின்றபோது நாம் அதற்கு ஒத்துழைப்பினை வழங்காமல் இருப்பது நாம் கடந்தகாலத்திலிருந்து அல்லது எங்களின் கசப்பான அனுபவங்களில் இருந்து நாங்கள் எந்தவொரு பாடத்தையும் அல்லது அனுபவத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதையே அடையாளப்படுத்தி காண்பிக்கும்.

எனவே இந்த அனுபவங்களின் அடிப்படையில் முஸ்லிம் சகோதரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதற்கெதிராக போராடவும் தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் 20ம் திகதி கவனயீர்ப்பு போராட்டத்திற்கான அழைப்பினை நாங்கள் விடுத்திருக்கின்றோம். இப்போராட்டத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கூட்டாக நடாத்தவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பலவந்தமாக சுன்னத்து செய்யப்பட்ட வட்டரக்க விஜிததேரர்



ஜாதிக பல சேனாவின் பொதுச் செயலாளரான வட்டரக்க விஜிததேரருக்கு பலவந்தமாக சுன்னத்து செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

சில பௌத்த பிக்குமார்களே தன்னை தாக்கியதாகவும், தன் மீதான தாக்குதல் சம்பவத்திற்கு முழுப் பொறுப்பு பொதுபலசேனா என்கின்ற சிங்கள மதவாத அமைப்பே என்றும் வட்டரக்க தேரர் கூறியதாக சட்டத்தரணி தெரிவித்திருக்கிறார்.

இங்கு சுன்னத்து என்பது இஸ்லாமிய மதச்சடங்குகளாகும். இதன் படி முஸ்லீம் ஆண்கள் சிறுவர்களாக இருக்கும் போது அவர்களது ஆண் உறுப்பின் நுனித்தோல் வெட்டப்படுகின்றது. வட்டரக்க தேரர் முஸ்லீம்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பி வருவதால் அவருக்கு பலவந்தமாக பொதுபலசேனாவைச் சேர்ந்தவர்கள் சுன்னத்து செய்துள்ளனர்.

## வரலாற்றுச்சுவடுகள் புகைப்படக் கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழகவரலாற்றுதுறை மற்றும் ஊடகவளங்கள் பயிற்சிமையம் என்பன இணைந்து ஏற்பாடுசெய்த வரலாற்றுசுவடுகள் எனும் புகைப்படக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட வளாகத்தில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் கலைப்பீடாதிபதி வி.பி. சிவநாதன் சிறப்புவிருந்தினராகவும், பதில் துணைவேந்தர் ஹீ சற்குணராஜா பிரதம விருந்தினராகவும் கலந்துகொண்டு கணகாட்சிக் கூடத்தை திறந்துவைத்தனர். இப் புகைப்பட கண்காட்சியில் 60 வரலாற்று தொல்லியல் இடங்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு பேராசிரியர் இந்திரபாலாவின் தொல்லியல் நிலையமும் திறந்துவைக்கப்பட்டது. மூன்றுநாட்கள் நடைபெற்ற இக் கண்காட்சியில் பல்கலைக் கழகமாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். இங்கு தொல்லியல் இடங்களின் அழிவையும் அவற்றை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

## மூதூர் மேன்கமம் கிராமத்தின் குளம் பெரும்பான்மையினரால் ஆக்கிரமிப்பு

மூதூர் பிரதேசசெயலக பிரிவுக்குடபட்ட மேன்கமம் குளத்தின் கரையோரப்பகுதிகளை பெரும்பான்மை இனத்தை சார்ந்தோர் சட்ட விரோதமான முறையில் ஆக்கிரமிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். கனரக வாகனங்கள் கொண்டு புனரமைப்பு வேலைகள் செய்வதாகவும், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

மூதூர் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட மேன்கமம் குளமானது 600 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. இரண்டு போக ங்களும் பயிர் செய்யக்கூடியவாறு நீரைச் சேமித்தும் வைக்கக்கூடியது. அண்ணளவாக 200 வருடங்கள் பழமை வாய்ந்த இக்குளத்தில் இதுவரை காலமும் எவ்வித புனரமைப்பு வேலைகளும் இடம்பெறவில்லை. இதனால் விவசாயத்தை தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வந்த 250க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த தமிழ்மக்கள் தொடர்ந்தும் நட்டத்தினையே எதிர்நோக்கி வருகின்றனர். இந்நிலையில் குளத்தின் கரையோர பகுதிகளை பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் அத்துமீறி ஆக்கிரமிப்பது அவர்களை மேலும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

## சீன மொழியில் திருக்குறள்

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் தமிழர்களின் பெருமையினை உலகறியச் செய்யும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் திருக்குறளை சீன மொழியில் மொழி பெயர்த்து நூலாக வெளியிட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

மொழி பெயர்ப்பு பணிகள் யாவும் முடிவடைந்து தற்போது அச்சடிப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தஞ்சை தமிழ் பல்கலைக்கழக தமிழ் வளர்ச்சித் துறை, கல்வி, இளைஞர் நலன் அமைச்சர் திரு.வீரமணி இத் தகவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாரதி தாசனின் பாடல்களும் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இப் பணிகளுக்கு 77 லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருக்குறள் ஏற்கனவே பத்துக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பேரினவாதத்தின் தன்மையை விளங்கிக்கொள்ள நாம் பிந்திவி

## – பேராசிரியர் சிவத்த

யூலை 6ம் திகதி பேராசிரியர் சிவத்தம்பியின் 3வது நினைவு தினமாகும். அதையொட்டி இந்நேர்காணல் வெளியிடப்படுகின்றது.

**இப்போது ஈழத்தில் இனப்போராட்டம் கூர்மையடைந்திருக்கின்றது. ஒரு பேரினம் மற்ற சிறு இனத்தை அடக்கி ஒடுக்கி ஆள்கின்றது என்கின்ற நிலையில், வர்க்கப்போராட்டம் என்ற அணுகுமுறை சரியாக இருக்குமா? அல்லது இனப்போராட்டம் என்பதற்கு முன்னுரிமை கொடுத்து அதன் வழி இயங்கி வெல்வது சரியாக இருக்குமா?**

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இனக்குழு ஒடுக்குமுறையானது ஒரு பேரினவாதத்தின் தன்மையை வந்தடைகின்றது. அந்தக் கால கட்டங்களில் வர்க்கப்போராட்டம் என்பது பல்வேறு வடிவங்கள் எடுக்கக்கூடியது. அந்தந்த நாட்டு வரலாற்றுச் சூழ்நிலைக்கொப்ப எடுப்பது முக்கியமாகிறது. இந்தவரலாற்றுப் பின்னணியைப் பார்க்கும்போது இங்கு நடந்தது என்னவென்றால், தேசியம் என்கின்ற பெயரில் சிங்கள இனவாதத்திற்கு இடமளிக்கப்பட்டது. இந்த சிங்கள இனவாதத்தைக் கொண்டு நடத்தியவர்கள், அவர்களிடையே காணப்பட்ட சிறு முதலாளிகள் அல்லது புதிய உத்தியோகஸ்தர்களாக வருகின்றவர்கள். இந்த இனவாதத்தின் தன்மையை விளங்கிக்கொள்ள நாங்கள் பிந்திவிட்டோம். இதன் காரணமாகத்தான் இப்போதுள்ள போராட்ட வடிவத்தை எடுத்தோம். அந்தநேரத்தில் பல வகையான வரலாற்று சூழல்களையும் உண்மைகளையும் நிராகரித்த ஒரு ஒடுக்குமுறை வந்தது. தனி ஒடுக்குமுறையாக இது வரவில்லை. முதலில் நிர்வாக இயந்திரத்தை அப்படியே ஏற்றுக்கொண்டதற்கு ஒப்பாகும். பின்னர் நிலங்களிலிருந்த சிறுபான்மையினர் வெளியேற்றம். இதில் மதமும் முக்கிய பங்குவகிக்கின்றது. சில இடங்கள் க்ஷேத்திரமாகவும் யாத்திரைத் தலமாகவும் கருதப்படுகின்றன. இதற்கும் அந்த பிரதேச தன்மைக்கும் ஒரு தொடர்பு இருக்கின்றது. நாங்கள் செய்த பிழை என்னவென்று சொன்னால், மார்க்சிய சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொள்வது என்னவென்றால், இந்தமொழி நிலைப்பட்ட வாதம் ஏற்பட்டபோது, அதன் ஊடாக கிடந்த இந்த பேரின வாதத்தின் தன்மையை நாங்கள் சரியாக விளங்கிக்கொள்ளாததே. அறுபதுகளில் முளைவிட்டுவரும்போது, சரியாக இனம் கண்டு கொண்டிருப்போமேயானால் இந்தப் பிரச்சனை வந்திருக்காது. அறுபதுகளுக்குப் பின் அது வளர்ந்து அரசு பயங்கரவாதமாக மாறுகிறது. அரசு அராஜகமாக வளரும்போது சகலமுமே ஒடுக்கப்படுகிறது. இம்மாதிரிவரலாற்றில் ஏற்பட்ட தனித்துவமான கூறுகளை விளங்கிக்கொண்டோம் என்று சொன்னால், மார்க்சியம் இப்படிப்பட்ட சூழலில் சரியாகவே தொழிற்பட்டிருக்கும். மார்க்சியத்தின் அணுகு முறையை ஒருவாய்ப்பாடாக எடுத்துக்கொள்ளாமல் விளங்குவதற்கான அணுகுமுறையாக வைத்திருக்கவேண்டும்.

**இன்று இன ஒடுக்குமுறைச் சம்பவங்களும் இன அழிப்புநிகழ்ச்சிகளும் அதற்கெதிரான ஆயுதம் தாங்கிய போராட்டமும் நடைபெறுகின்றன. இந்தபோராட்டச் சூழ்நிலையின் சாராம்சங்களை, ஈழத்துக் கலை இலக்கியம் எப்படி உள்வாங்கிக் கொண்டிருக்கிறது?**

கவிதையில் நிச்சயமாக இந்தப்போராட்டத்தின் சாராம்சத் தன்மைகள் கலாபூர்வமாகத் தெரிய வருகின்றது. இது 80களிலேயே தொடங்கிவிட்டது. மற்ற இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், நாடகம், போன்றவகைகளில் அது பிந்துகின்றது. செம்மையாக உள்வாங்கிக் கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதற்குகாரணம் இங்கே உள்ள இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றிலும் FICTION என் கின்ற புனைகதை ஒரு ஆய்வுவடிவம் கொண்ட இலக்கியமாகும். சமூகச்சூழலை அது தெளிவாகவே ஆராய வேண்டும். விமர்சன ரீதியான தெளிவும், சமூகத்தைப் பகுப்பாய்வு செய்கின்ற தன்மையும் புனைகதைகளுக்கு உண்டு. ஆகவே, இந்தப் பகுப்பாய்வுத் தன்மையுடன் சமூகத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கிற பார்வையில் நமது படைப்பாளர்கள் சற்றுப்பின் தங்கி இருக்கிறார்கள். ஆனால் அப்படிப் பார்ப்பதற்கான தடயங்கள் தொடங்கிவிட்டன.

**இந்தப் போராட்டத்தினுடைய முடிவைப் பற்றி ஏற்படுகிற குழப்பம் அல்லது இந்தப் போராட்டத்தில் உள்ள நிச்சயமற்றதன்மை, கருத்துத் தளங்களைக் கணிப்பதற்குள்ள முரண்பாடுகள், இவைகள் கூடப் படைப்புக்குத் தடையாக இருக்கலாம் அல்லவா?**

இவைகளைவிட இந்தப் போராட்டம் துரிதப்பட்ட முறை இன்றைக்கு அது எடுத்திருக்கும் வடிவம், 80களிலிருந்து இந்தப் பத்து வருடங்களில் இங்கே நடந்து உள்ள யுக மாற்றம் இவைகளை முற்றாக உள்வாங்கி, இவற்றிற்கான காரணகாரியங்களை தொடர்புகளைக் கண்டுபிடித்து எழுதுவது என்பது எளிமையான விஷயமல்ல. அப்படி எழுதுபவன் உயர்ந்தமட்ட எழுத்தாளனாகத் தான் இருப்பான். ஆனால், அப்படிப்பட்ட எழுத்துக்கள் வரத் தொடங்கிவிட்டன.

**அப்படிப்பட்ட எழுத்துக்கு ஏதாவது எடுத்துக்காட்டு கூறமுடியுமா?**

முடியும். நான் அடிக்கடிசொல்வது இந்த ரஞ்சகுமார் என்கிற பையனுடைய சிறுகதைகள். நிச்சயமாக அவை இந்தக்கால கட்டத்தின் மாற்றங்களை அற்புதமாக எடுத்துக்காட்டுகிற வகையில் உள்ளன. "கோசலை" என்கிற கதையை வாசியுங்கள். இந்தப் போராட்டம் நடத்தியிருக்கின்ற இட, இனப் பெயர்வுகள். உளமாற்றங்கள் எல்லாவற்றையும் காட்டி, போராட்டத்தை தவிர வேறு ஒன்றும் இல்லாததான நிலையும் அக்கதையில் காணலாம்.

**இந்த மாற்றங்களெல்லாம் நாளை ஈழத்தில் ஒரு சகஜநிலை ஏற்பட்ட பிறகு தக்கவைத்துக் கொள்ளப்படுமா? அல்லது பழைய நிலைக்கே திரும்பப் போய் விடுமா?**

ஏறத்தாழ இந்தச் சமூகம் உருவானகாலம் முதல் (16ம் நூற்றாண்டுதொடக்கம் என்று கூறலாம்) இன்றுவரை பெரியஅளவுக்கு ஜனப்பெயர்ச்சி (DEMOGRAPHIC CHANGE) ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பெயர்ச்சிகள் நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். பெயர்ச்சி இல்லாதவரை இந்த அடக்குமுறை அப்படியே பேணப்படும் உதாரணமாக திருநெல்வேலி (யாழ்ப்பாணம்) என்பது பாரம்பரியமாக உயர்மட்டத்தினர் வாழ்கின்ற இடம். அங்கு இப்போது இடம் பெயர்ந்தோர் நிறையப்பேர் இருக்கிறார்கள். இனி இந்த அடக்குமுறையைப் பேணுவது என்பது சாத்தியமில்லாமல் போய் விடும். நாளை இந்தமாற்றங்கள் அப்படியே தக்கவைத்துக் கொள்ளப்படும் என்று தான் நினைக்கின்றேன்.

**ஆனால் இந்த ஜனப் பெயர்ச்சிகள், சாதாரண வாழ்க்கையின் சீர்குலைவுகள், அகதித்தன்மை எல்லாம் சேர்ந்து ஐரோப்பியநாடுகளில் ஏற்பட்டது போன்ற ஒரு விரக்திக்கு இட்டுச் செல்லும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா?**

இங்கே உள்ள முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தச் சமூக மாற்றத்தோடு நின்றுவிடுகிறது. இயந்திரமயமான தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்படவழியில்லை. எந்த மாற்றத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும், அடிப்படையில் உற்பத்திமுறை பேணப்படுகிறது. ஆகவே, விரக்தி போன்ற எதிர் வினைகளுக்கு இடமில்லை.

**இந்த மாற்றங்கள் யாழ்ப்பாணம் தவிர, மட்டக்களப்பு பகுதியிலேயோ, மலையகத்திலேயோ ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்லமுடியுமா?**

மட்டக்களப்பில் இன்னொருவகையான மாற்றங்கள் ஏற்படுகின்றன 87வரை இங்கு நடைபெற்றது. இப்போது இளைஞர்களின் தீவிரவாதம் தொடங்குவதைக் கண்ட அரசாங்கம் தன் படைபலத்தை காட்டி அதை அடக்கமுயன்றது. இதிலிருந்து ஐ.பி.கே.எஃப் வந்த 87 வரை இங்கு காணாமற்போனவர்கள் தொகை மாவீரர்களாக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கைகள் பெற்றோரை இழந்த குழந்தைகளின் தொகை அதிகமாக இருந்தது. மட்டக்களப்பில் உள்ள சிலவிசேசத் தன்மைகள் காரணமாக இந்தப் பிரச்சனைகளின் தாக்கம் இப்போது தான் அங்கு உணரப்பட்டிருக்கிறது. மலையகத்தை பொறுத்தவரை அங்கு இருக்க முடியாதவர்கள் வெளியேற்றப்பட்டவர்கள் வடகிழக்குப் பகுதிகளில் வந்து குடியேறினார்கள். அங்குவந்து குடியேறிய மலையகத்தாரின் பொருளாதார அடக்குமுறைகள் தீர்ந்துவிட்டது என்று எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் வராமல் மலையகத்திலேயே தங்கியவர்களின் வாழ்க்கை முற்றுமுழுவதுமாக கட்டுப்பட்ட வாழ்க்கையாகவே உள்ளது. அங்கு உள்ள தொழிற்சங்கமுறைமை, தோட்டத்தின் தொழில் முறைமை அந்த இறுக்கமான வாழ்க்கையிலிருந்து அவர்களை வெளியே விடவேயில்லை. இடதுசாரிக் கட்சிகள் கூட அங்கு பெரியதாக்கத்தை ஏற்படுத்தவில்லை. நவீன காலத்துக்கு முற்பட்டதான ஒருசமூக அமைப்பை ஏகாதிபத்தியம் பயன்படுத்தி தன் தோட்டத் தொழிற்சாலைக்கு வேண்டிய சமூக அமைப்பாக மாற்றிக்கொண்டதன் விளைவு அங்கு இன்னும் கூடச் சரியாக்கப்படவில்லை. தளர்வதற்கான அறிகுறி தென்பட்டாலும், அந்த அமைப்பு முற்றும் மாறுவதற்கான அறிகுறி இல்லை.

யாழ்ப்பாணருடைய மேலாண்மைத் தன்மை தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இன்னும் இருக்கிறது என்று மலையகத் தமிழர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் ஒரு சட்டாம்பிள்ளை போல நடந்துகொள்கிறார்கள். எங்கள் பிரச்சனை பற்றி அவர்கள் கவனிக்கவில்லை. என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.


இது ஏற்கனவே யார் இந்தயாழ்ப்பாணத் தான்? 'என்ற கட்டுரை மூலம் வற்புறுத்தி வந்த விஷயம் தான். முஸ்லிம்களையும் மலையகத்தவர்களையும் இந்தியர்கள் என்று யாழ்ப்பாணத்தவர் ஒதுக்கியதுண்டு. மட்டக்களப்புக்காரர்கள் என்று அந்த மக்களையும் ஒதுக்கினோம். கிளிநொச்சியார், வவுனியார் என்றெல்லாம் ஒதுக்கப்பட்டது உண்டு. இந்தக் குறுகிய பிரதேசத்திற்குள் சாதி பேசினோம். இது உண்மை. மேலாண்மை உணர்வு இல்லையென்று நான் சொல்லமாட்டேன். அண்மைக்காலத்தில் துவங்கிய இந்த இளைஞர் இயக்கங்கள் அந்தக் கண்ணோட்டத்தில் இருந்து விடுபட்டதை காணமுடிகிறது.

**தமிழ் மறுமலர்ச்சியும் பிராமணிய எதிர்ப்பும் தமிழர்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை தந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அது அவசியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

தமிழ் நாட்டின் சிறப்பியல்பான சூழலை நாம் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாகச் சென்னை மாகாணத்தை பார்க்கவேண்டும். அங்கேதான் இந்தப் பிரச்சனைகள் எழுந்தன. நிலப் பிரபுக்களும் பண்ணைக்காரர்களும் வாணிப முதலாளிகளும் வந்தபின்னர் ஏற்பட்ட வாணிப வர்த்தகத்தின் எழுச்சிபற்றிய கேள்வி அடிப்படையானது. அவர்களுக்கு மரபுரீதியான உயர் குழாமுக்கு எதிரானஓர் அடையாளம் தேவைப்பட்டது. ஆகவே கம்மர்கள், கப்புக்கள், ரெட்டிமார், பிள்ளைமார், நாயர்கள் போன்றோர்கள் ஒன்று சேர்ந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சமூகஅரசியல், சமூகமொழியியல் போன்றதுறைகளில் நடந்தவை உங்களுக்குத் தெரியும். குறிப்பாக கிறிஸ்தவ மிசனரிமார் காட்டிய அக்கறைகள்.

ஏனெனில் தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவிலும் காணப்பட்ட இந்துசமயம் தானா பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் இந்து சமயம் என்று அவர்கள் தெரிந்து கொள்ளவிரும்பினார்கள். திராவிட மொழிக

ளைப் பற்றி ஒப்பியல் இலக்கணம் எழுதிய பிஷப் கோல்ட் வெல் தான் திருநெல் வேலி மாவட்ட வரலாற்றையும் திருநெல்



# திவிட்டோம்

## வத்தம்பி

வேலிசாணார் வரலாற்றையும் எழுதினார். பிராமணர் அல்லாதோர் வேறுசமயப் பண்பு களைகொண்டுள்ளார்கள் என்பதைப் பார்க்க முயற்சித்தார்கள். அதனடியாக அந்தக் குழுக் கள் என்ன விசேட குணாம்சங்களையும் கொண்டுள்ளார்கள் என்பதையும் அறிய விரும்பினார்கள். இந்தத் தேவை ஒரு கருத்தியலைக் கொண்டுவரும் தேடலையும் உருவாக்கியது. அதில் தமிழ் இனங்காணல் அல்லது பிராமணரல்லாத அடையாளம் வலியுறுத்தப்பட்டது. அதேவேளை வேறொரு பண்பும் எடுத்துக் காட்டப்பட்டது. அதாவது தமிழ்நாட்டில் எப்படி சில சாதிகளை குற்றம் புரியும் சாதிகள் என்று அடக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒரு காலத்தில் அரச அதிகாரங்களை அனுபவித்தவர்கள். விசேடமாக, கள்ளர்,

> **தேசியம் என்கின்ற பெயரில் சிங்கள இனவாதத்திற்கு இடமளிக் கப்பட்டது. இந்த சிங்கள இனவாதத்தைக் கொண்டு நடத்திய வர்கள், அவர்களிடையே காணப்பட்ட சிறு முதலாளிகள் அல்லது புதிய உத்தியோகஸ்தர்களாக வருகின்றவர்கள். இந்த இனவாதத் தின் தன்மையை விளங்கிக்கொள்ள நாங்கள் பிந்திவிட்டோம்.**

மறவர் அவர்களும் தங்கள் நிலைகளை உயர்த்த விரும்பினர். இவையும் ஒரு காரணியாகும். அதிகமான மிஷனரி வேலை கள் தென் தமிழ்நாட்டில் குறிப்பாக, திரு நெல்வேலி மாவட்டத்தில் தான் இருந்தன. நாடார் சமூகத்தில் இந்த வேலைகள் அதிகமாக இருந்தது.

ஆகவே, இவை எப்போதுமே முக்கியமான மெய்மைகள். இந்தப் பொதுப்பின்னணியில் தான் மெதுவாகப் பிராமண எதிர்ப்பு எண் ணங்கள் முளைவிடுகின்றன. தமிழ் நாட் டில் இந்திய தேசிய காங்கிரஸ் பரிணாம வளர்ச்சியும் ஒரு முக்கிய காரணியாகும். ஆரம்பத்திலிருந்தே மற்ற இந்தியப் பகுதிகளில் செய்த மாதிரி காங்கிரஸ் அந்தப் பகுதி மக்களின் தேவைகளைக் கவனிக்கவில்லை. அதனால் காங்கிரசும் சமூகத்தால் அடக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலை யில் இருக்கவில்லை. ஆகவே அவர்களின் குறைகளை எடுத்துக்காட்டும் பிரதிநிதித்து வப்படுத்தும் ஒரு அமைப்பு அங்கு தேவையாக இருந்தது. உண்மையில் 19ம் நூற்றாண்டு இறுதிக் காலத்திலிருந்து 20ம் நூற்றாண்டு ஆரம்ப காலம் வரை பறையர் மகாஜன சபை இருந்தது. ஆகவே இந்திய காங்கிரஸ் விட்ட குறைக்காக பிராமணரல்லாதவர் தங்கள் வாழ்வின் சமூக உயர்விற்காக இந்த அமைப்புகளில் தங்கி இருக்கவேண்டி இருந்தது. இந்திய காங்கிரஸில் இருந்தவர்கள் கூட இந்தக் குறையை, தேவையை அறிந்து மெட்ராஸ் மகாஜன சபை போன்றவற்றை அமைத்தனர். அதில் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார். முக்கிய பாத்திரத்தை ஏற்கிறார். அப்படியாக அடையாளத்தை நிரூபிப்பதற்கான தேவை இருந்தது. குறிப்பிட்ட கட்டத்தில் திருநெல்வேலி சைவ வேளாளக் கலாச்சாரம் ஒருவகை. இந்த சைவ உருவத்தை எடுக்கிறது. பெரியார் ராமசாமி நாயக்கரின் வருகையின் பின்னர் சமூக விடுதலைப் போக்கை எடுக்கிறது.

பெரியாருடைய சுய மரியாதை இயக்கம் பெரும் சக்தியாக வளருகிறது. அண்ணாதுரை முன்னுக்கு வந்த பின் இது முற்றும் புதிய பரிணாமம் ஒன்றை எடுக்கிறது. ஆகவே இந்திய மயப்படுத்தல் நடக்கும் போது அதற்கெதிராக இந்திய மயப்படுத்தல் குறை வான காலகட்டத்திற்குச் செல்லும் போக்கு இருந்தது. சமஸ்கிருத் மயப்படுத்தல் என்று சொல்வது இந்த விசயங்களைப் புரிந்து கொள்ள உதவாது இந்திய மயப்படுத்தல் என்று சொல்வதே பொருந்தும்.

**அகன்ற இந்தியச் சூழலில் ஆரம்பத்தில் தமிழர்கள் தாங்கள் தனித்துவமானவர்கள் வேறானவர்கள் என்று கருதப்பட்டது. பின்னர் 19ம், 20ம் நூற்றாண்டுகளில் வேறானவர்கள் என்று கருதுவதற்கும் இடையில் வேறுபாடுகள் என்ன?**

19ம் நூற்றாண்டில் நிலைமை கொஞ்சம் முன்னேற்றகரமானதாகவே இருந்தது. பிரிட் டிஷ் அரசாட்சியின் கீழ் அரசியல் தொடர் பான மேற்கத்தைய கருத்துக்கள் இருந்தன. அடிப்படையானதும் மிகவும் முக்கியமான துமான அம்சம் என்னவென்றால் முன்னெப் போதும் இல்லாத வகையில் ஒரு சனநாயக அம்சம் அங்கு இருந்ததே. அதிகமான மக்கள் பல விசயங்களிலும் பங்கு பற்றியது உண்மை. முன்பு அத்தகைய சூழல் இருக்கவில்லை.

**வட இந்தியாவிலுள்ள சில கல்விமான்கள் தமிழ் நாட்டில் பிராமணிய எதிர்ப்பும் தமிழ்ப் பற்றும் அதிகமாகப் போய்விட்டதென்றும் தமிழ் அறிவாளிகளின் ஆக்க வெளிப்பாடுகள் அதனால் குறைந்து விட்டதென்றும் கூறு கிறார்கள். அத்துடன் இப்போது தமிழ்நாட்டு அறிவாளிகளின் ஆக்கங்களை வெறுப்புடன் நோக்கி ஏற்க மறுக்கிற ஒரு தன்மையும் ஏற்பட்டுள்ளது. subalterns என்று வழங்கப்படுகிற தாழ்த்தப்பட்டோர் தளத்து வரலாறுகளை முன்னெடுப்போர் மத்தியில் கூட இந்த நிலை ஏற்பட்டுள்ளது அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வரலாற்றில் பற்றிய வழமையான பார்வை தாழ்த்தப்பட்டோர் வரலாற்றை மறுக்கிறது என்ற வகையில் அது புரியக்கூடியது. 1950 களிலிருந்தும் 1967லிருந்தும் திராவிடக் கருத்தியல் மாற்றம் பெற்றுவந்துள்ளது. இந்தக் கருத்தியல் தான் மதராஸ அரசின் உத்தியோக பூர்வமான கருத்தியல் என்பதாக இருந்தமையால் அது தமிழ்நாட்டின் பல கல்விமான்களை பாதித்துள்ளது. தமிழ்நாட்டுச் சூழலில் மற்ற இடங்களை விட இவர்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டவர்கள். ஆனால் அந்த விசயம் மேற்படையானதே.

இதனை விட ஆழமான மட்டம் ஒன்றும் உள்ளது. கல்வி வாய்ப்புக்கள்,ஒடுக்கப்பட்ட சாதி, அவர்களுக்குக் கிடைக்கும் தொழில் வாய்ப்புக்கள் அதனால் பிற சாதியினருக்கு கிடைக்கும் சந்தர்ப்பக்குறைவு அவர்கள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறுதலும் போன்ற பல கேள்விகள் உள்ளன. இவை காரணமாகத் தமிழ் நாட்டில் சமூக விஞ்ஞா னங்கள் பலமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். சுருக்கமாக இரண்டு கார ணங்களைச் சொல்லலாம். ஒன்று, அரசாங் கத்தின் கருத்தியல் குழப்பங்களும் உத்தி யோக கருத்தியலும், இரண்டாவது, இக் குழப் பங்களினால் அங்கு தங்கி இருக்கக் கூடிய வர்கள் அம் மாநிலத்திலிருந்து வெளியேறும் நிலைமை. வைத்தியர்களையும் எஞ்சினியர் களையும் தவிர்ந்த மற்றவர்கள் பெரும்பாலும் அங்கு தங்குவதில்லை. சமூக விஞ்ஞானிகள் வெளிஇடங்களில் பிரகாசிக்கின்றனர்.

**அகன்ற இந்திய சூழலில் தமிழ் போன்ற சிறுபான்மையினரின் குரல்கள் எழுதுவது பிராமண பிரிட்டிஷ் மரபுக்கு அல்லது ஆரிய மைய வாதப் புலப்பதிவின் மேலாட்சியை எதிர்க்கின்ற காத்திரமான செயலாகும். என்று தமிழ் நாட்டிலுள்ள சில அறிவாளிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அது உண்மையில் ஓர் எதிர்ச்சமநிலை என்று நீங்கள் நினைக் கிறீர்களா?**

அவர்களுடைய சமூகத்தில் இன்றும் பிரா மண - பிராமணரல்லாதாரிடையே பகைமை இருந்து கொண்டிருப்பது உண்மை. அந்தப் பகமை இருக்கும்வரை அடிப்படையில் அதன் சமூக வெளிப்பாடுகள் இருந்து கொண்டு தான் இருக்கும். இதிலிருந்து நாம் தப்ப முடியாது. ஆனால் அந்த முழு விசயத்தின் வீரியத்தடிப்பை புரிந்து கொள்ள வேண்டும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட 1967லிருந்து தமிழ் நாட்டில் திராவிட கருத்தியல் முத்திரையுடன் தான் அரசியல் இருந்து வருகின்றன. அது தி.மு.க அல்லது அ.தி.மு.க அல்லது அ.இ.அ.தி.மு.க எதுவானாலும் சிலவேளை இப்போதுள்ள முதல்வரை போல திராவிடக் கருத்தியலுடன் எவ்வித சம்பந்தமற்றவராகக் கூட இருக்கலாம். தேசியக் கட்சிகளும் கொம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட தமிழ் நாட்டை பொறுத்தவரை ஒரு பாத்திரம் தான் இருக்கிறது. ஒன்று அவர்களுடன் சேருவது அல்லது சேராமல் விடுவது காங்கிரசுக்கும் அதே இரண்டக நிலை தான்.

நாங்கள் இதை அரசியல் யாப்புக்கோணத் திலும் அரசியல் வளர்ச்சிக் கோணத்திலும் வைத்துப் பார்க்கலாம். உண்மையான சமூக அல்லது பிராந்தியத் தளம் இல்லாவிட்டால் அது எப்படி இயலும்? ஆனால் அது வெளிப்படையாக கூறப்படவில்லை. இதை பக்தி இயக்கத்தின் நவீனகால வெளிப்பாடு என்று ஒரு வகையில் சொல்லலாம். பிராமணிய இந்து சமயத்திற்கு எதிர்ப்பாகவும் மாற்றாகவும் எழுந்தது பக்தி இயக்கம். தமிழ் நாட்டின் திராவிட இயக்கம் அல்லது தமிழ் சைவ சித்தாந்த தத்துவம் வேதாந்த தத்துவத்துக்கும் பிராமணியத் திற்கும் எதிரான ஒரு தடைச்சுவர் மாதிரி இருந்தது. தமிழ் மனம் அல்லது ஆத்துமம் அதில் தான் தன்னை இணைத்து காட் டியுள்ளது. சைவ சித்தாந்தத்தின் குணா அம்சங்கள், தொன்மை மூலம் போன்ற எமது அனைத்து வரலாற்று சண்டைகளும்

> **மலையகத்திலேயே தங்கியவர்களின் வாழ்க்கை முற்றுமுழுவதுமாக கட்டுப்பட்ட வாழ்க்கையாகவே உள்ளது. அங்கு உள்ள தொழிற்சங்கமுறைமை, தோட்டத்தின் தொழில் முறைமை அந்த இறுக்கமான வாழ்க்கையிலிருந்து அவர்களைெ வளியேவிடவேயில்லை. இடதுசாரிக்கட்சிகள் கூட அங்கு பெரியதாக்கத்தை ஏற்படுத்தவில்லை. நவீனகாலத்துக்கு முற்பட்டதான ஒருசமூகஅ மைப்பை ஏகாதிபத்தியம் பயன்படுத்தி தன் தோட்டத் தொழிற் சாலைக்கு வேண்டிய சமூக அமைப்பாகமாற்றிக் கொண்டதன் விளைவு அங்கு இன்னும் கூடச் சரியாக்கப்படவில்லை. தளர்வதற்கான அறிகுறி தென்பட் டாலும்,அந்தஅமைப்பு முற்றும் மாறுவதற்கானஅறிகுறி இல்லை.**

ஆராய்ச்சி பிரச்சனைகளும் இந்த முழுச் செயற்பாங்குடன் தொடர்புடையவை. சைவ சித்தாந்தத்தை யாழ்ப்பாணத்தில் புரிந்து கொண்டதற்கும் தமிழ் நாட்டில் புரிந்து கொண் டதற்கும் சிற்சில வேறுபாடுகள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத இந்துசமயம் அதிகம் கலந்திருக்கின்றது. தமிழ் நாட்டில் அது குறைவாகவும் உள்ளது.அங்கு சமஸ்கிருதம் அல்லது சமஸ்கிருதத்திற்கு எதிரானதாகக் கூட இருக்கிறது. ஒரு வகையில் கருத்தியல் பதில் அங்கு நெடுங்காலமாகவே இருக்கிறது அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இப்போது இந்தச் செயல் நடைபெறும் தளம் விரிந்திருக்கிறது. பெரியார் தம் மட்டத்தில் அடிப்படையில் காங்கிரஸ் எதிர்ப்பாளர். அண்ணாதுரையும் அப்படியே. ஆனால் அண்ணாதுரை தமிழன் என்ற ஒன்றையும் கலந்து விட்டார். திராவிடன் என்ற போதும் தமிழ் ஆசிரியர்களையும் அங்கு கொண்டுவந்து சேர்த்தார். அந்த நாளிலிருந்து தமிழ் மூலம் கற்று தேர்ந்த அறிவாழிகளும் முன்னணிக்கு வந்தனர். தி.மு.க எழுச்சிக்கு பின் தான் நாலைந்து தமிழ் பேராசிரியர்களும் உபவேந்தர்களாக பல்கலைகழகங்களில் நியமிக்கப்பட்டனர். இது தமிழ் நாட்டில் குறிப் பிட்டு கூறக்கூடியதொன்று. தமிழ் மொழி சிரிப் புக்கிடமானதாகக் கணிக்கப்பட்ட ஒரு சூழலில் இது முக்கியமானது என்பது நினைவில் இருக்கவேண்டும்.

**தமிழ் நாட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர் ச்சிகளை கொள்கை அளவில் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா? ஹிந்தி மொழி எதிர்ப்பு நல்லது என்று நீங்கள் நினைக் கிறீர்களா?**

அது நல்லதா கெட்டதா என்று எனக்கு தெரியாது. ஏனெனில் இலங்கைத் தமிழ் புலமையாளர் என்ற முறையில் அது எந்த வழியில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று மட்டுமே என்னால் பார்க்க முடியும். விமர்சிக்க முடியும். 1930களில் இருந்தே ஹிந்தி எதிர்ப்பு இருந்து கொண்டு தான் வந்தது. திராவிட கருத்தியலாளர்கள் 1930களில் மாநில விசயங்களில் தலையிட ஆரம்பிக்கும் போது முதலில் மறைமலையடிகளுடன் அவர்களுக்கிருந்த பிணக்கு தீர்க்க வேண்டி இருந்ததது. ஹிந்தியை பற்றிய பயத்தை பற்றி அறிவதற்கு அங்கு தொடர்ச்சியாக இருந்த ஹிந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் நாட்டை ஹிந்தி முழுவதுமாக ஆட்கொண்டு அதன் அடையாளத்தை அழித்துவிடும் என்று அவர்களுக்கு உள்ளூர ஒரு பயம் இருந்தது. அது தான் அடிப்படை பிரச்சனை என்று நான் நினைக்கிறேன். அந்தப் பிரச்சனையை அப்படித்தான் அணுகவேண்டும்.

> திருநெல்வேலியில் தாக்கி கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்களை அரச இராணுவ மரியாதையுடன் வட பகுதியிலேயே புதைப்பது என முடிவெடுக்கப்பட்டது. எனது வீரர்கள் நாய்கள் போல் சுடப்பட்டுள்ளனர். நாய்கள் போல் அவர்கள் புதைக்கப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன் என மேஜர் ஜெனரல் வீரதுங்க யாழ்ப்பாணத்தில் புதைக்கும் முடிவுக்கு இணங்க மறுத்துவிட்டார்



# மறக்க முடியாத கறுப்பு யூலை

சி.புஸ்பராஜா



இலங்கையில் நடைபெற்ற கலவரங்களில் 1983ம் ஆண்டின் கலவரம் தமிழ் மக்களின் இதயத்தில் ஆறாவடுவை ஏற்படுத்திய கலவரமாகும். இக் கலவரத்தின் பாதிப்பு இலங்கை வரலாற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதன் பின்புதான் இயக்கங்கள் பெரிதாக வளர்ந்ததும் இந்தியா இலங்கையின் இனப்பிரச்சனையில் தலையிட்டதும் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் மேற்கு நாடுகளை நோக்கி ஓடியதும் ஆகிய முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன. இக் கலவரத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள், வியாபார ஸ்தலங்கள் எரிக்கப்பட்டன. ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். இருபத்தைந்து அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. கொழும்பு தீயணைப்புப் பகுதியின் குறிப்பேட்டின்படி குறைந்தது 1003 இடங்களில் தீயணைப்பு வேலைகள் நடைபெற்றுள்ளன. இக் கலவரத்தை தொடர்ந்து கொள்ளையர்களிடம் இருந்து வெள்ளவத்தை பொலிஸாரால் ஐந்து லட்சம் அமெரிக்க டொலருக்கு பெறுமதியான பணங்கள், பொருட்கள், ஆபரணங்கள், வேறு சொத்துக்கள் மீட்கப்பட்டதாக சிங்களப்புத்தகம் ஒன்றின் குறிப்பு கூறுகிறது. அப்படியாயின் மீட்கப்படாத சொத்துக்களின் பெறுமதி எவ்வளவாக இருந்திருக்கும்?

இராணுவப் படையணி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டு பதின்மூன்று இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதன் எதிரொலியாகவே இக் கொடுமையான கலவரம் தலைவிரித்தாடியது. நீண்ட காலமாகவே ஒரு சில அமைச்சர்கள் கலவரத்துக்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்ததாகவும் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு சிங்களப் பகுதியில் தமிழர்கள் வாழும் இடங்களின் விபரங்கள் எடுத்துவைக்கப்பட்டிருந்ததாகவும் பேசப்பட்டது. முக்கியமாக அமைச்சர் சிறில்மத்தியூ மீது இது சம்பந்தமான பலமான சந்தேகம் இருந்தது. "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்னும் கருத்துப்பட பேசி 1977ம் ஆண்டின் கலவரத்துக்கு வித்திட்ட ஜே.ஆர் ஜெயவர்த்தன இக் கலவரத்திலும் மௌனத்துடன் சம்மதமளித்தார் என்றே சொல்லலாம்.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் இருப்பது திருநெல்வேலி என்னும் ஊராகும். இங்கு யாழ் பல்கலைக்கழகம், பெரியதொரு விவசாயிகள் சந்தை, வடமாகாணத்துக்கான விவசாயப் பாடசாலை, விவசாயி ஆராய்ச்சி நிலையம் போன்றவை அமைந்துள்ளன. இங்கு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் பலாலி வீதியில் தபால் பெட்டியடி என்னும் இடமுண்டு. இங்கு தான் இராணுவத்தின் மீதான நிலக்கண்ணி வெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மாதகல் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சென்னை பாதுகாப்பு அக்கடமியில் விசேட இராணுவ பயிற்சி பெற்ற 21 வயதான இரண்டாவது லெப்டினன் குணவர்த்தன தலைமையில் இராணுவ லொறியில் 1983ம் ஆண்டு ஜீலை மாதம் 23ம் திகதி இரவு 11.30 மணியளவில் தபால் பெட்டியடியில் வந்தபொழுது விடுதலைப் புலிகளால் இயக்கப்பட்ட நிலக்கண்ணி வெடியினால் தாக்கப்பட்டனர். கண்ணி வெடியை தொடர்ந்து விடுதலைப் புலிகளால் தொடரப்பட்ட துப்பாக்கிச் சமரில் 15 பேர்களை கொண்ட இராணுவ அணியில் 13 பேர் கொல்லப்பட்டனர். கோப்ரல் பெரேரா, கோப்ரல் சுமதிபால ஆகிய இருவரும் பதுங்கித் தப்பி உயிரைக் காத்துக் கொண்டனர்.

பிரபாகரன் இந்திய சன்டே இதழின் நிருபர் அனிதா பிரதாப்புக்கு 1983ஆம் ஆண்டு விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினர் சார்ள்ஸ் அன்ரனி இராணுவத் தாக்கு தல் ஒன்றில் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் பெரும்பாதிப்பை, மாற்றத்தை ஏற்படுத்திய இத் தாக்குதலில் பங்கு கொண்ட விடுதலைப்புலிகள் பிரபாகரன், கிட்டு, செல்லக்கிளி, அப்பையா அண்ணை, பொன்னம்மான் விக்ரர், கணேஸ், ரஞ்சன், பசீர்காக்கா, புலேந்திரன் சந்தோசம் ஆகியோராகும். இத் தாக்குதலில் செல்லக்கிளிமட்டும் புலிகளின் தரப்பில் அச்சம்பவத்தில் உயிரிழந்திருந்தார்.

ஒரு நாட்டுக்கான போரில் இராணுவ மோதலும் இராணுவம் கொல்லப்படுவதும் ஒன்றும் நடக்ககூடாத விடயமல்ல. திருநெல்வேலியில் தாக்கி கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்களை அரச இராணுவ மரியாதையுடன் வட பகுதியிலேயே புதைப்பது என முடிவெடுக்கப்பட்டது. எனது வீரர்கள் நாய்கள் போல் சுடப்பட்டுள்ளனர். நாய்கள் போல் அவர்கள் புதைக்கப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன் என மேஜர் ஜெனரல் வீரதுங்க யாழ்ப்பாணத்தில் புதைக்கும் முடிவுக்கு இணங்க மறுத்துவிட்டார்.

பதின்மூன்று இராணுவத்தினரதும் உடல்களும் வேண்டுமென்றே பொலித்தீன் பைகளில் போடப்பட்டு விமானமூலம் இரத்மலானைக்குக் கொண்டுவரப்பட்டன. இராணுவ உயர் அதிகாரிகளால் யாழ்ப்பாணத்தில் பதின்மூன்று சவப்பெட்டிகள் எடுக்கமுடியாமலா போனது? தாக்குதலின் கொடூரத்தை தென்னிலங்கையில், இராணுவத்தினரின் எதிரான தாக்குதலை சிங்களவர்களுக்கு எதிரான தாக்குதலாக காட்டுவதற்கான மிகவும் கீழ்த்தரமான நாடகமே இராணுவத்தினரின் சிதைந்த உடல்களை பொலித்தீன் பைகளில் போட்டுக் கொழும்புக்கு கொண்டு சென்றமை. துண்டுகளாகவும் சிதறல்களாகவும் இராணுவ வீரர்களின் உடல்கள் பொலீத்தீன் பைகளில் வந்துள்ளன என்ற செய்தி தென்னிலங்கை எங்கும் பரவியது. இராணுவ அதிகாரிகள் திட்டமிட்ட செயலால் சிங்களமக்கள் கொதித் தெழுந்தனர். உண்மையாகவே கொழும்புக்கு உடல்கள் வந்து சேர்வதற்கு முதலே நாடெங்கும் தகவல் பரவிவிட்டது. திட்டமிட்டபடி 1983ம் ஆண்டு ஜுலை மாதம் 24ம் திகதி 4.00 மணிக்கு இரத்மலானைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் விமானம் பலாலியில் இருந்து இரவு 7.30 மணிக்குத்தான் புறப்பட்டு இரவு 9.30 மணிக்கு இரத்மலானைக்கு வந்து சேர்ந்தது. வீணான வதந்திகள் பரவவும் மோசமான பதற்ற நிலை உருவாகவும் இந்தத்தாமதமும் முக்கிய காரணமாகும். இந்த தாமதத்தால் கனத்தை மயானத்தில் கூட்டம் நிமிடத்துக்குநிமிடம் பெருகத் தொடங்கியது.

கனத்தை மயானத்திற்கு உடல்கள் வந்து சேரத் தாமதம் ஏற்பட்டதால் சிங்களக் கூட்டமும் காடையர்களும் வெகுண்டெழுந்தனர். பொலிஸ்மா அதிபர் உருத்திர ராஜசிங்கம், உதவிப் பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, பொலிஸ் அத்தியட்சகர் கபூர், சார்ஜண்ட் வெலிகல ஆகியோர் இராணுவ உயர் அதிகாரிகள் முன் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர். இராணுவம் இதை உடன் தடுத்திருந்தால் பிரச்சனையின் வேகத்தை கொஞ்சமாவது குறைத்திருக்கலாம்.

1983ம் ஆண்டு ஜுலை மாதம் 24ம் திகதி இரவு பொறளைச் சந்தியில் உள்ள தமிழருக்குசொந்தமான உணவு விடுதி ஒன்று தாக்கி நொறுக்கப்பட்ட முதல் நிகழ்வின் கலவரம் ஆரம்பமாகியது. செய்திகள் காட்டுத்தீ போல் பரவியது போன்று கலவரமும் திம்பிரிகசாய, நாரான்பிட்டிய கிரில்லப்பனை, அன்டர்சன் பிளட் போன்ற இடங்களுக்கு பரவி பின் கொழும்பை ஆக்கிரமித்து கொண்டது. ஜுலை மாதம் 25ம் திகதி அதிகாலை கலவரம் தொடங்கியமை. தெரியாமல் கிருலப்பனை சந்தியில் ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்த தமிழர் ஒருவர் சின்னாபின்னமாக வெட்டிக் கொல்லப்பட்டார். இதுவே இக் கலவரத்தின் முதல் கொலையாகும்.

இங்கு மிகக் கொடுமையானது சிங்கள சிறைக்கைதிகளை கொண்டே தமிழ் சிறைக்கைதிகளை கொன்ற வெலிக்கடை கொலைச் சம்பவம் என்பதுடன் கொல்லப்பட்ட ஈழப்போராளிகளின் உடல்களை அவர்களது உறவினர்கள் யாரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் தங்கியிருந்த பி3 என்னும் சிறைப்பிரிவிலேயே கொலைகள் ஆரம்பித்தன. அந்தப் பிரிவில் மரணஓலங்கள் கேட்டதே தவிர எங்களால் ஒன்றையும் பார்க்க முடிந்ததில்லை. என வேறு பகுதிகளில் இருந்து தப்பிய ஈழப் போராளிகள் கூறுகின்றனர். வெலிக்கடை சிறைவாசலுக்கு பக்கத்தில்

(19ஆம் பக்கம் பார்க்க)

# பிரிவால் உண்டாகும் துயர்



மனநல ஆலோசகர்
- அஸ்ஹர் அன்ஸார்

எம்மோடு நெருங்கிப்பழகும் ஒருவர் எம்மை விட்டுபிரிந்து செல்லும்பொழுதும், பிரிந்து சென்று சில காலங்கள் கழிந்து போன போதும் ஏற்படும் மனக்கவலையை நாம் அனுபவித்திருப்போம். நாம் அதை மற்றவர்களுடன் பரிமாறிக்கொள்ளாவிட்டாலும் கூட பிரிவினால் ஏற்படும் கவலையை உணர்ந்து கொள்கிறோம்.

சில சமயம் எம்மை அறியாமலேயே அது பல உடல், உள மாற்றங்களை ஏற்படுத்தவும் செய்கின்றது. "பிரிவைத்தாங்க முடியாது, பிரிவு கொடூரமானது என் பிள்ளைகளையும் மனைவியையும் விட்டு என்னால் பிரிந்து இருக்க முடியாது. நீண்ட காலமாக பாடசாலையில் ஒன்றாகச் சேர்ந்திருந்த நண்பர்களை பிரிந்து செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது". இப்படி பிரிவை தாங்கமுடியாமல், அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் நம்மில் சிறுவர் முதல் பெரியோர் வரை தம் உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

பெரியவர்களைப் போன்று சிறுபிள்ளைகளும் குழந்தைகளும் பிரிவால் ஏற்படும் கவலையை அனுபவிக்கத்தான் செய்கிறார்கள், வளர்ந்த நாம் வாழ்வின் தேவைகளையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்து பிரிவிற்கு முகம்கொடுத்து வாழக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்றிருந்தாலும் குழந்தைகளும் பிள்ளைகளும் அதற்கு முகம்கொடுக்கக் கூடிய மனதைரியத்தை பெறாததனால் பிரிவால் இலகுவாக தாக்கமடைகின்றனர்.

குழந்தைகளின் வாழ்வில் விருத்தியிலும் வளர்ச்சிக் கட்டங்களிலும் பெற்றோரைவிட்டு பிரிந்திருத்தல் என்பது அவர்களுக்கு கடுமையான தாக்கமாக கருதப்படும். இருந்தாலும் அது ஒரு சாதாரண நிகழ்வாகவே கருதப்படும். பிள்ளைகள் வளர்ந்து செல்லும் போது இதை புரிந்துகொள்ள ஆரம்பிப்பதுடன் அதற்கு முகம்கொடுக்க வேண்டும் என்ற உணர்வைப் பெற்றுக்கொள்ளும் போது பிரிவால் ஏற்படும் கவலையிலிருந்து படிப்படியாக விடுதலை பெற்று பெற்றோரின் பிரிவு நிரந்தரமானதல்ல அது தற்காலிகமானது என்ற அறிவையும் வளர்த்துக் கொள்கிறது.

பெற்றோர் அருகில் இல்லாமல் தமது இயல்பான வேலைகளைச் செய்ய முடியாமல் அவதிப்படும் பிள்ளைகளும் உள்ளனர். பெற்றோர்கள் தம்மை கண்காணித்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை அடிக்கடி உறுதி செய்து கொண்டு ஏதோ குழம்பியிருப்பது போன்று தமது வேலைகளை செய்யும் பிள்ளைகளையும் பார்க்கின்றோம்.

பெற்றோர் அல்லது தனக்கு நெருக்கமானோர் பக்கத்தில் இல்லாமல் பாடசாலையில் இருக்கவும் ஏனைய செயற்பாடுகளில் பங்கேற்கவும் முடியாமல் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துமானால் அல்லது பெற்றோர் பக்கத்தில் இருக்கும் போதே தனது வேலைகளை செய்ய வேண்டும் என்ற உணர்வோடு இருக்குமானால் அது பிள்ளைக்கு பிரிவால் ஏற்படும் கவலையின் வெளிப்பாடாக இருக்கலாம்.

குழந்தை பிறந்து அதன் முதல் வருடத்திலேயே பிரிவால் ஏற்படும் துயரை அனுபவிக்க ஆரம்பிக்கிறது. இது சில சமயம் 4வருடங்கள் வரை நீடித்துச் செல்லவும் முடியும். ஆனால், பிள்ளை முகம்கொடுக்கும் பிரிவின் அளவும் தன்மையும் காலமும் பிள்ளைக்கு பிள்ளை வேறுபடலாம். இருந்தபோதிலும் பிள்ளைகள் வளர்ந்த போதும் கூட தாயை தந்தையை பிரிந்திருப்பது சாதாரணமாகவேனும் அவர்களுக்கு கவலையை ஏற்படுத்தவே செய்யும்.

சில குழந்தைகளின் பிரிவுத்துயர் நீங்காமல் சில சமயம் அப்படியே நீண்ட காலத்திற்கு தாக்கம் செலுத்தவும் செய்கிறது. அதை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தமாட்டார்கள். சிலசமயம் அதை புரிந்து கொள்ளவும் பெற்றோரால் முடியாமல் போகும். பிரிவால் ஏற்படும்துயர் பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் செல்லவும், பாட வேலைகளில் ஈடுபடவும், நண்பர்களோடு இருக்கவும் முடியாமல் மாதக்கணக்கில் நீடித்து அவர்களுக்கு அவதியாக இருக்குமானால் அதுவொரு அசாதாரண விடயமாகவே கருதப்படும்.

### பிரிவுத்துயரின் அறிகுறிகள்

- பிரிவால் துயர்கொள்ளும் பிள்ளைகள் பிரிவு பற்றி தொடர்ந்து அல்லது எப்பொழுதும் கவலையும் அச்சமும் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் மிகவும் நேசிக்கும் யாருக்காவது ஏதாவது ஆபத்துக்கள் ஏற்படுமோ என்று பயப்படுவார்கள். உதாரணமாக, பெற்றோரை விட்டுப் பிரிந்திருக்கும் போது பெற்றோருக்கும் ஏதும் நோய்கள் அல்லது துன்பங்கள் ஏற்படுமோ என்று கவலைப்படுவார்கள்.
- பிரிவுத்துயரால் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளை தனது தாயை, தந்தையை பிரிந்துவிட்டேன் என்ற எண்ணம் ஏற்பட்டவுடன் சட்டென்று சலனமும் அதிர்ச்சியும் அடைந்து தான் செய்ய வேண்டிய வேலைகளிலிருந்து விலகிக் கொள்வதற்காக ஏதாவது நோய் அறிகுறிகளை வெளிப்படுத்துவார்கள்.
- பெற்றோரை விட்டு பிரிந்துவிட்டால் ஏதாவது எதிர்பாராத விடயங்கள் நிகழ்ந்து பிரிவை நீடிக்கச் செய்து விடுமோ என்று பயப்படுவார்கள்.
- யாராவது என்னை எங்காவது கொண்டுசென்று விடுவார்களோ அல்லது நான் காணாமல் போய் விடுவேனோ என்றும் எண்ணுவார்கள்.
- தனிமையில் இருக்கவும் தனியாக வேலைகளைச் செய்யவும் பயப்படுவார்கள்.
- தமது பாதுகாவலர்களோடு இருக்க வேண்டும் என்னபதற்காக வேண்டி பாடசாலைக்குப் போவதிலிருந்து தவிர்ந்து கொள்வார்கள்.
- பாடசாலை நாட்களில் தலைவலி, வயிற்றுவலி போன்ற நோய்கள் பற்றி முறையிடுவார்கள்.
- இரவில் உறங்கச் சென்ற பின் பிரிவுத்துயரால் உள்ள பிரச்சனைகளின் விளைவால் பயங்கரமான கனவு காண்பார்கள் அல்லது அதுபற்றி முறையிடுவார்கள்.
- தமது பெற்றோர் அல்லது நெருக்கமானவர்கள் இல்லாமல் தனியாக உறங்கவோ அல்லது பக்கத்தில் யாரும் இல்லாமல் உறங்கவோமாட்டார்கள். சில சமயம் உறக்கத்தில் கட்டிலில் சிறுநீர் கழிக்கவும் செய்வார்கள்.

### பிரிவுத்துயருக்கான காரணங்கள்

மனஉழைச்சல் மிக்க அல்லது கவலை அதிர்ச்சி நிறைந்த ஏதாவது நிகழ்வுகள் குழந்தையின் வாழ்வில் ஏற்படுதல். உதாரணமாக நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படல், நெருக்கமானவரின், நேசிக்கும் ஒருவரின் இறப்பு, பெற்றோர் பிரிவு, சண்டை சச்சரவுகள் சூழல்மாற்றம். புதியவீடு, புதிய பாடசாலை, புதியசூழல் போன்ற இடங்களுக்கு மாறிச்செல்லுதல். பெற்றோரின் அளவுக்கு மீறியகட்டுப்பாடு, பெற்றோரின் மனஉழைச்சல், மனஅழுத்தங்கள் போன்ற பிரிவுத்துயரை ஏற்படுத்தலாம்.

### மீள என்ன செய்ய வேண்டும்?

பிரிவுத்துயர் பற்றிய சரியான அறிவையும் அதை எவ்வாறு பிள்ளை அனுபவிக்கின்றது என்பதையும் பெற்றோர் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

- பிள்ளையின் உணர்வுகளை மதித்து அவற்றுக்கு அமைதியாக செவிமடுக்க வேண்டும். "இது தனிமையில் இருக்கிறேன் அல்லது தனிமைப்பட்டிருக்கிறேன்" என்ற உணர்வோடு இருக்கும் பிள்ளைக்கு மன அமைதியையும் ஆறுதலையும் கொடுக்கும்.
- முடியுமானால் எந்த விடயத்தால் பிள்ளை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை கண்டறிந்து அதனால் அனுபவிக்கும் உடல், உள உணர்வுகளை வெளிப்படுத்த அவகாசம் கொடுக்க வேண்டும்.
- பிள்ளையின் குறைபாடுகளை, பின்னடைவுகளை நேரடியாக சுட்டிக்காட்டக் கூடாது. ஏன் நீ சின்ன விடயத்துக்கும் பயப்படுகிறாய். நீ ஒரு பயந்தாங்கோழி, எல்லாவற்றையும் செய்ய உனக்கு நாங்க வேண்டும், போன்ற விடயங்களைச் சொல்லி இன்னும் பிள்ளையை பாதிப்படைய விடக்கூடாது.
- பிள்ளையின் பிரச்சினையை பெற்றோர் புரிந்திருப்பதையும் அதை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு முறயையான பல வழிகள் உண்டு என்பதையும் எடுத்துக்கூற வேண்டும்.
- பெற்றோர் அமைதியாகவும் நிதானமாகவும் இருப்பது பற்றி பிள்ளைக்கு விளங்க வேண்டும். பிள்ளையின் செயற்பாட்டால் பெற்றோர் கோபமடைந்து குழம்பிப்போய் இருப்பதை பிள்ளை காணப்படாது.
- பிள்ளையின் சிறிய முயற்சிகளை வெகுவாகப் பாராட்டவேண்டும். அது பிள்ளைக்கு மனத்தைரியத்தை கொடுக்கும்.
- உடற்பயிற்சி, விளையாட்டு, பூரண உணவு, உறக்கம் கிடைப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

> **பிரிவால் ஏற்படும்துயர் பிள்ளைகளுக்கு பாடசாலைக்குச் செல்லவும், பாட வேலைகளில் ஈடுபடவும், நண்பர்களோடு இருக்கவும் முடியாமல் மாதக் கணக்கில் நீடித்து அவர்களுக்கு அவதியாக இருக்குமானால் அதுவொரு அசாதாரண விடயமாகவே கருதப்படும்.**

- ரி.வி மற்றும் கணனிகளில் பயங்கரமான கார்டூன்கள், படங்கள் பார்ப்பதை பெற்றோரும் ஏனைய பிள்ளைகளும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- பெற்றோரை விட்டுப் பிரிந்து தனிமையில் விளையாடும் பிள்ளைகளைக் காட்டி எமது பிள்ளையை உற்சாகப்படுத்த வேண்டும்.

### சிகிச்சை முறைகள்

பிரிவுத்துயரால் அவதியுறும் பிள்ளைகளுக்கான முறையான உளவியல் சிகிச்கைள் ஏராளமாக இருக்கின்றன தேவைப்படும் பட்சத்தில் பொருத்தமானவர்களை நாடி சரியான சிகிச்கைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். குழந்தை உள மருத்துவர், குழந்தை உளவியல் நிபுணர்கள், தொழில்சார் மன நல ஆலோசகர்கள் குழந்தை அனுபவிக்கும் பிரிவுத்துயரின் தீவிரத்தன்மையை அடையாளம் கண்டு பொருத்தமான சிகிச்சைகளை மேற்கொள்ள வழி காட்டுவார்கள்.

பேச்சு முறை சிகிச்சை, விளையாட்டு முறை சிகிச்சை, பெற்றோருக்கான மனநல ஆலோசனை, பாடசாலை, கல்வி சார்ந்த ஆலோசனை என்பனவும் மிகவும் முக்கியமான சிகிச்சை முறைகளாக இருக்கும்.

# தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய உண்மைகளும் பொய்மைகளும்

• மாவலியான்

இல - 07


**முன்று தோட்டங்களில் டாக்டரைவிட மருந்து கலப்பவர் கைராசிக்காரர் எனக் கருதப்பட்டார். எல்லா டிஸ்பென்சரிகளிலும் கைலஞ்சம் கொடுப்பவருக்கே தரமான மருந்து கிடைத்தது. பெரும்பாலான டிஸ்பென்சரிகளிலிருந்து தோட்டத்தொழிலாளருக்காக வழங்கப்படும் மருந்துகள் கள்ளச்சந்தையில் விற்கப்படுகின்றன.**

### 07 சுகாதாரம்

சத்தில்லாத உணவு, கந்தலான உடை அணியாமை, லைன் காம்பராக்கள் இந்நிலையில் சுகாதாரமும் சௌக் கியமும் இம்மக்களிடையே எவ்வா றிருக்கும் என்பதை அதிகம் விளக்கத் தேவையில்லை.

எமது ஆய்வின்படி 40 தோட்ட ங்களில் 8ல் மாத்திரமே மலசல கூட ங்கள் பயன்படுத்தக்கூடிய நிலை யில் இருந்தன. 21 தோட்டங்களில் தொழிலாளர் தேயிலைத்தோட்டங் களையும் 16 தோட்டங்களில் நீரோ டைகளையும், 5 தோட்டங்களில் ஆறுகளையும் மலசலகூடங்களா கப் பயன்படுத்தினர். எல்லாத் தோட்டங்களிலும் வீட்டுமுற்றங்கள் சிறுவர்களால் மலசலகூடமாக்கப் பட்டிருந்தன. இங்கு 243 பேருக்கு ஒரு மலசலகூடம்தான் அதுவும் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக் கவில்லை. இங்கு விநியோகிக்கப்ப டும் நீரின் தூய்மையைப் பற்றி எவரும் உத்தரவாதமளிக்க முடியாது.

42 குடும்பங்களுக்கு ஒரு தண்ணீர்க்குழாய் என்ற விகிதத்தில் அமைந் திருந்தது. இதனால் காலையில்



வேலைக்குச் செல்வதற்கு முன்னர் குழாய்களில் மக்கள் அலை மோது கின்றனர். ஓய்வுபெற்ற வயோதிபர்கள் தகரத் தொட்டிகளில் நீரை சேகரித்து உதவுவதால் எல்லோருக்கும் குடிப் பதற்கு நீர் கிடைக்கிறது. ஆனால் குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் ஆறுகளுக்கும் அருவிகளுக்கும் சில சமயங்களில் 3 மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பெண் களுக்கு விடுமுறை நாட்களில் கூட ஓய்வு கிடைப்பதில்லை. விறகு தேடுவதற்கும் குளிப்பதற்கும் நேரம் சரியாகிவிடுகிறது.

### 08 மருத்துவ வசதி

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 40 தோட் டங்களில் 8ல் மாத்திரம் டிஸ்பென் சரிகள் இருந்தன. அதில் ஒரு மருத்து வராவது M.B.B.S படித்தவராக இருக்க வில்லை. அவற்றில் 4 டிஸ்பென்சரிக ளிலிருந்து தோட்டத் தொழிலா ளரை விட அயலில் இருந்த நகரத்து வர்த்தகர்களும் உத்தியோகத்தரும் கூடுதலான சேவையைப் பெற்றனர்.

தோட்டத் தொழிலாளருக்கான டிஸ் பென்சர்கள் நல்ல வருவாய் பெற்றனர். ஒரு மருத்துவர் கருச்சிதைத்தல் போன்ற காரியங்களுக்கு பெயர் போனவராக இருந்தார்.

மூன்று தோட்டங்களில் டாக்ட ரைவிட மருந்து கலப்பவர் கைராசிக் காரர் எனக் கருதப்பட்டார். எல்லா டிஸ்பென்சரிகளிலும் கைலஞ்சம் கொடுப்பவருக்கே தரமான மருந்து கிடைத்தது. பெரும்பாலான டிஸ் பென்சரிகளிலிருந்து தோட்டத் தொழிலாளருக்காக வழங்கப்படும் மருந்துகள் கள்ளச்சந்தையில் விற்கப் படுகின்றன.

❖ அரசாங்க இலவச ஆஸ்பத் திரியின் கதவுகள் தோட்டத் தொழி லாளரைப் பொறுத்தளவில் மூடப் பட்டுள்ளன. தோட்ட நிர்வாகத்தின் கடிதமின்றி தோட்டத்தொழிலாளர் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனு மதிக்கப்பட மாட்டார்கள்.

❖ டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சமூகவியலாளர் டாக்டர் சார்லஸ் பெண்ட்லே (Dr. Charles Pendley) 40 தோட்டங்களில் 1982ம் ஆண்டு தாம் நடாத்தி முடித்த ஆய்வின் அடிப்படையில் பின்வருமாறு கூறு கிறார். மந்தபோசாக்கு தோட்டத் துறையில் கர்ப்பவதிகளின் மத்தியில் சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது. மந்த போசாக்கு இன்று தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளில் ஒன்று.

❖ பிரசவகால நலன்கள் அவர் கூறுகிறார் பிரசவம் சம்பந்தமான சட்டங்கள் பிரசவத்திற்கு முன்னர் இரு வாரங்களும், பிரசவத்திற்கு பின்னர் இரு வாரங்களும் லீவு வழங்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் பிரசவத்திற்கு இரண்டு மூன்று நாட்கள்வரை வேலை செய்துவிட்டு பிரசவமான ஒரு சில நாட்களில் வேலைக்குத் திரும்புவது பற்றிய புகார்கள், வெகுசகஜமாக உள்ளன.

❖ இத்தகைய காரணங்களால் தோட்டத்தொழிலாளரின் நிலைமை மோசமாக உள்ளதை பின்வரும் புள்ளி விபரங்கள் தெளிவாகப் புலப்படுத்து கின்றன.

1. சிசு மரணம்: - பிறக்கும் 1000 குழந் தைகளுக்கு

| ஆண்டு | நாடு முழுவதும் | தோட்டத் துறை |
|---|---|---|
| 1969 | 52.7 | 110.00 |
| 1979 | 48.0 | 114.3 |

2. பிரசவத்தின்போது தாய் மரணம் (1000க்கு)

| நாடுமுழுவதும் | தோட்டத்துறை |
|---|---|
| 1.5 | 2.7 |

1. கற்பினிகள் மரணம் (1000க்கு)

| நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|
| 56 | 144 |

4. ஆயுட் காலம்: -

| | நாடு முழுவதும் | தோட்டத்துறை |
|---|---|---|
| | 66.1 | 52.1 |
| ஆண் | 64.2 | 50.1 |
| பெண் | 67.2 | 54.1 |

**பிள்ளைக் காம்பரா: -**

இது உண்மையில் தோட்டத்தொழி லாளரின் பிள்ளைகளுக்கான சேவை யாக அல்லாமல் வேலைக்குச் செல் லும் தாய்மார்களின் தடையை நீக்கி சுரண்டலை எளிதாக்கும் ஒரு ஏற்பாடாகவே உள்ளது. பெரும் பாலான பிள்ளைக்காம்பரா தோட் டத் துறைமாரின் மாட்டுத் தொழு வத்தைவிடவும் மிக அசுத்தமாக உள்ளது. இங்கே ஆணவம்பிடித்த ஆயா ஒருத்தி இருப்பாள். அவளி டம் தம் குலக்கொழுந்தை ஒப்படைத் துவிட்டு தாய்மார்கள் வேலைக்குச் செல்வார்கள். பால் கொடுக்க வேண் டிய நேரத்தில் வியர்வை சிந்த ஓடோடி வந்து பால் கொடுப்பார்கள்.

குழந்தை தாயின் பாலுடன் வியர் வையும் அருந்தி வளர்கிறது. தற்போது தாதியாக பிற இனத்தவர் குறிப்பாக சிங்களவர் நியமிக்கப்படுவது இம் மக்களிடையே அதிருப்தியை ஏற் படுத்தியிருப்பதில் நியாயம் இருக் கிறது. டாக்டர் பெண்ட்லே அது பற்றிக்கூறுகிறார். பிள்ளைக் காம்ப ராவை பயன்படுத்துவோருக்கு ஆயா வின் மனோபாவம், மொழி, சாகி யம் ஆகிய காரணங்கள் அவளை ஏற் றுக்கொள்ளவிடாமல் தடுக்கிறது. பெற்றோருக்கு அவள் மீது நம்பிக்கை கிடையாது. குழந்தைகளுக்கோ அவளது பேச்சிலோ சரீர ரீதியிலோ தொடர்பு கிடையாது. அவளது இன வேறுபாட்டைவிட மொழியாற்ற லும் தொழிலில் காட்டும் மனோ பாவமுமே பிரதானமாக விமர்சனத் துக்குள்ளாகின்றன. இந்தப் பிள்ளைக் காம்பராவுக்கு சர்வதேச நிறு வனங்கள் வழங்கும் பால்மா, திரி போஷா ஆகியவை கள்ளச் சந்தைக் குப் போகின்றன. குழந்தைகள் மந்த போசாக்கில் வாடுகின்றன.

### 09 கல்வி

மலையகத் தொழிலாளரின் கல்வி பற்றி தனியானதொரு நூல் வெளி யிடலாம். எமது இலவசக் கல்வி யின் லட்சணத்தையும் அதில் நிலவும் வர்க்கத்தன்மையையும், படம் பிடித் துக் காட்ட இதைவிட சிறந்த தலை ப்புக் கிடைக்காது. இருப்பினும் இந்நூ லின் நோக்கத்தையும் அளவையும் கருத்திற் கொண்டு சில விபரங்களை மாத்திரம் இங்கு தருவோம்.

1. 16.05.1983 மாலை 6.00 மணி வானொலிச் செய்தியில் அமைச்சர் திரு. காமினி திசாநாயக்காவின் கூற்றுப்படி இலங்கையில் கல்வி அறிவுள்ளோரின் தொகை 82 வீதம், ஆனால் தோட்டத்தொழிலாளர் மத் தியில் இது தலைகீழாக உள்ளது. இவர்களில் 80 சதவீதமானோர் கல்வி யறிவு இல்லாதோர்.

2. தோட்டத்துறையில் 5 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட கல்வி வயதில் 66.7 வீதத்தினர் பாடசாலை செல்வதில்லை. இதில் ஆண்கள் 51.4 வீதம் பெண்கள் 72.0 வீதத்தினர். (மூலம் எமது ஆய்வு)

3. கல்வி மட்டங்கள் விகிதாசாரம்

| | நாடு முழுவதும் | நகரம் | கிராமம் | தோட்டப் புறம் |
|---|---|---|---|---|
| பாடசாலை செல்வோர் | 17.5 | 16.1 | 15.8 | 38.0 |
| ஆரம்ப வகுப்புகள் | 44.6 | 37.8 | 45.4 | 51.0 |
| ஜி.சி.ஈ (சாதாரணம்) சித்தியடைந்தோர் | 6.6 | 11.0 | 6.3 | 3.3 |
| ஜி.சி.ஈ (உயர்தரம்) சித்தியடைந்தோர் | 6.9 | 1.0 | 0.8 | 0.0 |

4. எமது ஆய்வின்படி தோட்டத் துறையில் 38.8 வீதத்தினருக்கு (ஆண் 27.9 வீதம், பெண் 49.8 வீதம்) கையெழுத்துத் தானும் வைக்கத் தெரியாது. 33.4 வீதத்தினருக்கு (25.6 வீதம் ஆண் 41.2 வீதம் பெண்) கையெழுத்து மாத்திரமே வைக்கத்தெரியும் எழுத வாசிக்கத் தெரியாது, எனவே 72.2 வீதத்தினர் கல்வியறிவற்றோர்.

(தொடரும்)

# திருமலை நகர சிங்களக் குடியேற்றங்கள்

– சி.அ.யோதிலிங்கம்

திருகோணமலை மாவட்டத்தினை வடபகுதி, மத்தியபகுதி, தென்பகுதி என மூன்று பகுதிகளாக பிரிக்கலாம். இவற்றில் வடபகுதியாக நிலாவெளிக்கு மேற்பட்ட பகுதியினையும் தென் பகுதியாக மூதூர் பகுதியையும், மத்திய பகுதியாக திருகோணமலை நகரசபை பகுதிகளையும் பட்டணமும் சூழலும் பிரதேசசபைப் பகுதிகளையும் குறிப்பிடலாம்.




நகரக் குடியேற்றங்கள் என்பது இவ் மத்திய பிரதேசத்தை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. நகரச் சூழலாக இருப்பதனால் பாரிய விவசாய திட்டங்களை மேற்கொள்ள முடியாது. இதனால் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத்திட்டங்களல்லாத ஏனைய வழிமுறைகளினூடாகவே குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக மத்திய பிரதேசத்தில் மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் பல இருப்பதனால் அவைதான் குடியேற்றங்களுக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

திருகோணமலை மாவட்ட அரசாங்க செயலக நிர்வாகம் சிங்களவர்களின் கைகளில் இருப்பதனால் குடியேற்றச் செயன்முறைகள் அவர்களுக்கு இலகுவாகி விடுகின்றன. இதற்கு வசதியாகவே சிங்களவர் ஒருவர் அரசாங்க அதிபராக தொடர்ந்து நியமிக்கப்பட்டு வருகின்றார். போர்க்காலங்களில் நகரச்சூழலுக்கு வெளியே பாரிய குடியேற்றங்களை மேற்கொள்ள முடியவில்லை. இதன்ால் போர்க்காலங்களில் நகர்ப்புறங்களிலேயே குடியேற்றங்களை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழர்கள் சற்றுச்செறிவாக வாழ்ந்ததினால் அங்கு காணிகளைப் பெறுவது இலகுவானதாக இருக்கவில்லை. பொது மக்களின் காணிகளைத் தவிர்த்தால் அங்கு மீதமாக இருந்த காணிகள் நகரசபைக்கு சொந்தமான காணிகளும், மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளும்தான். நகரசபை தொடர்ச்சியாகவே தமிழர்களின் கைகளில் இருந்ததினால் அதனைக் கைப்பற்ற முடியவில்லை. அதைவிட நகரசபைக்குரிய காணிகள் நகரசபையின் தேவைகளுக்கே போதுமானதாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் கூட சில காணிகள் பறிக்கப்பட்டன. இதற்கு உதாரணம் - திருமலை முற்றவெளிப்பகுதியில் உள்ள கடற்கரைப் பகுதி கைப்பற்றப்பட்டமையாகும். திருகோணமலைப் பத்திரகாளி கோவில் சுவாமி தீர்த்தமாடும் நிலமே அப்பிரதேசமாகும். அவ் இடத்தினை ஆக்கிரமித்து குடியிருப்புகளை உருவாக்கியதுமல்லாமல் "சமுத்திரகம" என அப்பிரதேசத்திற்கு அவர்கள் பெயர் ஒன்றினையும் சூட்டியிருக்கிறார்கள்.

நகரசபை எல்லைக்குட்பட்ட காணிகளில் வியாபாரக் குடியேற்றம் சிங்களவர்களின் ஆதிக்கத்திலேயே இருக்கின்றது. வியாபாரக்குடியேற்றங்களையும், மத ரீதியான குடியேற்றங்களையும் நகர சபையினால் தடுக்க முடியவில்லை. நகரில் மீன்சந்தை, மரக்கறிச்சந்தை என்பன தற்போதும் சிங்களவர்களின் ஆதிக்கத்திலேயே இருக்கின்றது. மரக்கறிச்சந்தை ஏலத்திற்கு விட்டபோது தமிழர் ஒருவர் கூடுதலான விலை கொடுத்து குத்தகையை வாங்க முற்பட்டபோதும் நகரசபையினால் அதனைக் கைமாற்ற முடியவில்லை. கைமாற்ற மறுத்த போது அதனைப் பலவந்தமாக மேற்கொள்ள பொலிசாரின் உதவி தேவையாக இருந்தது. ஆனால் பொலிசார் சிங்களவர்களாக இருந்தமையினால் அவ் உதவிகளை வழங்க முன்வரவில்லை. இறுதியில் நகரசபை பல லட்சம் ரூபா செலவிட்டு தமிழ்ப்பகுதியில் புதிய சந்தையினை உருவாக்கிய போதும் புதிய சந்தையை திறக்க பழைய சந்தையில் ஆதிக்கம் பெற்ற சிங்களவர்கள் விடவில்லை. படையினரைக் கொண்டு அதனை அவர்கள் தடுத்தனர்.



இச்சந்தையை ஒட்டித்தான் சிங்களவர்கள் அத்து மீறி அமைத்துக்கொண்ட கடைகளும் இருக்கின்றன. பஸ்நிலையமும் இவ்இடத்தில் தான் இருக்கின்றது. தூரப்போக்குவரத்துக்கான பஸ் சேவையும் சிங்களவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. தூர சேவையை தமிழர்கள் நடாத்தமுடியாது. திருகோணமலையிலிருந்தான வெளிவர்த்தகமும் சிங்களவர்களின் கைகளில் தான் இருக்கின்றது. மரக்கறிவர்த்தகம், மீன்வர்த்தகம், எல்லாம் சிங்களவர்களின் கைகளில் தான்.

இவ்வாறு சந்தை, பஸ் நிலையம், அத்து மீறிய கடைகள், என்பனவற்றை மையமாக வைத்து சிங்களவர்களுக்கான ஒரு பாதுகாப்பு வலயமே நகரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் சிங்கள அடையாளத்திற்காகத் தான் பஸ் நிலையத்தில் புத்தர் சிலையும் வைக்கப்பட்டது. அருகே வடபகுதியில் இருக்கின்ற ஸ்ரீமாபுர, விஜிதபுர, குடியேற்றங்களும், கிழக்குப்பகுதியில் இருக்கின்ற "சமுத்திரகம" குடியேற்றமும் இப்பாதுகாப்பு வலயத்திற்கு அரணாக இருக்கின்றன. சிங்களவர்கள் நடாத்துகின்ற போராட்டங்கள் அனைத்தும் இப்பாதுகாப்பு வலயப் பகுதியான மணிக்கூண்டு கோபுரப் பகுதியிலேயே நடாத்தப்படுகின்றன. இவர்களுடைய செயற்பாடுகளுக்கு படையினரின் ஒத்துழைப்பு தாராளமாகவே கிடைக்கின்றது. சிங்கள அரசியற் தலைவர்களின் ஒத்துழைப்பு முன்னர் அவர்களுக்கு பெரிதாக கிடைத்தது எனக் கூற முடியாது. சிங்கள வியாபாரிகளும் பௌத்த பிக்குகளும் இணைந்து படையினரின் உதவியுடனேயே செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

திருகோணமலை நகரத்தை பொறுத்தவரை கடற்படையினரின் ஆதிக்கமே அதிகம். மிகப்பெரிய நிலப்பரப்பில் ஆசியாவிலேயே தலை சிறந்த பிரித்தானியர் உருவாக்கிய கடற்படை முகாம் நகரப்பகுதியில் இருக்கின்றது. பிரித்தானியர் உருவாக்கிய கடற்படை முகாம் சுதந்திரத்தின் பின்னர் முன்னைய வளங்களுடன் இலங்கை கடற்படையிடம் கைமாறியிருக்கின்றது. இவர்களால் எதிர்காலத்தில் ஆபத்து வரலாம் என்பதனால் தான் கடற்படைத்தளத்தினை பிரித்தானியர் கையளிக்கும் போது அப்போதைய தமிழரசுக்கட்சியினர் எதிர்த்திருந்தனர். ஆனாலும் கையளிக்கப்பட்டது.

**நகரசபைக்குரிய காணிகள் நகரசபையின் தேவைகளுக்கே போதுமானதாக இருக்கவில்லை. அப்பிடியிருந்தும் கூட சில காணிகள் பறிக்கப்பட்டன. இதற்கு உதாரணம்- திருமலை முற்ற வெளிப்பகுதியில் உள்ள கடற்கரைப் பகுதி கைப்பற்றப்பட்டமையாகும். திருகோணமலைப் பத்திரகாளி கோவில் சுவாமி தீர்த்தமாடும் நிலமே அப்பிரதேசமாகும். அவ் இடத்தினை ஆக்கிரமித்து குடியிருப்புகளை உருவாக்கியதுமில்லாமல் "சமுத்திரகம" என அப் பிரதேசத்திற்கு அவர்கள் பெயர் ஒன்றினையும் சூட்டியிருக்கிறார்கள்.**

நகரசபைக் காணிகளுக்குள் நடைபெறுகின்ற அடுத்த குடியேற்றம் பௌத்தமத குடியேற்றங்களாகும். நகரசபை எல்லைக்குள் வெற்றுக்காணிகள் குறைவாக இருப்பதனால் பெரிய விகாரைகளைக் கட்டமுடியாது. இதனால் சிறிய புத்தர் சிலைகளைக் கொண்டு வந்து வைத்து விட்டு அதனைச் சுற்றி வேலி அமைப்பதன் மூலம் அக்காணிகளைக் கைப்பற்றும் செயற்பாடு நடைபெறுகின்றது. அந்தச் சிலைகள் கூட பாதுகாப்பான நிலையில் சந்தைப்பகுதி, படையினரின் முகாம்கள் பொலிஸ் நிலையங்கள் என்பவற்றிற்கு அருகில்தான் வைக்கப்படுகின்றது. பேரினவாதிகளைப் பொறுத்தவரை இன்று இலகுவான நில ஆக்கிரமிப்புக்கருவி புத்தர் சிலைகளே ஆகும். இதற்கு உதாரணமாகத்தான் கோணேசர் கோபுரத்தையே மறைக்கக் கூடியளவிற்கு கோட்டைக்குள் இருக்கும் புத்தர்சிலை வியாபித்து நிற்கின்றது. எதிர்காலத்தில் கோணேசர் கோவிலைச் சுற்றியுள்ள கோட்டைப் பிரதேசம் சைவ புனித பிரதேசமாக மாறிவிடலாம் என்ற அச்சம் தான் இந்த வானளாவிய புத்தர் சிலையின் தோற்றத்திற்கு காரணம். இந்த புனித பிரதேசப் பிரச்சனையை ஒட்டி தமிழரசுக்கட்சி அப்போதைய அமைச்சரான மு.திருச்செல்வம் அமைச்சர் பதவியினை இராஜினாமா செய்தார் என்பது பழைய வரலாறு. புனித பிரதேச நிர்மாணத்தை முன்னர் ஏற்றுக்கொண்ட டட்லி அரசாங்கம் பின்னர் பௌத்த பிக்குகளின் எதிர்ப்பினை ஒட்டி மறுதலித்தமையே இராஜினாமாவுக்கு காரணம்.

நகரசபை எல்லைக்குள் இருக்கும் மத்திய அரசாங்கத்தின் காணிகளைப் பொறுத்தவரை வெற்றுக்காணிகள் மிகக் குறைவு. மாவட்டத்தின் தலைநகர் என்ற வகையில் அனைத்து திணைக் களங்களும் இங்கு தான் இருக்கின்றன. திணைக்கள கட்டிடங்களுக்கே காணிகள் பற்றாக்குறையாக இருக்கும் போது குடியேற்றங்களை மேற்கொள்வது இலகுவான ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் புறநகர்ப்பகுதியான பட்டினமும், சூழலும் பிரதேசத்தில் இவ்வாறான காணிகளில் பல ஆக்கிரமிக்கப்பட்டன.


நகரசபை எல்லைக்குள் கோவில் காணிகள் பல ஆக்கிரமிக்கப்பட்டன. மடத்தடி கிருஸ்ணன் கோவிலுக்கு பின்புறமாக இருக்கும் பிள்ளையார் கோவில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும். இக்காணிகளை ஆக்கிரமித்த சிங்களவர்களுக்கு சட்டபூர்வமாக வழங்க 2002ம் ஆண்டு மீன்பிடி அமைச்சர் முயற்சி செய்தார். காணி முழுவதையும் மீன்பிடி அமைச்சுக்கென சுவீகரித்து விட்டு பின்னர் ஆக்கிரமித்தவர்களுக்கு வழங்குவதே அமைச்சரின் நோக்கமாக இருந்தது. ஆனால் ஆக்கிரமித்தவர்களிடம் எந்தவித ஆவணமும் இல்லாததால் இம் முயற்சி இன்னமும் நிறைவேறவில்லை.

நகரத்தின் முற்றவெளிப்பக்கத்தில் கடற்கரையை ஒட்டியிருந்த "சமுத்திரகம" காணிகளையும் பத்திரகாளி கோவிலுக்கு சொந்தமான காணியாகவே கொள்ளவேண்டும்.

விக்டர் ஐவன்
இது நம்தேசத்திற்காக தமிழில் :
நட்டாஷா ராஜ்குமார்

# யாழ் நூலகத்திற்கு தீ மூட்டியது யார்?

இந்நாட்டில் வாழ்ந்த கல்விகற்ற தமிழர்களினால் தங்கள் எதிர்கால தலைமுறையினரிற்காக சேமித்து வைத்த விலைமதிக்க இயலாத வரலாற்று சிறப்



புமிக்க யாழ்நூலகத்திற்கு தீ மூட்டப்பட்டதன் 33 ஆண்டு கால சோக நினைவு நாளை கடந்த ஆனி மாதம் 1ம் நாள் அனுஷ்டித்தோம். ஆடி கலவரத்திற்கு முன்னர் சிங்கள - தமிழ் மக்களிடையே காணப்பட்ட உள்ளார்ந்த வேற்றுமை உணர்வினை மேலும் அதிகரிக்க பயங்கரமான சம்பவமொன்று காரணமாக அமைந்தது என்பதனை நாம் அறிவோம். தீ மூட்டப்படும் வரையில் அந்நூலகத்தில் வரலாற்று ஓலைச்சுவடிகள் உள்ளடங்கலாக 90,000 நூல்கள் காணப்பட்டன.

ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலர் கொல்லப்பட்டதன் பின்னர் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வெற்றிகரமான முடிவினை பெற்றுக்கொள்வதற்காக மேலதிக பொலிஸ் அதிகாரத்துடன் கூடிய பெருமளவு சண்டியர்களும் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இறுதிப் பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்ற இடத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் அதிகாரிகள் தீவிரவாதிகளினால் படுகொலை செய்யப்பட்டமையினால் யாழ்ப்பாணத்தில் கலவரம் மூண்டது. அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அப்பகுதியிலிருந்த கடைகளிற்கு தீ மூட்டினார்கள். அன்றிரவு நகரில் தீ மூட்டப்பட்ட இடங்களுள் ஒன்றாக யாழ் நூலகமும் இருந்தது.

இது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட நாசகார வேலையாகவே பெரும்பாலான யாழ் மக்களினால் கருதப்பட்டது. இவ் அசம்பாவிதம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பிலிருந்தும் விசேட குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டதாக கூறப்பட்டது என்றபோதிலும் அவ்விசாரணைகள் அறிக்கைகள் தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை.

உத்தியோகபூர்வமற்ற முறையில் ஒரு சில உயர் இடங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல்களிற்கேற்ப அங்கே சேவையிலிருந்த பிரதான பொலிஸ் அதிகாரியான ஹெட்வட் குணவர்தன மீதே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அரசாங்கம் ஹெட்வட் குணவர்தன அவர்களை தேர்தல்காலத்தின் பொழுது அதிகரித்துக் காணப்பட்ட தீவிரவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காகும். அதுவரையில் மக்களின் கௌரவத்திற்கு பாத்திரமான உபபொலிஸ் அதிகாரி யாழ்ப்பாணத்தில் இருந்தார். ஹெட்வட் குணவர்தன அவரிற்கும் மேலதிகாரியாக செயற்பட்டார்.

கொழும்பு மலர் ஒழுங்கையில் இல.08 எனும் முகவரியில் 1985ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒன்றித்த கட்டளையிடும் தலைமையகத்தின் பிரதான அதிகாரியாக சேவையாற்றிய மேஜர்.ஜெனரல்.திஸ்ஸ இந்திக்க வீரதுங்கவின் (ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் நெருங்கிய உறவினர்) உதவியாளராக செயற்பட்ட ஒரு நபரின் மூலமாக நான் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் யாழ்நூலகத்திற்கு தீ மூட்டியமை தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்களின் பொழுது ஹெட்வட் குணவர்தன அவர்களே நூலக தீமூட்டல் அசம்பாவிதத்தின் பின்னணியில் இருந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ரணசிங்க பிறேமதாச ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் தற்போதைய தி

**அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அப்பகுதியிலிருந்த கடைகளிற்கு தீ மூட்டினார்கள். அன்றிரவு நகரில் தீ மூட்டப்பட்ட இடங்களுள் ஒன்றாக யாழ் நூலகமும் இருந்தது.**



ஜலண்ட் பத்திரிகையின் ஆசிரியராக பணிபுரியும் மணிக் த சில்வா உள்ளடங்கலாக ஒரு சில ஊடகவியலாளர்கள் ஓய்வு பெற்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் நடாத்திய கலந்துரையாடலில் யாழ் நூலக எரியூட்டல் தொடர்பாக மணிக் த சில்வாவால் எழுப்பப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் வகையில் ஜே.ஆர்.ஜயவர்தன மணிக் த சில்வாவை நோக்கி திரும்பி யாழ் நூலக தீ மூட்டல் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய நபர் தற்பொழுது உங்கள் பத்திரிகையில் தான் பணிபுரிகின்றார் எனக்கூறியுள்ளார். அக்காலக்கட்டத்தில் மணிக் த சில்வா லேக் ஹவுஸ் நிறுவனத்திலேயே உயரிய பதவியொன்றை வகித்தார்.

இதில் ஆச்சரியத்திற்குரிய காரணியாதெனில் இவ் அசம்பாவிதம் நிகழ்ந்து 32 ஆண்டுகளிற்கு பின்னர் "யாழ் நூலகத்திற்கு தீ மூட்டியது யார்?" எனும் தலைப்பில் ஆங்கில மொழி மூலமாக ஓர் நூல் வெளியிடப்பட்டது. அந் நூலின் எழுத்தாளர் ஹெட்வட் குணவர்தன அவர்களாவார். அந்நூலினை வாங்க வேண்டுமென்ற ஆசை என்னுள் இருந்த போதிலும் ஏதோ காரணங்களினால் இது வரை என்னால் அந்நூலை விலை கொடுத்து வாங்க இயலவில்லை. எது எவ்வாறாயினும் புத்தகம் தொடர்பிலான நீண்ட விமர்சனங்களை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. ஹெட்வட் குணவர்தன தன்னுடைய புத்தகத்தில் யாழ் நூலக எரியூட்டலை ஒரு தாக்குதலாகவே விபரித்துள்ளார். புத்தக வெளியீட்டு விழாவின் பொழுது பிரதான பேச்சாளர்களாக கலாநிதி. காலோ பொன்சேகா மற்றும் குணதாச அமரசேகர ஆகியோரே இருந்தார்கள்.

இப்புத்தகம் வெளியிடப்பட்டு ஒரு சில ஆண்டுகளின் பின்னர் ஓய்வு பெற்ற மற்றுமொரு பொலிஸ் அதிகாரியான டெசி செனவிரத்ன நூலக எரியூட்டல் தொடர்பாக தான் கேட்ட தகவல்களின் அடிப்படையில் கடந்த ஆனி 1ம் நாள் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரை வரைந்திருந்தார். அவர் அக்கட்டுரையில் யாழ் நூலகத்தை தீ மூட்டியமை தாக்குதல் என கூறும் ஹெட்வட் குணவர்தனவின் நிலைப்பாட்டை பொய்யென நிரூபித்திருந்தார். அவர் அங்கே தன்னிடம் பணிபுரிந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் யாழ் நூல்நிலையத்தின் முன்கதவுடன் உள்ள நிலத்தில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டியது தானென பிற்காலத்தில் என்னிடம் ஒப்புக்கொண்டார். அதுவரையில் தான்புரிந்த குற்றச்செயல் தொடர்பில் அவ்வுத்தியோகத்தர் மன உளைச்சலிற்கு உள்ளாகியிருந்தார் என எழுதியிருந்தார். பொலிஸ் சார்ஜன்ட் தன்னுடைய சுய தேவைக்காகவோ அல்லது வேறொருவரின் தேவைக்க.கவோ இச்செயலை செய்தார் என்பது பற்றி தெளிவாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட வில்லையாயினும் அப்பொலிஸ் சார்ஜன்ட் தான் அறிந்த பிறிதொரு உபபொலிஸ் அதிகாரியிடம் இத் தீ மூட்டல் தொடர்பாக தான் அறிந்த முழுமையான தகவல்களை வழங்கியுள்ளார். அத்துடன் அச்செயற்பாட்டிற்காக கட்டளையிட்ட நபர் பற்றி



யும் குறிப்பிட்டுள்ளார் என டெசி செனவிரத்னவின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அச்செயலிற்காக கட்டளையிட்ட நபர் யாரென அதில் குறிப்பிடப்படவில்லை.

டெசி செனவிரத்னவின் அக்கடிதத்தில் பிரசுரிக்கப்பட்டு ஒரு சில தினங்களின் பின்னர் நான் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. நான் கடிதம் தொடர்பாக அவருடன் உரையாடிய பொழுது சார்ஜனின் முழு கதையையும் அவர் என்னிடம் கூறினார். யாழ்நூலகம் யாழ் பொலிஸ்நிலையத்திற்கு அருகிலே அமைந்துள்ளது. நூலகத்திற்கு தீ மூட்டிவிட்டு பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிய பின்னர் பொலிஸ் நிலையத்தின் உள்ளிருந்த ஒருவரிற்கு பத்திரிகையொன்றினை வாசிக்கும் அளவிற்கு ஒளிப்பிளம்புகள் மேல் எழுந்ததாக கூறியிருந்தார். அவர் அக்கதையை டெசி செனவிரத்னவிடம் கூறிய பின்னர் வேறொரு சந்தர்ப்பத்தில் அச்சார்ஜன் மேலும் தெளிவாக தாம் அறிந்த ஓய்வு பெற்ற அலுவலர் கூறியிருப்பதாகவும் அவ் உப பொலிஸ் அதிகாரி தன்னிடம் அதை கூறியதாகவும் தெரிவித்தார். அவரின் கூற்றிற்கிணங்க தீ மூட்டலிற்கு யார் கட்டளையிட்டார்கள் என நான் வினவிய பொழுது "ஹெட்வட் குணவர்தன" என அவர் பதிலளித்தார்.

டெசி செனவிரத்னவிடமிருந்து இத்தகவலை அறிந்துகொண்டதன் பின்னர் நான் பிறிதொரு நாளில் ஹெட்வட் குணவர்தனவின் பின்னணியினை அறிந்து கொள்ளும் நோக்கில் நான் அறிந்த ஓய்வுபெற்ற உபபொலிஸ் அதிகாரியிடம் பேசினேன். அவரிடமிருந்து பல தகவல்கள் அறியக்கிடைத்த போதிலும் அதிலும் விசேடமாக ஹெட்வட் குணவர்தன தொடர்பில் அவர் முன்வைத்த முக்கிய காரணியொன்றும் இருந்தது. அதாவது அவருடைய கருத்துப்படி ஹெட்வட் குணவர்தன அக்காலத்தில் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட சாஸ்திரவியலில் உயர் தகைமையுடையோரில் ஒருவராவார். இறுதியாக கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த காண்பதற்கரிய ஓலைச் சுவடிகள் மற்றும் 90,000 புத்தகங் களை உள்ளடக்கிய நூலகத்தை தீ மூட்டு வதற்கு ஒரு கல்வியலாளர் கட்டளை யிட்டுள்ளார்.

நன்றி - ராவய

# நூல் அறிமுகம்

## மயானகாண்டம்- பிந்திய பதிப்பு




**வெளியீடு- ஆகாயம் பதிப்பகம், உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்**
**தொகுப்பு- சித்தாந்தன், தானாவிஸ்ணு, யாத்திரிகன்.**
**விலை- ரூபா 150**

மயானகாண்டம் - பிந்திய பதிப்பு ஆகாயம் பதிப்பகத்தின், மூலம் ஈழத்து நான்கு கவிஞர்களின் கவிதைகள் அடங்கலாக வெளிவந்திருக்கின்றன.

தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற ஆயுதமுனை போராட்டம் ஓய்ந்திருக்கின்றது. இன்றும் அதனுடைய நினைவுகள் எம்மால் மூழ்கிப் போயிருக்கின்றது. இதனால் கடந்த காலத்து அனுபவங்களை தமக்குள் சுமந்து திரிந்தவர்கள் இன்று பேனா முனையின் ஊடாக வெளிக்கொணரத் தொடங்கியிருக்கின்றனர். யுத்தத்திற்கு பின் வெளிவருகின்ற அநேகமான படைப்புக்களில் இந்த மையநிலைச் சிதைவின் கூறுகள் வெளிப்படுகின்றன.

இந்த தொகுப்பினுள் இருக்கின்ற கவிதைகள் உள் - புற நிலைப்பார்வையின் அனுபவங்கள் அதாவது இறுதி யுத்தத்தின் வலயத்துக்குள் வாழ்ந்தவர்களின் அனுபவங்களாகவும் இந்த வலயத்துக்குள் வெளியில் நின்றவர்களின் அனுபவங்களாகவும் விரிகின்றன. ஆயினும் இதில் முக்கியமாக கருதப்பட வேண்டிய விடயம் இரு வழி அனுபவங்களும் யுத்தத்தின் விளைவுகளே. இரு நிலைப்பட்ட அனுபவங்களின் வழி யுத்தத்தின் வலிகளில் மையங்கொள்கின்றன.

இந்த இரு நிலை அனுபவங்களையும் ஒருங்கே வெளிப்படுத்தும் முயற்சியாக இந்தத் தொகுப்பு அமைந்திருக்கின்றது. இந்த தொகுப்பின் மூலம் கிரிஷாந், பிரியாந்தி, கிருபா, லிங்கேஸ் ஆகிய நான்கு கவிஞர்களிடத்திலும் கவிதைக்கான நம்பிக்கைகள் துலக்கமாகத் தெரிகின்றன.

இத் தொகுப்பினுள்ளே நான்கு கவிஞர்களின் கவிதைகளும் பாகுபடுத்தியே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் கிரிசாந்தின் " என் தந்தையின் வீடு, காடுகளும் நிறங்களும், தடைசெய்யப்பட்ட புத்தகம், நானொரு துயரம் நானொரு வாழ்வு, பால்யம், பிரிவெனும் முடிவிலாத்திரைகள், மூன்று அரசமிலைகள், வழி தொடருதல் ஆகிய கவிதைகளும் பிரியாந்தியின் கவிதைகளாக அநாமிகா (கடவுளால் கைவிடப்பட்டவள்). ஆயிரமாவது இரவும் அடுத்து வந்த பகலும், இரவு, என் சாமீதான பாடல், துக்க உற்பத்தி மற்றும் துக்க நிவாரணம், நிச்சலனம், நிர்வாணம், நடந்த தடம், பிரார்த்தனைகளற்ற வெளி, மயான காண்டம் - பிந்திய பதிப்பு ஆகிய கவிதைகளும் அத்தோடு கிருபாவின் கவிதைகளாக பொய்களால் வனையப்பட்ட ஆசனம், புன்னகைப்பதால் அணியப்பட்ட முகமூடி, காலத்தின் செதுக்கல், வேரறுப்புச் செய்யும் கிளைகள், சட்டத்தினுள் சிறைப்பட்ட புன்னகை, ஆகிய கவிதைகளும் லிங்கேஸின் கவிதைகளாக பீத்தல் குடை, புதைந்து விட்ட எச்சங்கள், புதர் புகுந்த தேசம், வனைந்தவனே சிதைக்கின்றான், போக்கிடமற்ற கால்கள், போனவைகளைக் கேள், எங்களுடைய அலை மாத்திரம், சாட்சிகளாய் ஆகிய கவிதைகள் இவ்வாறான தலைப்புக்களோடு வெளிவந்திருக்கின்றன.

இந்த நான்கு கவிஞர்களின் கவிதைகளும் யுத்தத்தின் சாட்சியத்தை கண்முன்னே கொண்டு வந்து நிற்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

"ஒற்றைத் திவலையில் முழ்கி மறைந்த
பெரு நகர் ஒன்றிலிருந்து
புதைந்தழிந்த யுகம் ஒன்றை
எடுத்து வந்திருந்தாள்
அநாமிகா
கறுத்தடர்ந்த காடுகளை
சவக்குழியின் பிடி மண்ணை
காயங்களின் ஆழங்களில் நிரவித் தழும்பிய ஓலங்களை
சாவின் கால் பற்றி வீழ்ந்தரற்றிய துயர் மொழியை
மாண்ட மகவின் பிணங்கிடந்த துணியொன்றை
குருவிச்சங் கிளையிரண்டை
எடுத்து வந்திருந்தாள்..."

(பிரியாந்தி கவிதைகள், அநாமிகா- கடவுளால் கைவிடப்பட்டவள்)

T.J.தமிழ்

# பெரட்டுக்களம் காலாண்டு சஞ்சிகை

**வெளியீடு மலையக சமூக ஆய்வு மையம்.**
**விலை-30ரூபா**




மலையக சமூக ஆய்வு மையத்தின் காலாண்டு சஞ்சிகையான பெரட்டுக் களத்தின் நான்காவது இதழ் இப்போது வெளிவந்துள்ளது. 20 பக்கங்களைக் கொண்ட சிறிய சஞ்சிகையாக இருந்தாலும் கனதியான இதழாக வெளிவந்திருக்கின்றது. மலையகத் தேசியத்திற்கு புலமைப் பின்பலத்தைக் கொடுப்பதே சஞ்சிகையின் நோக்கமாக உள்ளது.

அட்டைப்படம் மலையக மக்களின் வீடு ஒன்றினைத்தாங்கி வந்திருக்கின்றது. அவ் வீட்டின் கூரையில் காற்றில் பறக்காத படி பாரங்கள் போடப்பட்டுள்ளன. " கூடை சுமப்பவர்களின் கூரையும் பாரம் சுமக்கும் நிலை" என அட்டைப்படத்தின் தலைப்பு கூறுகின்றது.

ஆசிரியர் தலையங்கத்தில் மலையகத்தில் அரசியல் கருத்தடையா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. புதிய அரசியல் சக்திகள் எழுச்சியடைவதை மரபு ரீதியான தொழிற்சங்க அரசியல்வாதிகள் அனுமதிப்பதில்லை என்பதன் குறியீடாகவே இந்த கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மலையகத்தில் மேதினம் கொச்சைப்படுத்தப்படுவதும் ஆசிரியர் தலையங்கத்தில் விமர்சிக்கப்படுகின்றது.

இதழின் முக்கிய கட்டுரையாக வோல்டர் டெரியின் "மலையகத்தேசியம் சிதைக்கப்படும் அடிப்படை பொருளாதாரம்" என்பது வெளிவந்திருக்கின்றது. இங்கு வோல்டர் டெரி என்பவர் மலையக மக்களுக்காக சேவை செய்த ஒரு வெள்ளைக்கார துரை. கட்டுரையாளர் அவரது பெயரினையே தனது புனை பெயராக பயன்படுத்தியிருக்கின்றார்.

கட்டுரையில் மலையக மக்களின் அடிப்படைப் பொருளாதாரம் பெருந்தோட்டத்துறை பொருளாதாரமே என்றும் மலையகத்தேசிய இனத்தின் இருப்பிற்கு ஆதாரமாக அதுவே உள்ளது என்றும் கூறுகின்றது.

இந்த அடிப்படைப் பொருளாதாரம் இன்று காணிப்பகிர்வு, குடியேற்றம், பராமரிப்பின்மை, கிராம மயப்படுத்தல், காடாக விட விட்டு பின்னர் சிங்களவர்களுக்கு பிரித்துக் கொடுத்தல், மீள் நடுகை இல்லாமை, மாற்றுப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு, சிறுதேயிலை உற்பத்தியாளரின் வளர்ச்சி என்பவற்றின் மூலம் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றது. இப் பொருளாதாரத்தை எப்படியாவது பாதுகாக்க வேண்டும் என்பதும் வற்புறுத்தப்படுகிறது.

இதை விட மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசேப்பின் "சிலுவை" என்ற சிறு கதையும் மலையகத் தியாகிகளான கொம்பாடி, பொன்னையா என்பவர்கள் பற்றிய குறிப்புக்களும் அகஸ்டா, முத்தையா, மலைப்பிள்ளை, ரூத், ஜெயா, வள்ளி, தேவன், மலைத்தம்பி என்போரின் கவிதைகளும் வெளிவந்திருக்கின்றன.

மலையக தேசிய இன விவகாரத்தில் அக்கறை கொண்ட அனைவரும் வாசிக்க வேண்டிய கனதியான சஞ்சிகை. மலையக சமூக ஆய்வு மையத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

**சி.அ.யோதிலிங்கம்**

### மறக்க...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்திருக்கிறது எச் மண்டபம். இம் மண்டபத்தில் கொல்லப்பட்ட இளைஞர்களின் உடல்களையும் அரைகுறை உயிருடன் இருந்த இளைஞர்களின் உடல்களையும் இழுத்து வந்து புத்தர் சிலையடியில் குவிப்பதை எச் மண்டபத்தின் இரண்டாவது மாடியில் இருந்து ஜன்னல் வழியாக ஜெயக்கொடி பார்த்து கொண்டிருந்தார். குட்டிமணியின் உடல் இழுத்து வரப்பட்ட போது அவரின் உடலில் அசைவுகள் இருந்ததென்றும் அப்போது அவர் அரை உயிருடன் இருந்ததாகவும் ஜெயக்கொடி கூறுகிறார். புத்தர் சிலையடியில் கொண்டு வந்து போடப்பட்ட கண்கள் இரண்டும் கூரிய ஆயுதம் கொண்டு தோண்டியெடுக்கப்பட்டபோது சிங்கள கைதிகள் கைதட்டி ஆர்ப்பரித்தனர். இன்னொரு வெறியன் குட்டி மணியின் ஆண்குறியை வெட்டி வீசினான். ஏனைய கைதிகள் அவரின் உடலை குத்தி கிழித்தனர். சுமார் பதினைந்துக்கு மேற்பட்ட கைதிகள் குட்டி மணியின் இரத்தத்தை தமது உடலில் பூசிக் கும்மாளமடித்தனர். ஏனைய தமிழ் இளைஞர்களின் தலைகள் கைகள் கால்கள் என வெட்டிப் புத்தர்சிலையடியில் குவித்தனர் என்பன போன்ற தகவல்களை ஜெயக்கொடி கூறினார்.

இக்கொலைகள் நடந்து கொண்டிருந்த போது சிறைச்சாலைச் சமையல் கூடத்தின் ஒரு ஒதுக்குபுறத்தில் மறைந்திருந்த மயில்வாகனம் என்னும் 16 வயதுச் சிறுவன் ஜெயிலர் சுமித ரத்னவால் தலைமயிரில் பிடித்து இழுத்து வரப்பட்டு கத்தியால் அவன் தலை சீவப்பட்டு கொல்லபட்டான். வெலிக்கடை சிறையின் பி3 பிரிவிலும் டி3 பிரிவிலும் இருந்த 35 பேர் 1983 யூலை 25ம் திகதி கொல்லப்பட்டனர்.

அன்றிரவு இக் கொலைகளை நடத்திய கைதிகள் விசேட மண்டபத்தில் தங்கவிடப்பட்டு மது வகைகளும் உணவு வகைகளும் வெளியே இருந்து வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு கொடுக்கப்பட்டு அவர்களை தட்டிக்கொடுத்தது சிறை நிர்வாகம்.

இலங்கையிலேயே மிகப்பெரிய சிறைச்சாலை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையாகும். கண்டி போகம்பர சிறைச்சாலையை விட பன்மடங்கு பிரமாண்டமானதும் சிறந்த பாதுகாப்பு கொண்டதும் இச் சிறைச்சாலை. இதன் வாசலில் சிறைச்சாலை அத்தியட்சகரின் அலுவலக வீடு உள்ளது. இச் சிறைச்சாலையின் வெளிவாசலுக்கு வலது பக்கம் பெண்கள் சிறையுண்டு அதற்கு பின்பக்கத்தில் சிறைச்சாலை கமிசனரின் அலுவலகம் உண்டு. அதன் பின் பக்கத்தில் அமைந்திருந்தது கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை உத்தியோகத்தவர்கள் காவலர்களின் வீடுகள் உண்டு. சிறைச்சாலைக்கு அண்மையில் பொறளை பொலிஸ் நிலையம் உண்டு. இவைகளுடன் சிறைச்சாலை வாசலில் இராணுவப் பாதுகாப்பு இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைந்திருக்கும் ஒரு சிறைச்சாலைக்குள் இவ்வளவு பெரிய கொலைகள் நடந்தது என்றால் இது அரசின் ஆசீர்வாதத்துடன் உயர் அதிகாரிகளின் ஆதரவுடன் அல்லது மௌனத்துடன் நடந்த கொலைகள் தான் என்பது பெரியதொரு புதிரில்லை.

முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்டு ஒரு நாள் கழிந்து 1983ம் ஆண்டு யூலை மாதம் 27ம் திகதி அடுத்த கொலைகள் நிறைவேறின. அதில் காந்தியம் நிறுவனர் டாக்டர் இராஜசுந்தரம் உட்பட 18 பேர் கொல்லப்பட்டனர்.

# இனம் படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தோர் எமது படத்திற்கு ஆதரவு தராதது ஏன்?

## அமைதிக்காக படத்தயாரிப்பாளர்களுடன் ஒரு சந்திப்பு

*நேர்கண்டவர் – கதிரவன்*

அமைதிக்காக.... - இலங்கையில் புத்த பெருமானின் பெயரால் தமிழ் மக்கள் எவ்வாறு இனப்படுகொலை செய்யப்படு கிறார்கள், ஈழத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் மேற்கொண்ட படு கொலைகள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் போன்றவற்றை பேசுபொருளாகக் கொண்ட படம்.

பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட இத்திரைப்படம் சிறந்த வெளிநாட்டுக்கான திரைப்பட விருதையும் சிறந்த திரைப்படத்துக்கான விருதையும் பெற்றிருந்தது. அத்துடன் இந்தியா ருடே, பிபிசி மற்றும் கார்டியன் போன்ற சர்வதேச ஊடகங்களின் பாராட்டையும் இத்திரைப் படம் பெற்றிருந்தது.

ஈழவிடுதலைப் போராட்டம் தொடர்பில் புன்னகை மன்னனில் இருந்து அண் மையில் இனம் வரை பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

இவற்றுள் சில திரைப்படங்களில் ஈழ விடுதலைப் போராட்டம் கொச்சைப்படுத் தப்படுவதாக தெரிவிக்கப்பட்டு தமிழின உணர்வாளர்களால் பலத்த எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர்களில் சாய் கேரளாவையும் தாஸ் ஈழத்தையும் பிறப்பிடமாகக் கொண்ட வர்கள். இவர்கள் தற்போது லண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

**ஈழவிடுதலைப் போராட்டத்தை மையப் படுத்தி இத்தகையதொரு திரைப்படத்தை தயாரிக்கவேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு எப்படி வந்தது?**

**தாஸ்:** இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களை எப்படி அடக்கி ஒடுக்கி திட்டமிட்ட முறையில் அழித்து வருகின்றன என்பதை நான் அனுபவ ரீதியாக அறிந்தவன். இவைகள் பற்றி நண்பர் சாய்க்கு நான் எடுத்துச் சொன்னேன். இவ்விடயங்கள் அவரில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் ஏற்கனவே திரைப்பட பின்னணியைக் கொண்ட சாய் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சனைகளை வெளி யில் கொண்டுவரும் வகையில் ஒரு திரைப்படத்தை தயாரிப்போம் எனக் கூறி னார். இவ்வாறு தான் எமது இந்த முயற்சி ஆரம்பமானது.

இத்திரைப்படத்தின் கதையைத் தயா ரித்து மலையாள இயக்குனர் Rajesh Touchriver ஐச் சந்தித்து இத்திரைப்படத்தை இயக்கித் தரும்படி கேட்டிருந்தோம். அவ ரும் இணக்கம் தெரிவிக்கவே இத்திரை க்கதையை மேலும் விரிவுபடுத்தி ஈழத்து மக்கள் பலரைச் சந்தித்து பல ஆதார ங்களை திரட்டி திரைப்பிரதியை தயாரித்து படம் எடுப்பதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டோம்.

**இத்திரைப்படத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதி தொடர் பில் உள்ளடக்கியமைக்கு காரணம் என்ன?**

**சாய்:** ஆம்! நாங்கள் இந்தப் படத்தை எடுக்கமுற்பட்ட காலப்பகுதி இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் இருந்து இந்தியா திரும்பிவிட்டனர். அதே வேளை இந்தியப் படையினர் ஈழத்தில் இருந்த காலத்தில் மேற்கொண்ட படு கொலைகள் சித்திரவதைகள் மற்றும் பாலி யல் வன்முறைகள் தொடர்பில் தாஸின் குடும்பத்தினர் உறவினர் மற்றும் நண் பர்கள் பலர் மிகவும் பாதிப்புற்றிருந்தனர்.

**தாஸ்** (குறுக்கிட்டு): உண்மைதான். ஈழத்தில் இந்தியப் படையினர் இருந்த காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை சித்தரிப் பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை.

**சாய்:** இந்தப் படத்தில் மூன்று விட யங்கள் தொடர்பில் பேசுவதை நாங்கள் விரும்பினோம். ஒன்று - பௌத்த மதத் தின் பெயரால் சிங்கள அரசு தமிழ் மக்களை எவ்வாறு திட்டமிட்டு அழித்து வருகிறது. இரண்டாவது - ஈழமக்களது விடுதலைப் போராட்டத்தின் நியாயம். மூன்றாவது - இந்தியப் படையினர் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள்.

இந்த மூன்று விடயத்திலும் அமைதி காக்க எனச்சென்ற இந்தியப்படையினர், தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக் காக ஒரு இந்தியனாக இருந்து நீதி கேட்கவேண்டும் என நான் உள்ளார விரும்பினேன்.

**இத்திரைப்படத்தில் சிறுவர்களை ஆயு தம் ஏந்திய போராளிகளாக சித்தரித்துள் ளீர்களே?**

**சாய்:** சரி. பிழை என்பதை காரண காரிய தொடர்புகளிலேயே வைத்து நாம் பார்க்க வேண்டும். சிறுவர்கள் ஆயுதம் ஏந்துவது சரி என நாம் இந்தப்படத்தில் சித்தரிக்கவில்லை. அவர்கள் எவ்வாறு ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதையே நாம் சித்தரித்துள்ளோம்.



அவர்கள் ஆயுதம் ஏந்தியமைக்கான காரணத்தை ஆராயாமல் வெறுமனே குற்றம் சுமத்துவது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது.

எல்லாச் சிறுவர்களும் தமது எதிர்காலம் நல்லதாக அமைய வேண்டும், தான் பெரிய ஆளாக வரவேண்டும், தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புவார்கள். ஆனால் ஈழத்துச் சிறுவர்களுக்கு... அவங்களுக்கு அப்படிக் கனவைக் காண்பதற்கு, அப்படி வாழ்வதற்கு சந்தர் ப்பம் கிடைக்கவில்லை. அந்த கனவு காணும் உரிமையும், அந்த சந்தர்ப்பமும் அவர்களுக்கு திட்டமிட்டு மறுக்கப்பட்டது. இந்தநிலையில் அவன் என்ன செய்ய யோசிப்பான். அதனை எதிர்க்கவே முயற்சிப்பான். இதுதான் அவங்களுக்கு நடந்தது.

குற்றம் சுமத்துபவர்கள் குற்றம் சுமத் தட்டும். நான் இந்தச் சிறுவர்களின் பிரதிநிதியாக நிற்க விரும்புகிறேன். இந்தக் குழந்தைகளை இப்படி ஆக்கியவர்களுக்கு எதிராக குரல் எழுப்ப விரும்புகிறேன். இந்த பச்சிளம் குழந்தைகளின் வாழ்வை அழித்தவர்களுக்கு எதிரான நீதியையே நாம் கேட்கின்றோம்.

**இந்தப் படத்தை ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் எல்லாம் திரையிட்டீர்கள். ஆனால் இந்தி யாவில் திரையிட நீங்கள் ஏன் முயற் சிக்கவில்லை?**

**சாய்:** இந்தப் படத்தை இந்தியாவில் திரையிடுவதற்காக அப்போது நாங்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், இந்திய திரைப்பட தணிக்கைக்குழு எமக்கு அனுமதி தரவில்லை. அப்போது இலங்கையில் போர் இடம்பெற்றுக் கொண் டிருந்த காலம்.

இதற்குப் பின்னரும் இந்த படத்தை இந்தியாவில் திரையிடுவதற்கான எமது முயற்சிகளை நாம் கைவிடவில்லை.

இந்தியப் படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை எனது நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதில் நான் அதிக கரிசனை கொண்டிருந்தேன்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்திய திரைப்பட தணிக்கைக் குழுவின் சான்றி தழைப் பெறுவதற்காக நாம் மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டோம்.

இதன்போது இந்தப் படத்தில் இருந்த சில காட்சிகளை நீக்கும்படி அவர்கள் எம்மிடம் கூறினார்கள்.

இந்திய திரைப்பட தணிக்கைக் குழுவி னரால் நீக்கப்படச் சொன்ன காட்சிகளில் ஒன்று இந்தியப் படையினரால் ஈழத்துப் பெண் ஒருவர் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படும் காட்சி.

இதன்போது அது உண்மையாக நடந்த சம்பவம் என எமது தரப்பில் தெரிவிக்கப்பட்ட போது, அது கொடூரமானதாக இருப்பதாக இந்திய திரைப்பட தணிக்கைக் குழுவினர் தெரிவித்தனர். இந்தக் கொடுமையைத் தானே நம்மவங்க ஈழத்தில் செய்திருக் கிறார்கள்.

எனினும் இந்தப் படத்தை இந்தியாவில் திரையிட வேண்டும் என்பதற்காக நாம் அவர்களின் கோரிக்கைக்கு உட்பட்டு குறித்த காட்சிகளை நீக்கிய பின்னர், எமக்கு இந்திய திரைப்பட தணிக்கைக் குழுவினரால் அனுமதி வழங்கப்பட்டது.

> **இந்தப் படத்தில் மூன்று விட யங்கள் தொடர்பில் பேசுவதை நாங்கள் விரும்பினோம். ஒன்று - பௌத்த மதத்தின் பெயரால் சிங்கள அரசு தமிழ் மக்களை எவ்வாறு திட்டமிட்டு அழித்து வருகிறது. இரண்டாவது - ஈழமக்களது விடுதலைப் போரா ட்டத்தின் நியாயம். மூன்றாவது - இந்தியப் படையினர் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள்.**

**பின்னர்...?**

**தாஸ்:** இந்தியாவில் திரையிடுவதற்காக இந்தப் படத்துக்கு அழகாக இசையமைத்த ராஜாமணி, ரவிக்கை சுவாமி ஆகியோர் ஊடாக மேற்கொண்டிருந்தோம்.

இந்த இடத்தில் எமது தரப்பில் ஒரு பிரச்சனையும் இருந்தது. இந்தியாவில் இத்திரைப்படத்துக்கு விளம்பரம் செய்து திரையிடுவதற்கான நிதிப்பலம் எம்மிடம் இருக்கவில்லை. இதனால் இந்திய பட வெளியீட்டாளர்களை நாடி அவர்களுக்கு இந்த திரைப்படத்தின் பிறிவியூவை போட் டுக் காட்டி இத்திரைப்படத்தை வெளியிட உதவி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தோம்.

இந்த பிறிவியூவின் போது தமிழக முன்னணி அரசியல்வாதிகள், திரைப் பட மூத்தநடிகர்கள், முன்னணி இயக்கு னர்கள், எழுத்தாளர்கள், தமிழ் திரைப்பட வெளியீட்டாளர்கள் மற்றும் ஊடகவிய லாளர்கள் என பலரும் வந்திருந்தனர்.

படம் முடிந்ததும் எல்லோரும் அமை தியாக வெளியில் வந்தனர். ஒரு மூத்த நடிகர் சுவரில் சாய்ந்திருந்தபடி விம்மி விம்மி அழுததைக் கண்டோம். கேரளாக்காரனுக்கு வந்த உணர்வு ஒரு தமிழ்நாட்டுக்காரனுக்கு வரவில்லையே என தற்போதைய முன்னணி இயக்குனர் ஒருவர் சொன்னதைக் கேட்டோம்.


**சாய்** (குறுக்கிட்டு): நான் ஒன்றைச் சொல்லவேணும். எனக்கு ஒன்று புரியு தில்லை. மெட்ராஸ்கபே மற்றும் இனம் போன்ற திரைப்படங்களில் ஈழமக்களின் விடுதலைப் போராட்டம் கொச்சைப் படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டு தமிழ கத்தில் இருக்கின்ற தமிழின உணர் வாளர்கள் இப்படங்களுக்கு எதிர்ப்பு தெரி வித்துள்ளனர்.

ஆனால் இவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்த பலர் அன்று நாம் போட்ட பிறிவியூவுக்கு வந்து எங்களின் படத்தை பார்த்து எம்மை பாராட்டினார்கள். ஆனால் அவர்கள் எவரும் இந்தப்படத்தை எம்மோடு இணைந்து ஏதோவொரு வகையில் குறைந்தபட்சம் தமிழகத்திலாவது வெளி யிட முன்வரவில்லை என்பதுதான் எமக்கு கவலை.

# மாண்டவர் அறிவதில்லை அச்சம்

கெட்ட கனவுகளால்
தூக்கத்தில் நடப்பவரைப்போல நான் வெளியே சென்றேன்
என் தாய்நாட்டை மீண்டும் தேடத் தொடங்கினேன்
எல்லாக் கண்டங்களிலும்
நிலத்திலும் சொர்க்கத்திலும்
வேண்டிக்கொண்டேன்
வேண்டுதல்களை ஒவ்வொன்றாக முன்வைத்தேன்
பணிவுடன் மனனம் செய்து ஒப்புவிக்கிறேன்
புனித நிலத்தை என் தோள்களில் சுமந்து சென்றேன்
அகதிகளாக்கப்பட்ட தியாகிகளின் தலைமுறை
மற்றேனையோர் படுகொலைக்காகக் காத்திருக்கின்றனர்
அனைத்துத் தியாகிகளும் படுகொலைக்குட்பட்டவர்களும்
சாவினின்று உயிர்தெழுந்தாயிற்று
கல்லறையின் மேலே நினைவுக்கல்லாக நிற்கின்றன
சாவைப் போல அச்சமற்று
இறந்த குழந்தைகள்
விழித்து எழுகின்றனர்
மொட்டையடிக்கப்பட்ட தலையுடன்
பிணத்துணியால் மூடப்பட்டவர்களாக
ஓலமிட்டனர்
அப்பாவிகளின் தாய்நாடே!
நீ எங்களுக்கு ஒரு தாய்நாடா?
அல்லது
இடுகாடா?

**(ஈராக்கியக் கவிதை)**
**அப்த் அல்-லத்தீப் அதாய்மிஷ்**
**தமிழாக்கம்-பதுவை.சீனு. தமிழ்மணி**



# 52

சற்றே விலகி
நந்தி வழி விட்டது போல
வெலிக்கடையின் சிறைக்கூட
இருப்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை நடக்கும்
பகுத்தறிவு ஆளுகிற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்காலோ நடந்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ மௌனிக்கும்.

**சி.சிவசேகரம்**

# சமுதாய பார்வையில்

வர்ணம் எனும் வகைப்பாடு
வலைகளாய் பின்னப்பட்டு
வக்கிர சிந்தனையை விதைத்து
வன்முறையை தூண்டுகிறது

சாக்கடை போர்வையாய்
சாதி எனும் சாதனத்தை
சாட்டியே சாகடிக்கிறார்கள்
சாதனை படைக்க எண்ணும்
சான்றோர் மனக்கிடக்கைகளை..

**ஸ்ரீ.ஜமீலா.**
**மாதகல்**

# இணங்குவது பற்றி...

இணங்கு இணங்கென்று சொல்லுகிறாய்
இணங்கலாம்...
இணக்கம் ஒன்றும் தீயசெயல் அல்லவே!
ஆறி அமர்ந்திருந்த வீட்டிருந்து
என்னை
ஓடஓட விரட்டியதுன் பல்குழலும் 'கிபிரும்'
மாடு கன்று சுற்றமென
உயிர்ப்புநிறை வாழ்வும் இருந்ததெனக்கு...
நிலைத்து நானிருந்த நிலத்தை
வீட்டை
ஒளிசுடர்ந்த வாழ்வை –
முதலில் எனக்குத்
திருப்பித் தா!
நேற்றும் இன்றும் நீ
பீடத்திலிருக்க
நான்,
கீழே குந்தியிருப்பதான நிலையை
மாற்று என்றும்
கேட்கிறேன்...
நீயும் இணங்கிவாயேன்...
நான் இணங்குகிறேன்!

**பயணி**

சிறுகதை

# ஒரே ஒரு லுங்கி

பர்மியக்கதை

நுநுயி (இன்வா)

தமிழாக்கம் - எச் பாலசுப்ரமணியம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மீடோவின் தந்தை ஆற்றுத்தண்ணீரில் முள்வலையை விரித்தார். புளியங்கொம்புடன் சேர்த்து பின்னிய முள்வலை. இந்த வலையில் பெரிய மீன்கள் மாட்டும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் இரண்டு மூன்று நாட்கள் பொறுத்து வலையை எடுத்துப்பார்த்தால் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கான மீன்கள் தேறிவிடும். இந்த வலையை அவர் எப்பொழுதும் ஆழம் குறைந்த இடத்தில் தான் விரிப்பது வழக்கம். ஆழமான நீருக்குள் செல்ல இயலாத சிறு மீன்கள் இந்த வலையில் சிக்கும். புளியங்கொப்புடன் சேர்த்து விரித்த முள்வலைக்குள் செல்ல முயலும் மீன்கள் ஒருமுறை உள்ளே போனால் வெளியே வர முடியாது. அந்த மாதிரி பின்னப்பட்ட வலை.

கிராமத்திலுள்ள வேறு சிலர் ஆழம் குறைந்த நீரில் இருக்கும் சின்ன மீன்களை விட்டுவிட்டு ஆழமான நீரில் வாழும் பெரிய மீன்களை குறிவைப்பார்கள். அவர்கள் நீளமான கயிறுகளில் முள்வலை விரித்து ஆழமான இடத்தில் தொங்க விட்டிருப்பார்கள்.

முள்வலையை எடுத்துக்கொண்டு தந்தையின் பின்னால் மீடோவும் தங்கைகளும் குதிபோட்டுக் கொண்டு சென்றனர். தந்தை ஆழம் அதிகமாக இல்லாத இடத்தில் வலையை விரித்தார். பிறகு அதை

**மீடோ படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள். குட்டி சொன்னது சரி தான். முள்வலையை விரித்து இரண்டு நாட்களாகி விட்டன. தந்தை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். மீடோ ஆற்றை நோக்கி நடந்தாள். ஆற்று நிரைத் தழுவிக்கொண்டு வந்த குளிர்காற்று இதமாக இருந்தது. மீடோ லுங்கியை இழுத்துப் போர்த்துக் கொண்டு நடந்தாள். ஆற்றங்கரையில் ஆளரவமே இல்லை.**

ஒரு மூங்கில் கழியுடன் சேர்த்துக் கட்டினார். சின்னக்குட்டி தண்ணீரில் இறங்கி உல்லாசமாக நீந்தலானாள். நடுத்தங்கை அழுக்குப் போவதற்காக ஆற்று மணலை எடுத்து உடம்பில் பரபரவென்று தேய்க்க ஆரம்பித்தாள். அவள் தண்ணீரில் மூழ்கியும் முக்குளித்தும் மல்லாந்து நீந்தியும் மீடோவைச் சீண்டினாள். பாவம் மீடோ உடலிலிருந்து அடிக்கடி நழுவும் சிம்மீஸைத் தூக்கிப்பிடித்தவாறு நின்று கொண்டிருந்தாள். தான் அணிந்திருந்த உடைகளை கழற்றி விட்டு தண்ணீரில் ஆனந்தமாக மூழ்கிக் குளிக்க வேண்டும் என்ற ஆசை அவள் முகத்தில் தெரிந்தது. அப்போது தந்தை வலையின் மூங்கில் கழியை செங்கல்லால் அடித்து பொருத்திக்கொண்டிருந்தார்.

"அடி பெண்ணே என்ன செஞ்சுகிட்டிருக்கே...? உனக்கும் குளிக்கணுமா?" மீடோ தந்தை அணிந்திருந்த லுங்கியை கவனித்தாள். அதை உடுத்திக் கொண்டு தானே குளிக்க முடியும்? "வேண்டாமப்பா... இன்னிக்கு குளிக்கலே" என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

குளிர்ந்த காற்று வேகமாக வீசவே திடுக்கிட்டு எழுந்தாள் மீடோ. போர்த்தியிருந்த கம்பளி விலகிவிட்டிருந்தது. 3 தங்கைகளும் கம்பளிப் போர்வையை தங்கள் பக்கமாக இழுத்துக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்தார்கள். இரவின் கடைசி ஜாமம். கிழக்கே விடிவெள்ளி முளைத்துவிட்டது. மீடோ தன் லுங்கியை மெதுவாக இழுத்து அதையே போர்த்திக் கொண்டாள். கண்களை மூடிக்கொண்டாள்.



அவளுக்கு பசி எடுத்தது. வீட்டில் வேகவைப்பதற்கு எதுவும் இல்லை. புளியிலை கூட இல்லை. கொஞ்சம் போல விறகு மட்டும் இருந்தது. இன்று எரிப்பதற்காக தனியாக எடுத்து வைத்த சுள்ளிகள். இரவு மீதமான புளியிலைக்கீரையை எங்கோ வைத்ததாக ஞாபகம். எங்கே என்று நினைவுக்கு வரவில்லை. அப்போது சின்னவள் திடீரென விழித்துக் கொண்டு "ஏனக்கா.. அப்பா வலை விரிச்சாங்கள்ல.. அதைப் போய் பார்க்க வேண்டாமா?" என்றாள்.

மீடோ படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தாள். குட்டி சொன்னது சரி தான். முள்வலையை விரித்து இரண்டு நாட்களாகி விட்டன. தந்தை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். மீடோ ஆற்றை நோக்கி நடந்தாள். ஆற்று நீரைத் தழுவிக்கொண்டு வந்த குளிர்காற்று இதமாக இருந்தது. மீடோ லுங்கியை இழுத்துப் போர்த்துக் கொண்டு நடந்தாள். ஆற்றங்கரையில் ஆளரவமே இல்லை.

அவர்கள் விரித்திருந்த வலை சற்று தொலைவில் இருந்தது. தண்ணீரில் விரித்திருந்த முள்வலையை அவள் தான் தூக்கி எடுக்க வேண்டும். அவள் எதைப்பற்றியும் அஞ்சவில்லை. லுங்கியை உடலில் வரிந்து கட்டிக் கொண்டு தண்ணீரில் இறங்கி விட்டாள். முள்வலையை இரண்டு கைகளாலும் அள்ளி லாவகமாக கரையருகே வைத்தாள். கைகளை கூப்பிக் கொண்டு 'கடவுளே.. இன்று நிறைய மீன்கள் சிக்கியிருக்க வேண்டுமே' என்று வேண்டிக்கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் வலையைப் புரட்டிப் பார்த்தாள். அவள் முகம் வாடியது. வலையில் ஒரு மீன் கூட இருக்கவில்லை. ஏன் இப்படி என்று அவளுக்கு புரியவில்லை. நிராசையில் ஆழ்ந்த இவளுடைய கண்கள் அடுத்த கணமே வியப்பில் விரிந்தன. ஆழமான பகுதியில் வேறொருவரின் முள்வலை இருந்த இடத்தில் ஏதோ சலசலத்தது. வலையில் உயிருள்ளமீன் ஒன்று துள்ளிக்கொண்டிருக்க வேண்டும்! அது அப்போது தான் வந்து சிக்கியிருக்க வேண்டும்.

மீடோ இப்போது எதைப்பற்றியும் யோசிக்கவில்லை. வேகமாக நீரில் இறங்கி கயிறு ஆடிக்கொண்டிருந்த அந்தப் பகுதியை நோக்கி நீந்தினாள். அவள் நினைத்தபடியே கொழுத்த மீன் ஒன்று சிக்கியிருந்தது. அவளுடைய மகிழ்ச்சி இரட்டிப்பானது. அந்த முள்வலை யாருடையது என்றெல்லாம் அவள் சிந்திக்க விரும்பவில்லை. மூச்சை இழுத்து தம் கட்டிக் கொண்டு அந்த மீனை இரண்டு கைகளாலும் வலையிலிருந்து இழுத்தாள். அந்தப் பொல்லாத மீன் தப்பித்துக் கொள்ள போராடியது. மீடோ தன்னை சமாளித்துக் கொண்டு மீனுடன் போராடினாள். கொழுத்த அந்த மீனைப் பிடிப்பது அவள் நினைத்தது போல அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. இவ்வளவு பெரிய மீனை படகில் அமர்ந்தவாறு லாவகமாக இழுத்துவிட முடியும். ஆனால் இழுக்கிற நீரோட்டத்தில் வழுக்குகிற மீனை இழுப்பது எளிதாக இருக்கவில்லை.

மீன் இழுத்த இழுப்பில் மீடோவே ஒருமுறை தண்ணீரில் அடித்து செல்லப் பட இருந்தாள். மீடோ விடவில்லை. முழுப்பலத்தையும் பிரயோகித்து மீனை மேலே இழுக்கலானாள். இதற்கிடையில் வலைக்குச் சொந்தக்காரன் இங்கே வந்திருந்தால் தண்ணீர்க் குள்ளேயே மீடோவுக்கு வியர்த்துக் கொட்டியிருக்கும். தொடர்ந்து நடந்த போராட்டத்தில் கடைசியில் மீன் களைத்துப் போனது. கையிலிருந்து மீன் நழுவி விடக்கூடாது என்பதற்காக இரண்டு கைகளாலும் அழுத்திப் பிடித்தவாறு கரையை நோக்கி நீந்தினாள். கரையை எட்டிய போது அவளுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "அம்மாடி..." என்று கூவினாள்.

அடுத்த கணமே மீடோ பயத்துடன் அலறினாள். அப்படியே கரையில் உட்கார்ந்து விட்டாள். அவள் உடலில் சுற்றியிருந்த லுங்கி எப்போதோ நழுவி தண்ணீரில் போய்விட்டிருந்தது. மீனுடன் போராடிக்கொண்டிருந்தபோது நழுவிப் போயிருக்க வேண்டும். மீடோவின் உடல் வெடவென்று நடுங்கத் துவங்கியது. அம்மா இறக்கும் போது விட்டுச்சென்ற மூன்று லுங்கிகளில் மிஞ்சியிருந்த ஒரே ஒரு லுங்கியும் தண்ணீரில் போய்விட்டது. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. இப்போது வீட்டுக்கு எப்படிப் போவது? பொழுது விடியத் தொடங்கி விட்டது. ஜனங்கள் விழித்தெழ தொடங்கி விட்டனர். கிராமத்தின் நடுவே இருக்கிற சாலையை அவள் எப்படி கடந்து போவாள்? தரையில் அந்த கொழுத்த மீன் மூச்சை இழுத்துக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையோரமாக பறவைகள் பறந்து வந்தன. இன்னும் சற்று நேரத்தில் ஆட்கள் வரத் துவங்கி விடுவார்கள்.

(முற்றும்)

**- நன்றி எட்டுத்திக்கும்**



## வாசகர் கருத்து

இது நம்தேசம் இன்றைய உலகில் அச்சு ஊடகமான ஜனரஞ்சக பத்திரிகையாக இல்லாதபோதும் தமிழ் சமுதாயத்தின் அதன் ஆழமான அரசியல் இருப்பையும் தமிழ் சமுதாயத்தின் எதிர்கால இயங்கிகளையும் தீர்மானிக்கும் ஓர் பத்திரிகையாகும்.

தொழில் நுட்பமும் தொடர்பாடல் சாதனமும் இன்றைய நிலையில் ஆக்கிரமித்து உள்ளபோது அதன் இருபக்கத்தன்மையையும் பார்த்தாகவேண்டிய தேவை இன்றையதமிழ் சமுதாயத்தின் முக்கியமாகும். ஏராளமான மஞ்சள் பத்திரிகைகள் ஜனரஞ்சகமான பத்திரிகைகளைத் தாண்டி மனித சமுதாயத்தோடு அதன் ஒவ்வொரு அசைவிலும் உறவாடும் இன்றைய சூழலில் அரசியல் இன்றைய தேவை என்ன என்பதை மிக நுணுக்கமாகவும் அறிவு பூர்வமாகவும் விளக்கும்.

இது நம்தேசம் பத்திரிகை இதற்குமுன் வந்த சரிநிகர், ஆதவன் பத்திரிகைகளை வாசித்த வாசகர்களை நிறைவுசெய்யும் ஒரு பத்திரிகையாக இருந்தபோதும் முழுமையாக இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதன் விருப்பு வெறுப்புகளை ஆராய்வதோடு நில்லாமல் ஏனைய நாடுகளில் ஏற்படும் இன முரண்பாடுகள் அதன் தீர்வுகள் என்பவற்றையும் பிரசுரிக்குமாயின் தமிழ் சமுதாயத்திற்கு இன்னும் ஆக்கபூர்வமான விடயங்களை கொண்டுசெல்லக் கூடியதாக இருக்கும்.

இது தவிர அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட தொழிலாளிகளாகவும் ஒடுக்கப்பட்ட இனமாகவும் தொடர்ந்து அரசியல் என்ற ஆயுதத்தின் ஊடாகவும் சுரண்டப்பட்டு சிதைக்கப்படுகின்ற மலையகத்தமிழ் தேசஅரசியலையும் அதன் இருப்பையும் விளாவாரியாக விமர்சிக்கும் ஓர் நீதியான நேர்மையான உண்மைகளைச் சுமந்த பத்திரிகையாக தொடர்ந்து வெளிவருமாயின் தமிழ் மக்களினுடைய அரசியல் இருப்பில் ஓர் உன்னத பங்கை "இது நம்தேசம்" பத்திரிகை பெறும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

**முத்து கன்னதாசன்**
**பொகவந்தலாவ**

..................................

இது நம்தேசம் பத்திரிகையின் வாசகன் என்ற ரீதியில் நான் பெருமையடைகின்றேன். இருப்பினும் தங்களுடைய இப் பத்திரிகை நல்ல பல விடயங்களை தாங்கி வருவது சிறப்பிற்குரிய விடயமாகும். ஆனாலும் அரசியல் கட்டுரைகளை குறைத்தும், நீண்ட பெரிய கட்டுரைகளை சுருக்கமானதாகவும் வெளிக்கொண்டு வருவதோடு உலக விஞ்ஞான விடயங்கள் உட்பட பாமர மக்களுக்கும் உரிய முறையிலும் விளங்கிக் கொள்ளக் கூடியதன்மையிலும் கொண்டு செல்வது மிகவும் நன்று. அது தவிர தாங்கள் பிரசுரிக்கும் கவிதைப் பகுதி என்பது மிகவும் கவர்ச்சியான முறையில் மிளிரக்கூடியதாக ஆக்கங்களையும் படங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பது எனது அவாவாகும்.

**K.T.K**
**திக்ஷா**

> **வாசகராகிய உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.**
>
> **முகவரி :**
>
> **ஆசிரியர்**
> **"இது நம்தேசம்"**
> **இல-43**
> **3ம் குறுக்கு தெரு**
> **யாழ்ப்பாணம்**

## புற்றுநோய்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது வேலைத்திட்டமான சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்குவதற்கு, புலமும் தமிழ்நாடும் அதிகளவில் உதவக்கூடியதாகவிருக்கும். அவர்களினால் இது தொடர்பான மாநாடுகள், ஆய்வரங்குகள் ஒழுங்கு செய்து பிரச்சனைகளை வெளிப்படுத்தமுடியும். இதற்குத் தேவையான ஆவணங்கள் நிலத்திலிருந்துதான் அனுப்பிவைக்கப் படல் வேண்டும். ஏற்கனவே நிலப்பறிப்புத் தொடர்பான காத்திரமான மாநாடு லண்டனில் இடம்பெற்றது. இதுபோன்ற ஒழுங்குபடுத்தப்பட்ட மாநாடுகள் உலகெங்கும் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

மூன்றாவது போராட்டங்கள்ள நடாத்துவது. இதுவும் நிலத்திலிருந்துதான் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். நிலத்தில் மக்கள் அடக்குமுறைக்குட்பட்டு இருப்பதனால், போராட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பத்தில் தயக்கம் காட்டுவர் என்பது உண்மைதான். ஆனால் போராட்டம் வளரத்தொடங்கிவிட்டால் மக்கள் தாமாகவே பங்குபற்றுவர். டேவிட்கமரூன் வருகையின் போது மாவிட்டபுரப் போராட்டத்தில் மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர். அதனைக்கூட்டமைப்பு மிகமோசமாக சீரழித்தது என்பது வேறு கதை.

ஆரம்பப் போராட்டங்களுக்கு கூட்டமைப்பிலேயே போதுமான ஆட்கள் உள்ளனர். கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டாலே ஐந்நூறு பேர்வரை சேர்ந்துவிடுவர். வெளியில் செயற்படும் பொது அமைப்புக்கள் அரசு சார்பற்ற நிறுவனங்கள் என்பவையும் இணைந்து கொள்ளலாம். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசம சமாஜக் கட்சி போன்றனவும் போராட்டத்தில் பங்கு பற்றும்.

ஆனால் கூட்டமைப்பு போராட்டங்களுக்கு தயாரில்லை என்பதுதான் துரதிஷ்டவசமானது. கட்சியினர் சிரமமெடுக்கத் தயாரில்லை. கிளிநொச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் என பலர்கூட்டமைப்பில் இருந்தபோதும் பரவிப்பாஞ்சான் காணிப் பறிப்புப் போராட்டத்தை இவை எதுவுமே இல்லாத தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தான் ஒழுங்குசெய்திருந்தது. கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சிலர் மட்டும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிவிட்டுச் சென்றனர்.

அதுவும் சுமந்திரன் போன்றோர் இவ் ஆக்கிரமிப்புப் பிரச்சினையை சட்டப்பிரச்சினையாகச் சுருக்கிவிடப் பார்க்கின்றனர். நீதிமன்றத்திற்கு விடயம் போய்விட்டால் தமக்கு சிரமம் குறைந்துவிடும் என நினைக்கின்றனர். ஆனால் நீதிமன்றம் இதற்கு ஒருபோதும் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. ஏனெனில் இது ஒரு சட்டப்பிரச்சினையல்ல. மாறாக இது ஒரு அரசியல் பிரச்சினை.

நிலத்தில் போராட்டம் வலுப்பெறத் தொடங்கிவிட்டால் புலமும், தமிழகமும் கூட போராட்டங்களை முன்னெடுப்பது இலகுவாகிவிடும். இப்போது அவசியமானது வெட்டிப் பேச்சுக்களல்ல. மாறாக நடைமுறைச் செயற்பாடே.

# மீண்டுமொரு கறுப்பு யூலை தாக்குதல்

**சுனந்ததேஷப்பிரிய**
**தமிழில் - நட்டாஷா ராஜ்குமார்.**

இலங்கையின் வட- கிழக்கு பகுதியிலிருந்து வருகை தந்திருந்த ஊடகவியலாளர்களை பின்தொடர்ந்து அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலிருந்து கடந்த மாதம் பேரினவாதிகள் விரட்டியடித்தனார்.

இருபது பேர் உள்ளடங்கிய தமிழ் ஊடகவியலாளர்களிற்காக இருநாள் செயலமர்வொன்று முதன்முறையாக பொலன்னறுவையில் உள்ள கிரிதெல் டியர் பார்க் விடுதியில் சித்திரைமாதம் 22ம் நாள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இச்செயலமர்வு சாதாரண இயக்கங்களினால் ஒழுங்குச்செய்யப்படவில்லை மாறாக உலக அங்கிகாரம் பெற்ற டிரான்ஸ் பெரென்ஸி இன்டர்நெஷனல் (Transperency International) எனப்படும் ஊழலிற்கெதிரான சர்வதேச நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இச்செயலமர்வின் பிரதான நோக்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று நல்லாட்சி முறையினை ஏற்படுத்துதல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு ஊக்கமளித்தலாகும். இதன் பயிற்சியாளர்களாக உலகதரம் வாய்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் குழுவொன்று செயற்பட்டது.

செயலமர்வு ஆரம்பிக்கப்பட்டு 24 மணித்தியாலங்கள் கழிவதற்குள் தமிழ் ஊடகவியலாளர்களை விடுதியை விட்டு வெளியேற்றுமாறு விடுதி உரிமையாளரிற்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இவ்விடுதியின் உரிமையாளர் மைத்திரிபாலசிரிசேனவின் சகோதரரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி பிரதி அமைச்சருமான சிறிபா லகம்லத் அவர்களேயாவார்.

கிழக்கு மாகாண கட்டளைத்தளபதிலால் பெரேராவினால் தனக்கு இவ்வாறானதோர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக பிரதிஅமைச்சர் லங்காஹெர்ல்ட் செய்திதளத்திற்கு தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

செயலமர்வு நடைப்பெற்றால் பௌத்தபிக்குகளினால் விடுதி சுற்றி வளைக்கப்படும். என கட்டளை தளபதிலால் பெரேரா கூறியதாக பிரதியமைச்சர் கம்லத் குறிப்பிட்டார். இப்பௌத்தபிக்குகளுக்கும் படையினருக்குமிடையே நடைமுறை அரசியற்செயற் பாடுகளில் தொடர்புகள் இருந்தன.

பங்குனி 27ம் நாள் பொலன்னறுவைமாவட்டத்தில் அமைந்துள்ள பிரிதொரு விடுதியில் கிழக்குமாகாண தமிழ் ஊடகவியாலளர்களிற்காக நடைப்பெற்றுக்கொண்டிருந்த செயலமர்வில் 20ற்கும் மேற்பட்ட பௌத்தபிக்குகள் திடீரென உட்புகுந்து குழப்பம் விளைவித்தார்களென சண்டேடைம்ஸ் பத்திரிகை 29ம் நாள் செய்தி வெளியிட்டிருந்தது.

இச்செயலமர்வு சேர்ச் போகொமன் கிரவுண்ட்ஸ் (search for common grounds) எனும் அரச சார்பற்ற நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

டிரான்ஸ் பெரென்ஸி இன்டர்நெஷனல் நிறுவனம் தமது செயலமர்வு குழப்பப்பட்டமையினால் தமிழ் ஊடகவியலாளர்களை நீர்கொழும்பில் அமையப்பெற்றுள்ள கோலட் சாண்ட் (Gold Sand) விடுதியில் இடம்பெற இருந்த செயலமர்விற்கு கடந்த 6ம் திகதி அழைத்தது. மறுநாள் மாலைவேளையில் பேருந்துகளில் ஒரு கும்பல் வந்திறங்கியது. அவர்கள் இச்செயலமர்விற்கு"புலிகளா"வந்துள்ளார்கள் வெறும் டொலர்களிற்காக இது ஒழுங்குச்செய்யப்பட்டுள்ளது எனவே இதனை உடனடியாக நிறுத்த வேண்டுமென அச்சுறுத்தல் விடுத்தனர்

ஊடகவியலாளர்களை இவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு பொலிஸார் கட்டளையிட்டனர். புறப்பட்டு செல்வீர்களாயின் பாதுகாப்பு வழங்க தயாரெனவும் இல்லையேல் உங்களுடையபாதுகாப்பினை நீங்களே உறுதிச்செய்ய வேண்டுமெனவும் அச்சுறுத்தினர்.

> **இவ்விடுதியின் உரிமையாளர் மைத்திரிபாலசிரிசேனவின் சகோதரரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி பிரதி அமைச்சருமான சிறிபா லகம்லத் அவர்களேயாவார்.**

நீர்கொழும்பிலிருந்துபொலிஸ் பாதுகாப்புடன் வெளியேறியதமிழ் ஊடகவியலாளர்கள் குழுவினை கொழும்பில் அமையப்பெற்றுள்ள பிரசித்தமான கலதாரி நட்சத்திரஹோட்டலில் தங்கவைப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குகள் செய்தனர். கொழும்பு கலதாரிஹோட்டலிலும் அச்சுறுத்தல் தொடர்ந்தது. இவ்வச்சுறுத்தல் தமிழ் ஊடகவியலாளர்கள் கலதாரி ஹோட்டலிற்குள் வருகைத்தந்து ஒரு மணித்தியாலம் கழிவதற்குள் விடுக்கப்பட்டது. நடு இரவில் விடுக்கப்பட்ட அவ்வச்சுறுத்தல்களினால் தமிழ் ஊடகவியலாளர்கள் உடனடியாக நடுத்தெருவில் இறக்கப்பட்டனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பின்றி இரவை கழித்தபின்னர் மறுநாள் காலை யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டனர்.

இதேசெயலமர்வு சிங்கள ஊடகவியலாளர்களுக்காக நடாத்தப்பட்டபோது கட்டளைதளபதிகளால் எவ்வித இடையூறுகளும் விளைவிக்கப்படவில்லை.

யாழ் ஊடகவியலாளர் அமையம் தனது (Jaffna press club) அறிக்கையின் மூலமாக இதுவோர் இனத்தார் மீதான தாக்குதலெனதெளிவாக வெளிப்படுத்தியிருந்தது.

இச்சனநாயகவிரோதபலாத்காரம் தொடர்பில் எவ்விதவிசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே இச்சம்பவம் இந்நாட்டுதமிழ் மக்களிற்கு கூறமுனையும் செய்திதெளிவானதுதானே? அதாவதுதன் சிரத்திற்குதன் கைதான் நிழல் என்பதனை தவிர வேறுஎன்ன?

- நன்றி
**ராவய**

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம்




யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஆர்ப்பாட்டம்



காணாமல் போனோர் தொடர்பாக முல்லைத்தீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்



யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தால் தடை செய்யப்பட்ட "எங்கள் கதைகள்" நாடகம்



மலையக தொழிலாளர் திருவிழா டெல்மார் தோட்டம் - ராகலை

இவ்விதழ் இல.43, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் பிள்ளையார் ஒவ்செற் பிறிண்டேர்ஸ் (இல.676, பருத்துறை வீதி, நல்லூர்) இல் 01.07.2014 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.